பொழிவு - 19
குவிப்பு - 05
பக்கங்கள் - 16
விலை ரூபா 40.00
மே - 2016
(ISSN 1800-2641)
Registered as a News Paper


# மன்னா

MANNA மன்னார் மறைமாவட்டத்தின் தமிழ் கத்தோலிக்க மாதாந்தப் பத்திரிகை மன்னா
THE TAMIL CATHOLIC MONTHLY PUBLISHED BY THE DIOCESE OF MANNAR - Social Communication Center, Manna Paper Office, St.Joseph's Road, Mannar, Sri Lanka.
Telephone No : 023-2250789 / 023-3233276 / 0777420811 Fax No - 0232250789, E. Mail : nesanmnr@gmail.com.
"Registered in the Department of Posts of Sri Lanka under No. QD / 167 / News / 2016"

# 'அன்பின் மகிழ்வு'

## குடும்பம் பற்றிய திருத்தந்தையின் சுற்றுமடல்

### கிறிஸ்தவ குடும்பங்களை வழிநடத்தும் ஓர் பொக்கிஷம்!



திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் எழுதியுள்ள "Amoris laetitia" அதாவது "அன்பின் மகிழ்வு" என்ற திருத்தூது அறிவுரை மடல் கடந்த ஏப்ரல் மாதம் 8ஆம் திகதி வத்திக்கானில் வெளியிடப்பட்டது.

குடும்பங்களை மையப்படுத்தி 2014 மற்றும் 2015 ஆகிய ஆண்டுகளில் வத்திக்கானில் நடைபெற்ற உலக ஆயர்கள் சிறப்பு மாமன்ற அமர்வுகளில் கலந்து பேசப்பட்ட கருத்துக்களை உள்ளடக்கியதாக திருத்தந்தையின் இத்திருத்தூது மடல் வெளியிடப்பட்டுள்ளது. இம்மடல் கிறிஸ்தவ குடும்பங்களை வழிநடத்தும் ஓர் பொக்கிஷமாக வெளிவந்துள்ளது.

உறுதியான குடும்பங்களே நலமான சமுதாயத்தைக் கட்டியெழுப்புவை என்றும் அன்பு, மதிப்பு மற்றும் பிறரோடு உறவில் வளர்வதற்கு பிள்ளைகள் இத்தகைய குடும்பங்களிலே கற்றுக்கொள்வார்கள் என்றும் இம்மடல் கூறுகிறது.

அதேநேரம் குடும்ப வாழ்வில் எதிர்நோக்கப்படும் பல சவால்களுக்குக் காரணம் காட்டுவதையும், திருஅவையின் போதனைகளுக்கு ஏற்ப வாழாதவர்களைக் குறைகூறுவதையும் தவிர்த்து, அவர்கள்மீது அக்கறை காட்டுமாறு கத்தோலிக்கரை விண்ணப்பித்துள்ளது இம்மடல்.

(தொடர்ச்சி 14ஆம் பக்கம்)

## மருதமடுத் திருப்பதியில் இடம்பெற்ற சாளக்குடி டிவைன் தியானம்





மருதமடு திருப்பதியில் உள்ள தியான இல்லத்தில் கடந்த ஆறு ஆண்டுகளாக சாளக்குடி டிவைன் தியான நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன. ஒவ்வொரு ஆண்டிலும் பங்குபற்றும் மக்களின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே வருகிறது. இவ்வாண்டு ஏப்ரல் 12 முதல் 16ஆம் திகதிவரை இடம்பெற்ற தியானத்தில் ஆயிரத்துக்கும் அதிகமானோர் பங்கெடுத்தனர். தியானத்தின் ஆரம்ப நிகழ்வில் மடுப்பரிபாலகர் அருட்திரு. எமிலியானுஸ்பிள்ளை அடிகளார் மங்கள விளக்கேற்றுவதை படத்தில் காணலாம்.

## வத்திக்கான் வளாகத்திற்கு திடீரென வந்து ஒப்புரவு அருளடையாளம் வழங்கிய திருத்தந்தை



திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் ஏப்ரல் மாதம் 23ஆம் திகதி முற்பகல் 11.00 மணியளவில் வத்திக்கான் தூய பேதுரு வளாகத்திற்குத் திடீரென வந்து 13 வயதிற்கும் 16 வயதற்கும் உட்பட்ட 16 வளர் இளம் பருவத்தினரிடம் ஒரு மணி நேரத்திற்கு மேலாக ஒப்புரவு அருளடையாளத்தைக் கேட்டு ஆயிரக்கணக்கான அவ்வயது சிறுவர் சிறுமியரை வியப்பில் ஆழ்த்தினார்.

கடந்த 23.04.2016 அன்று வத்திக்கானிலும் உரோம் நகரிலும் மூன்று நாள் இறைஇரக்க யூபிலி விழாவைத் தொடங்கிய பல்லாயிரக்கணக்கான வளர் இளம் பருவத்தினருக்கு 150க்கும் மேற்பட்ட அருள்பணியாளர்கள் வளாகத்திலுள்ள தூண்கள் பகுதியிலும் மற்ற இடங்களிலும் படிக்கட்டுகளிலும் நாற்காலிகளிலும் அமர்ந்து ஒப்புரவு அருளடையாளத்தை நிறைவேற்றினர்.

"இறைதந்தையைப் போன்று இரக்கப் பண்பில் வளர்வதற்கு" என்ற தலைப்பில் 13 வயதுக்கும் 16 வயதுக்கும் உட்பட்ட ஏறக்குறைய எழுபதாயிரம் வளர் இளம் பருவத்தினர் வத்திக்கானிலும் உரோம் நகரிலும் தங்களின் இரக்கத்தின் யூபிலி ஆண்டு நிகழ்வுகளில் பங்கெடுத்தனர்.

## பம்பைமடுவில் புதிய ஆலய அபிசேகமும் இறையிரக்கப் பெருவிழாவும்




மன்னார் மறைமாவட்டத்தில் இறையிரக்க யூபிலி ஆண்டு சிறப்பு நிகழ்வாக பம்பைமடு பங்கின் தாய் ஆலயம் இறை இரக்க அரசருக்கு அர்ப்பணிக்கப்பட்டு அபிசேகம் செய்துவைக்கப்பட்டது.

கடந்த ஏப்ரல் மாதம் 3ஆம் திகதி பிற்பகல் 2.45 மணிக்கு பங்குத்தந்தை அருட்பணி. யே. ஜெகானந்தன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மன்னார் மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் மேதகு கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை அவர்கள் இப்புதிய ஆலயத்தை ஆசீர்வதித்து திறந்துவைத்தார். தொடர்ந்து ஆயர் தலைமையில் இறை இரக்கத் திருவிழாத் திருப்பலி இடம்பெற்றது. அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், பங்கு மக்கள், மறைமாவட்ட இறை இரக்க பக்திக்குழுக்கள். இன்னும் நாட்டின் ஏனைய பகுதி மக்கள் எனப் பலர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

(தொடர்ச்சி 14ஆம் பக்கம்)

## மன்னார் மறைமாவட்ட அன்பிய வாரம்

### மே மாதம் 15 - 22ஆம் திகதி வரை




மன்னார் மறைமாவட்டத்தில் வருடாந்தம் சிறப்பிக்கப்படும் அன்பிய வாரம் இவ்வாண்டு மே மாதம் 15ஆம் திகதி ஞாயிறு தினம் தூய ஆவியார் பெருவிழா அன்று ஆரம்பமாகி 22ஆம் திகதி ஞாயிறு தினம் மூவொரு இறைவன் பெருவிழாவோடு நிறைவுபெறுகின்றது. இந்த அன்பிய வாரத்தை அர்த்தமுள்ள முறையில் சிறப்பிக்கும்படி மன்னார் மறைமாவட்ட அன்பிய இயக்குனர் அருட்பணியாளர் ஏ. ஆரோக்கியம் அடிகளார் பங்குத்தந்தையர்கள், துறவியர் மற்றும் அன்பிய ஊக்குவிப்பாளர்களைக் கேட்டுள்ளதோடு அன்பிய வார நிகழ்வுகள் சிறப்புற தனது நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துள்ளார்.

## உலக சமூக தொடர்பாடல் தினம்

### World Social Communication Day

### 08.05.2016 ஞாயிறு



**மையக் கருத்து :** தொடர்பாடலும் இரக்கமும்: ஒரு பலன் கொடுக்கும் சந்திப்பு

உலக சமூகத் தொடர்பாடல் தினத்தை முன்னிட்டு மன்னார் மறைமாவட்ட சமூகத் தொடர்பு அருட்பணி மையம் 'கலையருவி' தொடர்பாடல்தின திருப்பலி ஆயத்தக் குறிப்புகள், சுவரொட்டிகள், திருத்தந்தையின் செய்தி ஆகியவற்றை பங்குத்தந்தையர்களுக்கு அனுப்பிவைத்துள்ளது. பங்குகள் தமக்கு வசதியான ஒரு ஞாயிற்றுக் கிழமையில் இத்தினத்தைக் கொண்டாடலாம். இச்சந்தர்ப்பத்தில் மன்னா பத்திரிகை தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும்படி அனைவரையும் அன்போடு கேட்டுக்கொள்கிறோம்.

அருட்திரு. தமிழ் நேசன், இயக்குனர், கலையருவி/ ஆசிரியர், மன்னா பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னா
## மனப்பொழிவு
### பதிப்பாசிரியர் பகர்வது

## அன்பிய வாழ்வே கிறிஸ்தவ வாழ்வு

*மன்னார் மறைமாவட்டத்தில் அன்பிய வாரம் மே மாதம் 15ஆம் திகதி ஞாயிறு தினம் தூய ஆவியார் பெருவிழாவோடு ஆரம்பமாகி, 22ஆம் திகதி ஞாயிறு தினம் மூவொரு இறைவன் பெருவிழாவோடு நிறைவுபெறுகின்றது. இந்த அன்பிய வாரத்தையொட்டி அன்பியங்கள் பற்றிய சில சிந்தனைகளை பகிர்ந்துகொள்வது பொருத்தமானதாகும்.*

### திருச்சபையின் போதனைகள்

*1988இல் திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர் தனது 'பொதுநிலையினரின் மறைத்தூது' (CL) என்னும் சுற்றுமடலில் "அன்பியங்கள் திருச்சபையின் உயிர்த்துடிப்பின் வெளிப்பாடுகள்" என்று கூறியுள்ளார்.*

*1990ஆம் ஆண்டு இந்தோனிசியாவில் 'பாங்துங்' நகரில் நடைபெற்ற 5வது ஆசியப் பேரவை, "திருச்சபை புதிய வழியில், புதிய முறையில் திருச்சபை இயல்புடையதாகத் துலங்க (A new way of being church) வேண்டும்" என்பது வலியுறுத்தப்பட்டது. 2006 நவம்பர் 8ஆம் தேதி முதல் 15ஆம் தேதிவரை நடைபெற்ற ஆசிய அன்பிய ஆயர் பேரவை (FABC)யும் "இறை மக்கள் அனைவரும் ஒன்றுகூடி வந்து இறைவார்த்தைக்குச் செவிமடுத்து, அன்றாட வாழ்வின் சிக்கல்களுக்கு விவிலிய ஒளியில் தியானித்து தீர்வுகாண அன்பியங்கள் உதவுகின்றன. தோழமை உணர்வை, கூட்டுறவை, பங்கேற்பை, பங்களிப்பை வளர்க்கும் தளமாகவும் அன்பியங்கள் உள்ளன" என்று கூறியுள்ளது.*

*ஆசியத் திருச்சபை (1999) சுற்றுமடல் எண். 25இல் "அடிப்படைக் கிறிஸ்தவ சமூகங்கள் எல்லாப் பங்குகளிலும் மறைமாவட்டங்களிலும் ஒன்றிப்பையும், பங்கேற்பையும் வளர்க்கும் வழிமுறைகளாகவும், நற்செய்தி அறிவிப்பின் சக்தியாகவும் திகழ்கின்றன...... ஆதித்திருச்சபைக் கிறிஸ்தவர்களைப்போன்று விசுவாசிகள் விசுவசிக்கவும், செபிக்கவும், அன்புச் சமூகமாக வாழவும் அன்பியங்கள் உதவிசெய்யும்" என்று திருத்தந்தை 2ஆம் அருள் சின்னப்பர் அறைகூவல் விடுத்துள்ளார்.*

*பொதுநிலையினர், துறவியர், குருகுலத்தார் அனைவரும் ஒருவரை ஒருவர் சகோதர சகோதரிகளாக ஏற்று வாழும் அன்புச் சமூகங்களின் ஒன்றியமாக திருச்சபை திகழவேண்டும் என்ற உயரிய நோக்கு திருச்சபையில் வலியுறுத்தப்படுகின்றது. அடித்தள திருச்சபைச் சமூகங்கள் (BECS), அடித்தள கிறிஸ்தவ சமூகங்கள் (BCS), சிறு கிறிஸ்தவ சமூகங்கள் (SCCS) என்று பல்வேறு பெயர்களில் உலகில் இன்று இச்சமூகங்கள் அழைக்கப்படுகின்றன. 'அன்பியம்' என்ற ஆழமான பொருளுடைய சொல்லை அடித்தளத் திருச்சபைச் சமூகங்களுக்கு வழங்கிய பெருமை இந்தியாவில் உள்ள கோட்டாறு மறைமாவட்டத்தையே சாரும்.*

### அன்பியங்களின் இன்றைய நிலை

*மன்னார் மறைமாவட்டத்தில் பல ஆண்டுகளுக்கு முன்ரே அன்பிய வாழ்வை நோக்கிய செயற்திட்டங்களும், தெளிவுறுத்தல்களும், ஊக்குவிப்புக்களும் வழங்கப்பட்டுள்ளன. ஆனால் அனைத்துப் பங்குகளும் அன்பியங்களை உருவாக்கிவிட்டதாவோ, அல்லது உருவாக்கப்பட்ட அன்பியங்கள் உயிராற்றலுடன் இயங்குவதாகவோ சொல்லமுடியாது: பங்குகளில் இயங்குநிலையில் உள்ள அன்பியங்கள்கூட மாதம் ஒருமுறை கூடும் செபக்கூட்டம், பக்திசபைக் கூட்டம் போன்றே நடைபெறுகின்றன.*

*அன்பிய வாழ்வின் முழுமையான அர்த்தத்தை, பரிமாணங்களைப் புரிந்துகொள்ளாது, அன்பிய வழிபாடுகளை நடத்திவிட்டால் அன்பியம் செயற்படுகின்றது எனக் கூறுகின்ற நிலையும் பரவலாக உள்ளது.*

### அன்பியங்களின் அவசரத் தேவை

*இன்றைய நவீன தொலைத்தொடர்பு சாதனங்கள் , சமூக வலைத்தளங்கள் மலிந்துள்ள சூழலில் சமய வாழ்வில் அலட்சியப் போக்கே காணப்படுகின்றது. எனவே நமது தலத்திருச்சபைகளை உயிரோட்டம் நிறைந்த திருச்சபைகளாகப் பேண வேண்டுமாயின் அன்பியங்கள் கட்டியெழுப்பப்பட்டு அன்பிய வாழ்வு ஆழப்படுத்தப்படவேண்டும்.*

*பொதுநிலையினர் திருச்சபையின் தவிர்க்கமுடியாத அங்கம் என்ற உணர்வை ஏற்படுத்தி, திருச்சபையின் பணிகளில் முழுமையான பங்கேற்பை ஏற்கக்கூடிய தகுதிக்கு பொதுநிலையினரை தயாரிக்கும் தளமாக அன்பியம் மாறவேண்டும். இம்முயற்சிக்கு பங்குத்தந்தையர்களின், துறவியரின் சிந்தனைத் தெளிவும், ஈடுபாடும், ஊக்குவிப்பும் இன்றியமையாதது ஆகும். முயற்சிப்போமா?*

***மீண்டும் மறுமடலில் வந்து சந்திக்கும்வரை,***
***அன்புடன் அருட்பணியாளர் தமிழ் நேசன்,***
***மன்னா பதிப்பாசிரியர்***

## துயர் பகிர்கின்றோம்

**அருட்பணி. றெஜினோல்ட் அடிகளாரின் தந்தை**

மன்னார் மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்பணியாளர் பி. றெஜினோல்ட் அடிகளாரின் அன்புத் தந்தையார் திரு. இறபாயல் பிரான்சிஸ் அவர்கள் கடந்த யூன் மாதம் 2ஆம் திகதி கனடாவில் இறைபதம் அடைந்தார். அருட்பணியாளர் றெஜினோல்ட் மற்றும் அவரது குடும்பத்தினருக்கு மன்னார் மறைமாவட்டத் திருச்சபையின் ஆழ்ந்த அனுதாபங்களை மன்னா தெரிவிக்கின்றது.

திரு. பிரான்சிஸ் அவர்கள் கனடாவில் வசித்தாலும் அடிக்கடி தாயகத்திற்கு வந்து மன்னார் மறைமாவட்ட ஆன்மீக முயற்சிகளில் தன்னை ஈடுபடுத்திவந்தார். மன்னார்த் திருச்சபை தன்னார்வ பொதுநிலைத் தலைவர் ஒருவரை இழந்துள்ளது. பங்குகளுக்கு அவர் வழங்கிய பொருளாதார, ஆன்மீக பங்களிப்புகளுக்காக மன்னார் திருச்சபை நன்றிகூறுகின்றது. அன்னாரின் ஆன்மா இறைஇரக்கத்தில் அமைதிபெறுவதாக!

**அருட்பணி. ஒல்பன் அடிகளாரின் சகோதரி**

அமதிகள் சபையைச் சார்ந்தவரும் தற்போது மன்னார் சிறிய குருமடத்தில் ஆன்மீக இயக்குனராகப் பணியாற்றுகின்றவருமான அருட்பணியாளர் ஒல்பன் இராஜசிங்கம் அடிகளாரின் அன்புச் சகோதரி அண்மையில் யாழ்ப்பாணம் குருநகரில் இறையடி சேர்ந்தார். அருட்தந்தைக்கும் அவரது குடும்பத்தினருக்கும் மன்னார் மறைமாவட்டத்தின் ஆழ்ந்த அனுதாபங்களை மன்னா தெரிவித்து நிற்கின்றது. இறையடி சேர்ந்த சகோதரி இறைவனின் நிழலில் ஆறுதல் அடைவாராக!

## மடுவலயத்தில் சிறந்த பெறுபேறு



மன்/ வட்டக்கண்டல் அ.த.க. பாடசாலையின் மாணவி

செல்வி. சங்கீதா சிலுவேஸ்திரன் க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையில் மடுவலயத்தில் சிறந்த பெறுபேற்றைப் பெற்றுள்ளார் (7A, B, S).

இவரை பாடசாலைச் சமூகம் பெருமையுடன் பாராட்டி வாழ்த்தி நிற்பதோடு ஏனைய சித்திபெற்ற மாணவர்களையும் பாராட்டி நிற்கிறது. இவர்களுக்கு கல்வி புகட்டிய எல்லா பாட ஆசிரியர்களுக்கும் நன்றியையும் பாராட்டையும் தெரிவித்து நிற்கிறது.

- பாடசாலை சமூகம்,
மன்/ வட்டக்கண்டல் அ.த.க.பா.

## பேச்சுப் போட்டியில் தேசிய ரீதியில் முதலிடம் சீன நாட்டிற்குச் சுற்றுப் பயணம்!



மன்/ புனித சவேரியார் பெண்கள் கல்லூரியைச் சேர்ந்த செல்வி. றொபேட் ஜெயசீலன் ஆன் மியூரிக்கா அவர்கள் இலங்கை - சீனா நாட்புறவுச் சங்கத்தினால் அகில இலங்கை ரீதியாக நடாத்தப்பட்ட தமிழ் மொழிமூல பேச்சுப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்று இச்சங்க அனுசரணையில் சீனாவுக்குச் சுற்றுப் பயணத்தை மேற்கொண்டு நாடுதிரும்பியுள்ளார். இவரை மன்/ புனித சவேரியார் பெண்கள் கல்லூரிச் சமூகம் வாழ்த்தி பாராட்டி இறையாசி கூறி நிற்கின்றது.

## மன்னார் மறைமாவட்டம்
## திருவழிபாட்டு நாட்காட்டி - 2016

### வைகாசி

01. தொழிலாளர்களின் பாதுகாவலர் புனித சூசையப்பர் விழா - புதுக்கமம், கற்கிடந்தகுளம், வேப்பங்குளம், அச்சங்குளம், சேமமடு, பூம்புகார், கன்னாட்டி, மானங்கவெளி.
03. திருச்சிலுவை விழா - கள்ளிகட்டைக்காடு
05. கர்த்தர் ஆலயம் - சுண்டிக்குளி
08. விண்ணேற்புத் திருவிழா - கீரி கர்த்தர் ஆலயம், உலக தொடர்பாடல் தினம்.
10. தூய செபமாலை அன்னை - பிச்சகுளம்
13. அன்னை வேளாங்கண்ணித் திருவிழா - தேத்தாவாடி, மருதங்குளம் பற்றிமா மாதா ஜீவபுரம், பற்றிமா நகர் (ஓமந்தை)
14. தூய சதாசகாய மாதா - கந்தபுரம்
15. தூய ஆவியார் பெருவிழா - அன்பிய வாரம் ஆரம்பம் - தூய ஆரோக்கிய அன்னை திருவிழா - களிமோட்டை, இரணை இலுப்பைக்குளம் புனித யூதாதேயு - ஒலிமடு
17. பற்றிமா அன்னை - மணிபுரம்
18. கடந்தகாலப் போரினால் எம் நாட்டில் இறந்த அனைவரையும் நினைவுகூரும் நாள்.
20. தூய சவேரியார் திருவிழா - செட்டியார் மகன் கட்டையடம்பன், தேவன்பிட்டி, சின்னப்பண்டிவிரிச்சான்.
20. மூவொரு இறைவன் பெருவிழா - மறைமாவட்ட அன்பிய விழா, அன்பிய வாரம் நிறைவு
21. புனித சூசையப்பர் - சேமமடு (ஓமந்தை) தூய பூண்டி அன்னை திருவிழா - எமில்நகர்
26. தூய பிலிப்பு நேரியார் விழா ஆத்திக்குழி, கொன்னையன் குடியிருப்பு, இசைமாலைத்தாழ்வு, கன்னாட்டி.
29. கிறிஸ்துவின் திருவுடல் திருஇரத்தப் பெருவிழா நற்கருணை ஆண்டவர் ஆலயம் - யோசேப்வாஸ் நகர்
30. தூய நீற்றம்மா திருவிழா - உமநகரி, தூய செபமாலை அன்னை திருவிழா - மழுவராயர் கட்டையடம்பன்
31. அன்னை வேளாங்கண்ணி - மாதிரிகிராமம், தூய இராக்கினி மாதா ஆலயம் - இராச்சேந்திர குளம், சதாசகாய மாதா பாரதிபுரம் (பம்பைமடு)

■ மாதத்தின் 2வது, 4வது சனி உபவாசத் தியானம் - தோட்டவெளி ஆன்மீக இல்லம்.

## அருட்பணி. யேசுதாஸ் அவர்களின் கவிதை நூல் வெளியீட்டு விழா



மன்னார் மறைமாவட்டம் வஞ்சியன்குளம் கிராமத்தைச் சேர்ந்தவரும், கிளரேசியன் துறவற சபையைச் சார்ந்தவருமான அருட்பணி. ச. யேசுதாஸ் (கி.ச.) அவர்களின் இரகசிய விசாரணை என்ற கவிதைத் தொகுதி வெளியீட்டு விழா கடந்த ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி மாலை 3.30 மணிக்கு மன்னார் புனித செபஸ்தியார் பேரலாலய பங்குமனை மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்விற்கு கலையருவி இயக்குனரும், மன்னா பத்திரிகையின் ஆசிரியருமான அருட்திரு. தமிழ் நேசன் அடிகளார் தலைமை தாங்கினார். பிரதம விருந்தினராக கிளரேசியன் சபையின் ஜேர்மன் மாகாணத் தலைவர் அருட்திரு. சி. வை. பி. கலிஸ்ரஸ் (கி.ச.) அவர்களும், சிறப்பு விருந்தினராக மன்னார் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்திரு. ஏ. விக்ரர் சோசை அவர்களும், கௌரவ விருந்தினராக கிளரீசியன் சபையின் இலங்கைப் பிராந்தியத் தலைவர் அருட்திரு. ரி. எல். றொகான் டொமினிக் (கி.ச.) அவர்களும் கலந்துகொண்டனர்.

நிகழ்வின் வரவேற்புரையை அருட்திரு. எஸ். சதீஸ் (கி.ச.) அவர்களும், வெளியீட்டு உரையை அருட்திரு. எஸ். நிர்மலன் (கி.ச.) அவர்களும் வழங்கினர். நூலுக்கான நயப்புரையை ஆசிரியர் பரா ரதீஸ் (யாழ்ப்பாணம்) அவர்கள் வழங்கினார். நன்றியுரையையும் ஏற்புரையையும் நூலாசிரியர் அருட்திரு. ச. யேசுதாஸ் (கி.ச.) அவர்கள் வழங்கினார். இந்நூல் பற்றிய விரிவான கண்ணோட்டம் 11ஆம் பக்கத்தில் இடம்பெற்றுள்ளது.

## உண்மை உறைக்கும் கமிலஸ்




## ஆக்கங்களை எதிர்பார்க்கின்றோம்

காலத்திற்குப் பொருத்தமான ஆக்கங்களை சுருக்கமாகவும், இறுக்கமாகவும் மன்னாவுக்கு எழுதி அனுப்புங்கள். தரம் கண்டு பிரசுரிப்போம்

*- மன்னா நிர்வாகம் -*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு மாகாண சிவில் நிர்வாகத்தில் இராணுவத் தலையீடு அதிகரிக்கிறது

## கிறிஸ்தவ திருச்சபைகளின் ஒன்றியம் கண்டனம்

வடக்கு மாகாணத்தின் சிவில் நிர்வாகத்தில் இராணுவத் தலையீடு அதிகரித்து வருகின்றது என்று தெரிவித்துள்ள வடபிராந்திய கிறிஸ்தவ திருச்சபைகளின் ஒன்றியம் அதனை வன்மையாகக் கண்டித்துள்ளதோடு கடும் எதிர்ப்பையும் தெரிவித்துள்ளது.

இராணுவ மயமாக்கலை அகற்றுவது இன்றைய அவசரத்தேவையாக உள்ளது என்றும், இராணுவத்தினரை உடனடியாக அகற்ற வேண்டும் என்றும் அந்த ஒன்றியம் வலியுறுத்தியுள்ளது. இது தொடர்பில் அந்த ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

சிவில் நிர்வாகத்தில் இராணுவத் தலையீடு அதிகரித்து வருவதை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம். இலங்கையில் அனைவரும் இயல்பாக வாழும் சூழ்நிலை ஏற்படுத்தப்படுமாயின் மட்டுமே நீதி மைய உரிமைசார் நல்லிணக்கம் நனவாகும்.


எந்தவித அனுமதியுமின்றி தென்னிலங்கை மீனவர்கள் முல்லைத்தீவில் கடற்றொழிலில் ஈடுபட்டுள்ளனர். கொக்குத்தொடுவாய் வடக்கிலுள்ள புலிபாய்ந்தகல் அருகாமையில் அத்துமீறிக் குடியேறி கடற்றொழிலில் ஈடுபட்ட தென்னிலங்கை மீனவர்கள் பற்றிய தகவல்களை சேகரிக்கச்சென்ற கிராம அலுவலரான சீவரட்ணம் யேசுரட்ணம் தென்னிலங்கை மீனவர்களால் தாக்கப்பட்டுள்ளார்.

அதன்பின் தென்னிலங்கை மீனவர்களது தகவலின் அடிப்படையில் அங்கு சென்ற 593ஆவது படைப்பிரிவு இராணுவ அதிகாரி கேணல் சமந்த சில்வா, கிராம அலுவலரின் தேசிய அடையாள அட்டை, உத்தியோக அடையாள அட்டை என்பவற்றை எடுத்துக்கொண்டதுடன் தகாத வார்த்தைகளாலும் திட்டியுள்ளார். தென்னிலங்கை மீனவர்களினதும், இராணுவத்தினதும் பொறுப்பற்ற இந்த நடவடிக்கையை நாம் கண்டிக்கிறோம்.

சிவில் நிர்வாகத்தில் இராணுவம் தலையிடுவது அறத்துக்கு மாறானது. இது ஆரோக்கியமானதல்ல. இது நல்லிணக்கம் நடைமுறைக்கு பொருத்தமற்றது என்பதையே வெளிப்படுத்தும். இதனால் சிவில் நடைமுறைகளை தென்னிலங்கை மீனவர்கள் மதிக்கப் பழக வேண்டும். இராணுவம் சிவில் நிர்வாகத்தில் தலையிடக்கூடாது. வடமாகாணத்தில் இராணுவத் தலையீடு ஏற்கனவே கல்வி அமைச்சின் பொறுப்பிலுள்ள முன்பள்ளிகளிலும் காணப்படுகின்றது என்பது அனைவரும் அறிந்ததே. சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் ஊடாக, முன்பள்ளிகளில் கற்பிப்போரை சிவில் பாதுகாப்பு படையினராக நியமித்து மாதாந்த சம்பளத்தை வழங்கி, அவர்களது இயலாமையை தமது தலையீட்டுக்கு பாவிப்பதும் நல்லிணக்கத்தை ஏற்படுத்த பொருத்தமானதல்ல. இராணுவத்தை அகற்றுவதன் மூலம்தான் இப்பிரச்சினைகளை முடிவுக்குக் கொண்டுவரலாம். எனவே அரச சிவில் நிர்வாகம், அரச அதிபர், பிரதேச செயலாளர், கிராம அலுவலர், பொலிஸ், நீதிமன்றம் என்பவை இராணுவத் தலையீடின்றி இயங்குவது உடனடியாக உறுதிசெய்யப்பட வேண்டும். அரச இராணுவம், அரச சிவில் நிர்வாக செயற்பாட்டுக்குத் தடையாகவுள்ள நிலைமை தொடரக்கூடாது. இந்த நிலை நிறுத்தப்பட வேண்டும் என்றுள்ளது.

அந்த அறிக்கையில், மன்னார் கிறிஸ்தவ திருச்சபைகளின் ஒன்றியம், வவுனியா கிறிஸ்தவ ஒன்றியம், வன்னி கிறிஸ்தவ ஒன்றியம் மற்றும் வடமராட்சி கிறிஸ்தவ ஒன்றியம் என்பன கையெழுத்திட்டுள்ளன.

## குடும்பநல பொதுநிலையினர் ஆணைக்குழுவின் கீழ்த்தள புதிய கட்டிடத் திறப்பு விழா




மன்னார் மறைமாவட்டத்தின் நீண்டகாலத் தேவையைப் பூர்த்திசெய்யும் பொருட்டு குடும்பநல, பொதுநிலையினர் பணியகத்தில் நிர்மாணிக்கப்பட்டுவரும் புதிய கட்டிடத்தின் கீழ்த்தள கட்டிடத் திறப்பு விழா கடந்த ஏப்ரல் மாதம் 18ஆம் திகதி மாலை 5.30 மணிக்கு இடம்பெற்றது.

மன்னார் மறைமாவட்ட அப்போஸ்தலிக்கப் பரிபாலகர் மேதகு கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை அவர்கள் புதிய கட்டிடத்தை ஆசீர்வதித்து திறந்துவைத்தார். இந்நிகழ்வில் மன்னார் மறைமாவட்ட குருக்கள், பொதுநிலையினர், குடும்பப்பணி மையத்தின் பல்வேறு செயற்குழுக்களின் உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வின்போது குடும்பநல பொதுநிலையினர் ஆணைக்குழுவுக்கும் இன்னும் மன்னார் மறைமாவட்டத்திற்கும் பல்வேறு அரும்பணிகள் ஆற்றி பணியிட மாற்றம் பெற்று முல்லைத்தீவிற்கு சென்றுள்ள அருட்சகோதரி கிறிஸ்ரபெல் (தி.கு.) அவர்களுக்கு சிறப்பான முறையில் நன்றி தெரிவிக்கப்பட்டு கௌரவம் வழங்கப்பட்டது.

குடும்பப் பணியகத்தில் பல ஆண்டுகள் பணியாற்றிய வேறுசில மூத்த பொதுநிலையினர்களும் இந்நிகழ்வில் கௌரவிக்கப்பட்டனர். மன்னார் மறைமாவட்ட குடும்பநல, பொதுநிலையினர் ஆணைக்குழுவின் இயக்குனர் அருட்திரு. எஸ். கே. தேவராஜா இந்நிகழ்வுகளை சிறப்பாக ஒழுங்கமைத்திருந்தார்.

## மன்னார் மறைமாவட்டத்தில் துறவிகள் ஆண்டு நிறைவு நிகழ்வு









மன்னார் மறைமாவட்டத்தில் துறவியர் ஆண்டை நிறைவுசெய்யும் வகையில் சிறப்பு நிகழ்வு ஒன்று கடந்த பெப்ரவரி 4ஆம் திகதி மன்னாரில் இடம்பெற்றது.

மன்னார் மறைமாவட்டத்தில் உள்ள துறவிகள் தமது துறவற சபையைப் பிரதிபலிக்கும் பதாதைகளைத் தாங்கி பவனியாக வந்து புனித செபஸ்தியார் பேராலயத்தில் இடம்பெற்ற சிறப்புத் திருப்பலியில் பங்கெடுத்தனர். மன்னார் மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் மேதகு கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை தலைமையில் இத்திருப்பலி இடம்பெற்றது.

## கார்மேல் சபையின் புதிய தலைவியாக அருட்சகோதரி ரூபிக்கா

அருட்சகோதரி ரூபிக்கா அவர்கள் கார்மேல் சபையின் புதிய மாகாணத் தலைவியாக கடந்த ஏப்ரல் மாதம் 18ம் திகதி தெரிவுசெய்யப்பட்டார். இவர் தனது புதிய பணியினை ஓகஸ்ட் மாதம் 20ம் திகதி பொறுப்பேற்கிறார்.

இவருடைய புதிய நிர்வாகத்தில் இவரோடு இணைந்து பணிபுரிய ஆலோசகர்களாக அருட்சகோதரிகளான தீப்பானி, துஷிக்கா, தயாளினி, பிரதீப்பா மற்றும் ஞானதர்ஷினி ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். கார்மேல் சபையினரின் புதிய நிர்வாகத்திற்கு மன்னாவின் வாழ்த்துக்களும் செபங்களும்.

## அருட்சகோதரி தேக்ளா இறைபதம்

யாழ். திருக்குடும்ப சபையைச் சேர்ந்தவரும் ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகக் கொண்டவருமான அருட்சகோதரி மேரி தேக்ளா கிறிசோஸ்ரொம் (தி.கு) அவர்கள் கடந்த ஏப்ரல் மாதம் 12ஆம் திகதி இறைபதம் அடைந்தார். அன்னாரின் பூதவுடல் 13.04.2016 அன்று புதன் கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ். திருக்குடும்ப மாகாண இல்லத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்ட பின்னர் யாழ். புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது. அருட்சகோதரியின் ஆன்மா இறைபதம் அடையச் செபிப்போம்.

## அன்னை தெரேசாவின் புனிதர் பட்ட நிகழ்வில் பிரதமர் மோடி பங்கேற்கும் சாத்தியம்

வருகின்ற செப்ரம்பர் மாதம் வத்திக்கானில் அருளாளர் அன்னை தெரேசா அவர்கள் புனிதராக அறிவிக்கப்படவிருக்கும் நிகழ்வில் இந்தியப் பிரதிநிதிகள் குழுவுக்குத் தலைமை தாங்குமாறு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்களை இந்திய கத்தோலிக்கத் திரு அவைத் தலைவர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

இந்திய ஆயர் பேரவைத் தலைவர் கர்தினால் பசிலியோஸ் கிளீமிஸ் அவர்கள் தலைமையில் கடந்த ஏப்ரல் மாதம் 25ஆம் திகதி அன்று பிரதமர் மோடி அவர்களைச் சந்தித்து இப்பரிந்துரையை முன்வைத்தனர். அத்தோடு திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களை இந்தியாவுக்குத் திருத்தூதுப் பயணம் மேற்கொள்வதற்கு அழைப்பு விடுக்குமாறும் இக்குழு பிரதமர் மோடி அவர்களைக் கேட்டுக்கொண்டுள்ளது.

அருளாளர் அன்னை தெரேசா அவர்களை வருகிற செப்ரம்பர் நான்காம் திகதி புனிதராக அறிவிக்கப்படவிருக்கிறார். இந்நிகழ்வில் கலந்துகொள்வது குறித்து தான் பரிசீலிப்பதாக பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் தெரிவித்துள்ளார்.



பிரதமர் மோடியைச் சந்தித்த இந்திய ஆயர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 50வது உலக தொடர்பாடல் தினத்தை முன்னிட்டு திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் செய்தி

# - தொடர்பாடலும், இரக்கமும் : ஒரு பலன் கொடுக்கும் சந்திப்பு -

08-05-2016





**அன்பான சகோதர சகோதரிகளே!**

தூய இரக்கத்தின் ஆண்டானது எம்மை தொடர்பாடலுக்கும், இரக்கத்திற்கும் இடையேயுள்ள தொடர்பினைப்பற்றித் தியானிக்க அழைக்கின்றது. இரக்கத்தின் தந்தையின் வாழும் அவதாரமாகிய கிறிஸ்துவின் ஒன்றிப்பில் இணைந்துள்ள திருச்சபையானவள் தனது இருப்பிலும், செயல்களிலும் இரக்கத்தினை செயற்படுத்துகின்ற ஒரு பிரத்தியேகக் கருவியாகத் திகழ அழைக்கப்படுகின்றாள். நாங்கள் சொல்பவற்றிலும், அவற்றினைச் சொல்கின்ற முறையிலும், எமது வார்த்தையிலும், வாழ்விலும், இறைவனின் இரக்கத்தையும், அன்பினையும், மன்னிப்பையும் வெளிப்படுத்த வேண்டும். அன்பு தனது இயல்பிலேயே ஒரு தொடர்பாடலாகும். அது நம்மை திறந்த மனநிலைக்கும், பகிர்விற்கும் இட்டுச் செல்கின்றது. எமது இதயங்களும், செயல்களும் பிறரன்பினாலும், இறையன்பினாலும் ஆட்கொள்ளப்படுகின்றபோது, எமது தொடர்பாடல்களும் கடவுளது சொந்த ஆற்றலினாலும், வல்லமையாலும் ஆட்கொள்ளப்படுகின்றன.

கடவுளுடைய மகன்களாக, மகள்களாக நாம் எல்லோரும் எதுவித விதிவிலக்குமின்றி எல்லோருடனும் தொடர்பாடலை ஏற்படுத்த அழைக்கப்படுகின்றோம். இறைத்தந்தையால் அனுப்பப்பட்ட இயேசுக்கிறிஸ்து கொடுக்கின்ற வாழ்வின் முழுமையைப் பெறுகின்ற பயணத்தில் இறைமக்களை திடப்படுத்துவதோடு, அவர்களது இதயங்களைத்தொட்டு, சிறப்பான முறையில் இரக்கத்தினை அவர்களுக்கு வழங்குகின்றவிதத்தில் திருச்சபையின் வார்த்தைகளும், செயல்களும் அமைதல் வேண்டும். அதாவது நாம் அன்னையாம் திருச்சபையின் கரிசனையை ஏற்றுக்கொள்ள முனைவதோடு, அதனை ஏனையவர்களுடனும் பகிர்ந்துகொள்வதனூடாகக் கிறிஸ்துவை ஏனையவர்கள் அறியவும், அன்புசெய்யவும் செய்யமுயல வேண்டும். இந்தக் கரிசனைதான் விசுவாச சத்தியத்தின் உட்கருவாக அமைகின்றது. நமது போதனையாலும், சாட்சிய வாழ்வாலும் இக்கரிசனையானது அடுத்தவருக்கு வாழ்வு கொடுக்கின்ற நெருப்புப்பொறியாக மிளிருகின்றது.

தொடர்பாடலானது மக்களிடையே பாலங்களை அமைக்கவல்ல சக்தியையும், சந்திப்புக்களை ஏற்படுத்தி, பலரை உள்வாங்குகின்ற ஆற்றலையும், அதனூடாக சமுதாயத்தினை வளப்படுத்துகின்ற திறனையும் பெற்றிருக்கின்றது. மக்கள் தமது வார்த்தைகளையும் செயல்களையும் விழிப்புணர்வோடு தெரிவுசெய்வதன் மூலம் புரிந்துணர்வற்ற தன்மைகளை அகற்ற முயற்சிப்பதும், காயப்பட்ட நினைவுகளை குணப்படுத்தி, அமைதியையும், நல்லிணக்கத்தையும் ஏற்படுத்த முயல்வதும் எத்துணை அழகானது. வார்த்தைகள் தனிப்பட்டவர்களுக்கிடையிலும், குடும்பங்களுக்கிடையிலும், சமூக குழுக்களுக்கிடையிலும் இணைப்பை ஏற்படுத்த வல்லவை. இந்நிலைப்பாடானது வெளித்தோற்ற உலகிலும், இணைய உலகிலும் சாத்தியமானது. நமது வார்த்தைகளும், செயல்களும் அடுத்தவரை குற்றம்சாட்டுகின்ற நச்சுவட்டங்களிலிருந்தும், வெறுப்பின் வெளிப்பாடுகளைத் தூண்டுவதன் மூலம் தனிப்பட்ட நபர்களையும், நாடுகளையும் தொடர்ச்சியாகச் சிறைப்பிடிக்கின்ற, பழிவாங்குகின்ற மனநிலைகளிலுருந்தும் நாம் விடுபட நமக்கு உதவிசெய்ய வேண்டும். கிறிஸ்தவர்களுடைய வார்த்தைகள் ஒன்றிப்பினை ஏற்படுத்தத் தூண்டுவனவாகவும், சிறப்பாகத் தீமையை உறுதியுடன் எதிர்க்கின்ற சூழ்நிலைகளில் உந்துசக்தியாகவும், அவர்கள் உறவுகளையும், தொடர்பாடல்களையும் உடைக்காமல் இருக்கத் தூண்டுவனவாகவும் அமைதல் வேண்டும்.

இக்காரணத்திற்காக, காயப்பட்ட உறவுகளைக் குணப்படுத்தவும், அற்றுப்போன அமைதியையும், நல்லிணக்கத்தையும் குடும்பங்களிலும், சமூகங்களிலும் மீளக் கட்டியெழுப்பவும் நாம் இரக்கத்தின் வல்லமையை மீளக் கண்டுகொள்ள வேண்டுமென நான் நல்லெண்ணம் கொண்ட அனைவரையும் அழைத்து நிற்கின்றேன். நமது தொடர்பாடலுக்கும், புரிந்துணர்வுக்குமான பாதைகளில் தடைக்கல்லாகவும், தனிப்பட்டவர்களைச் சிறைப்பிடிக்கின்ற காரணிகளாகவும், நமது பழைய காயங்களும், அடிக்கடி ஞாபகம் வருகின்ற மனத்தாங்கல்களும் பலவழிகளில் அமைவதை நாம் அனைவரும் அறிவோம். இதே நிலை மக்களுக்கிடையிலான உறவுநிலைகளிலும் பாதிப்பை ஏற்படுத்துகின்றது. இந்த ஒவ்வொரு நிலைகளிலும் இரக்கமானது புதிய முறையிலான வார்த்தைகளையும், உரையாடலையும் உருவாக்க வல்லது. ஷேக்ஸ்பியர் அழகாகக் கூறிய வார்த்தைகள்: 'இரக்கத்தின் குணாதிசயங்கள் கட்டாயப்படுத்தப்படுபவையல்ல மாறாக வானிலிருந்து நிலத்தினை நோக்கி மென்மையாக வீழ்கின்ற மழைத்துளி போன்றது. அது இரு தடவைகள் ஆசீர்வதிக்கப்படுகின்றது: அது அதனைக் கொடுப்பவனை ஆசீர்வதிக்கின்றது. அத்தோடு அதனைப் பெறுபவனையும் ஆசீர்வதிக்கின்றது. (The Merchant of Venice, Act IV Scene I) (வெனீஸ் நகர வர்த்தகன் - நாடகம், அரங்கு 4, காட்சி I )

என்றுமே நம்பிக்கையினை இழக்காத இரக்கத்தினால் எமது அரசியல் மற்றும் இராஜதந்திர மொழிப்பாவனைகள் ஆட்கொள்ளப்படுவது சிறப்பானது. நிறுவனங்கள் மற்றும் அரசியல் துறைகளில் பொறுப்பாயுள்ளவர்களையும், பொது அபிப்பிராயங்களை ஏற்படுத்துகின்ற பொறுப்புக்களில் உள்ளவர்களையும், வித்தியாசமாகச் சிந்திப்பவர்கள், செயல்படுபவர்கள், தவறிழைத்தவர்கள் மட்டில் அவர்கள் பேசுகின்ற வார்த்தைகள் மட்டில் மிக்க கவனத்துடனும், கரிசனையுடனும் செயற்படும்படியாகவும், கேட்டுக்கொள்கின்றேன். இச்சந்தர்ப்பங்களைத் தவறாக பயன்படுத்துவதற்கும், அவநம்பிக்கையின் சுவாலைகளை எரியவிடுவதற்கும், பயம் மற்றும் வெறுப்புணர்வுகளைத் தூண்டுவதற்கும் ஏதுவான சோதனைகள் இலகுவாக எம்மை ஆட்கொள்ளக்கூடும். இதற்கு மாறாக, மக்களைப் புரிந்துணர்வுப்பாதைகளில் வழிநடத்தவல்ல மனத்துணிவு தேவையானதாகும். அடிப்படையில் இவ்வகையான ஆக்கபூர்வமான போக்குகளும், படைப்பாற்றல்மிக்க திடனும்தான் தொன்றுதொட்டு வரும் பல முரண்பாடுகளுக்கு உண்மையான தீர்வினையும், நிலையான அமைதியைக் கட்டியெழுப்பக்கூடிய வாய்ப்புக்களையும் நல்குகின்றன. 'அமைதியை ஏற்படுத்துவோர் பேறுபெற்றோர்: ஏனெனில் அவர்கள் கடவுளின் மக்கள் என அழைக்கப்படுவர்' (மத்தேயு, 5:7-9).

திருச்சபையின் ஆயர்களாகிய நமது பணிகளும், எமக்கே உரித்தான தொடர்பாடல் முறைகளும், ஓர் எதிரியின்மேல் கொள்ளும் வெற்றி மேலாதிக்கத்தினை வெளிப்படுத்துவதாகவோ உலகினால் தொலைக்கப்பட்டவர்களாக, புறக்கணிக்கப் பட்டவர்களாக உள்ளவர்களைத் தரக்குறைவாக எண்ணுவதாகவே இருக்கக்கூடாதென்று நான் எவ்வளவோ விரும்புகின்றேன். தீர்ப்பின் உணர்வற்ற தன்மையை மட்டுமே அறிந்தவர்களுக்கு, அதன் இதமான உணர்வுகளை அனுபவிக்கவும், மனித வாழ்வின் துன்பங்களைக் குறைக்கவும் இரக்கமானது உதவவல்லது. நமது தொடர்பாடல் வழிமுறைகள், பாவிகளை நீதிமான்களிலிருந்து பிரித்துவைக்கின்றவர்கள், அம்மனநிலையிலிருந்து விடுபட உதவுவனவாகும். நாம் பாவ சூழ்நிலைகளான வன்முறை, இலஞ்ச ஊழல், மற்றும் பிறரைச் சுரண்டுதல் போன்றவைகளை இனம் கண்டு அதேவேளையில், கடவுள் ஒருவரே மனிதர்களின் உள்ளாழத்தை அறிபவராக இருப்பதனால் மனிதர்களைத் தீர்ப்பிடவும் கூடாது. தவறிழைப்போரைக் கண்டித்துத்திருத்துவதும், தீமைகளையும் அநீதியான செயற்பாடுகளை, நிராகரிப்பதும், இவற்றினால் பாதிக்கப்பட்டவர்களை விடுவிப்பதும், விழுந்தவர்களைத் தூக்கிவிடுவதும் எமது பணியாக இருக்க வேண்டும். யோவான் நற்செய்தி கூறுகின்றது, "உண்மை உங்களை விடுவிக்கும்" (யோவான் 8:32). இயேசுக் கிறிஸ்துவே இறுதியும், நிலையானதுமான உண்மை. அவரது மென்மையான இரக்கமே நமது உண்மையை அறிவிக்கின்ற பணியினையும், அநீதியினை கண்டிக்கின்ற பணியினையும் அளவிடுகின்ற அளவுகோலாகும். நமது அடிப்படை இலக்கானது உண்மையை அன்பினால் மேலோங்கச் செய்வதாகும் (எபேசியர், 4:5). அன்போடு பேசப்பட்டு, சாதுவான இரக்கத்தோடுகூடிய மனநிலையில் வெளிவந்த வார்த்தைகளால் மட்டுமே பாவப்பட்ட இதயங்களைத் தொடமுடியும். நீதிமயப்படுத்தப்பட்ட கடினமான வார்த்தைகளும், செயல்களும் நாம் மனமாற்றத்திற்கும், சுதந்திரத்திற்கும் இட்டுச் செல்ல நினைப்பவர்களை தூர விலக்கிச் செல்வதற்கும் அவர்கள் உள்ளத்தின் ஒரு கைவிடப்பட்ட மனநிலையையும், தமது செயல்களை நியாயப்படுத்தும் மனநிலையையும் வளர்த்துவிடும். இரக்கத்தில் வேரூன்றிய ஓர் சமூகம் என்பது நடைமுறைச்சாத்தியமற்ற அல்லது கட்டுப்பாடுகளே இல்லாததொன்றாகத்தான் இருக்கமுடியுமெனச் சிலர் எண்ணுகின்றனர். ஆயினும் நாம் நமது குடும்பங்களில் கைக்கொண்ட முதன்மையான உறவுநிலை அனுபவங்களை மீளாய்வு செய்து பார்ப்போம். ஏனெனில் நமது ஆற்றல்களுக்கும் சாதனைகளுக்கும் அப்பால் நமது பெற்றோர் நம்மை நாம் யார் என்பதை வைத்தே அன்புசெய்து மதித்து வந்துள்ளனர். பெற்றோர்கள் இயல்பாகவே தமது பிள்ளைகளுக்கு சிறந்தவற்றையே கொடுக்க நினைப்பார்கள். ஆயினும் இவ் அன்பானது எவ்வித நிபந்தனைகளையும், வரையறைகளையும் கொண்டதல்ல. ஓர் குடும்ப வீடானது நம்மை எப்போதும் வரவேற்கின்ற ஓர் இல்லமாகும். (லூக். 15:11-32). ஒரு சமுதாயமானது முற்றிலும் புதிய மனிதர்கள்கூடி முதன்மை அடையப்போட்டிபோடுகின்ற ஒரு தளமாக இராது. எல்லோரையும் வரவேற்று ஆதரிக்கின்ற, வாயில்கள் என்றும் திறந்திருக்கும் இல்லமாக இருக்க வேண்டுமென்பதே எனது விருப்பம். இச்செயற்பாடு நடைபெறுவதற்கு, நாம் முதலில் செவிமடுக்கக் கற்றுக்கொள்ள வேண்டும்.

தொடர்பாடலை ஏற்படுத்துவதென்பது பகிர்தலாகும். பகிர்தல் என்பது ஒருவரையொருவர் ஏற்றுக்கொள்வதும், ஒருவருக்கொருவர் செவிமடுப்பதுமாகும். செவிமடுத்தல் என்பது சாதாரணமாக கேட்பதிலும் பார்க்க மேலானது. கேட்டல் என்பது சாதாரணமாக தகவல் திரட்டுவதை அடிப்படையாக கொண்டது. ஆனால் செவிமடுப்பதென்பது தொடர்பாடலோடு தொடர்பட்டு ஒரு நெருங்கிய உறவை ஏற்படுத்துகின்றது. செவிமடுத்தல் எம்மைச் சரியாக செயல்களைச் செய்ய தூண்டுவதோடு, வெறுமனே பார்வையாளர்களாகவும். முகவர்களாகவும் இருக்கின்ற செயற்பாட்டு நிலையைத் தவிர்க்கின்றது. மேலும் செவிமடுத்தல் என்பது நமது கேள்விகளையும், சந்தேகங்களையும் பகிர்ந்துகொண்டு, ஒருவர் ஒருவரோடு அருகருகே பயணித்து, ஒரு மையப்படுத்தப்பட்ட எதேச்சாதிகாரப் போக்கைத் தவிர்த்து, நமது ஆற்றல்களையும், கொடைகளையும் பொது நன்மைக்காக பயன்படுத்துவதையும் குறிப்பதாகும்.

செவிமடுத்தல் என்பது இலகுவானதல்ல. பல சர்ந்தப்பங்களில் செவிடர்கள்போல் நடந்துகொள்வது இலகுவானது. செவிமடுத்தல் என்பது கவனத்துடன் அவதானித்தல், விளங்கிக்கொள்ள ஆவல் கொள்ளுதல், அடுத்தவரது கருத்தை மதித்து, அதனை நன்கு சிந்தித்து ஏற்றுக்கொள்ளுதல் என கருத்துப்படும். இது ஒருவிதத்தில் தற்கொடை அல்லது சுயபரித்தியாகம் போன்றது. எவ்வாறு மோயீசன் எரியும் முட்செடி முன்னிலையில் நின்றதுபோல நாமும் எமது காலணிகளைக் களைந்து உறவாடுபவருக்கு முன்னிலையில் உள்ள புனித பூமியில் நிற்பதுபோன்று நிற்க வேண்டும் (வி.ப. 3:5). செவிமடுக்க கற்றுக்கொள்வதென்பது உண்மையில் ஓர் விசேடமான அருளாகும். அது நாம் இரந்து கேட்டுப்பெற வேண்டிய கொடையும், பின்னர் பல்வேறு முயற்சிகள் ஊடாகப் பயிற்சி செய்ய வேண்டிய செயலுமாகும்.

மின்னஞ்சல்கள், குறுஞ்செய்திகள், சமூக வலையமைப்புக்கள், வார்த்தைப் பரிமாற்றங்கள் அனைத்துமே ஒருவர் ஒருவரிடையே இடம்பெறும் பல்வேறு தொடர்பாடல் வகைகளாகும். ஒரு தொடர்பாடல் இதயசக்தியுடன் மேற்கொள்ளப்படுகின்றதா இல்லையா என்பதனைத் தீர்மானிப்பது தொழில்நுட்பமல்ல, மாறாக அத்தொடர்பாடல் சாதனங்களை ஞானத்தோடும், விவேகத்தோடும் தேவைக்கு ஏற்ப பாவிக்கின்ற மனித உள்ளங்களும், மனித ஆற்றல்களுமே ஆகும். சமூக வலையமைப்புக்கள் உறவு நிலைகளை மெருகூட்டுவதோடு சமுதாய நலனையும் அதிகரிக்கலாம். அதேவேளை அவ்வலையமைப்புக்கள் தனிமனித, குழுக்களுக்கிடையிலான பிரிவுகளுக்கும், பிளவுகளுக்கும் காரணமாகவும் இருக்க இடமுண்டு. இன்றைய இணைய உலகானது மனிதர்களை உற்சாகப்படுத்தி ஆதரிக்கின்ற அல்லது மறுபக்கத்தில் உதாசீனப்படுத்துகின்ற ஓர் பொதுச் சதுக்கமாகவும், சந்திப்புக் கூடாரமாகவும் அமையலாம். மனிதர்களின் ஆக்கபூர்வமான கருத்துப்பகிர்விற்கும், அல்லது விதண்டாவாதமான சச்சரவுகளுக்கும் கருத்துமோதல்களை வளர்க்கும் தளமாகவும் அமைய இடமுண்டு.

இந்த யூபிலி ஆண்டில் இரக்கம் உண்மையில் வாழப்படுகின்ற ஒன்றாக, நாம் ஒருவர் மற்றவரை அறியவும், விளங்கிக்கொள்ளவும் தேவையான உறுதியுள்ள உரையாடல்களின் ஊற்றுவாயாக இடம்பெற வேண்டுமென்று நான் பிரார்த்திக்கிறேன். அதேவேளையில் இந்த உரையாடல்கள் குறுகிய மனநிலைகளை அழித்து, அடுத்தவரை மதிக்காத தன்மைகளைப் போக்கி, எல்லா வகையான வன்முறைகளையும், பாகுபாடுகளையும் இல்லாமல் செய்வதாக (Misericordiae Vultus, 23) (இரக்கத்தின் திருமுகம். 23). இணையத்தளமானது நாம் சிறந்த குடிமக்களாக வாழ உதவுகின்றது. இணைய வலையமைப்புக்களில் அங்கம் வகித்தலென்பது மறுபக்கத்தில் நம்மால் காணமுடியாத நிலையிலுள்ள அயலவர்களின் மாண்பையும், மரியாதையையும், நாம் மதிக்கவேண்டிய பொறுப்புணர்வையும் உள்ளடக்கியுள்ளது. இணையத்தளத்தை ஓர் ஆரோக்கியமான, பகிர்வு மனப்பான்மையுள்ள சமூகத்தை கட்டியெழுப்பும் நோக்குடன் விவேகத்தோடு பாவிக்கலாம்.


தொடர்பாடலானது எங்கே, எப்படி இடம்பெற்றாலும் பல மனிதர்களுக்கு அகலமான வாயில்களைத் திறந்துவிட்டுள்ளது. இது ஒரு உயரிய, பொறுப்புவாய்ந்த இறைவனின் சிறந்த கொடையாகும். இந்தத் தொடர்பாடல் சக்தியை ஒருவரோடொருவர் அன்னியோன்னியப்படுத்தக்கூடியது எனக் குறிப்பிட்டுக்கூற நான் விரும்புகின்றேன். தொடர்பாடலுக்கும், இரக்கத்திற்கும் இடையிலான சந்திப்பானது ஒருவரையொருவர் கண்காணிக்கின்ற, ஆறுதல்படுத்துகின்ற, குணப்படுத்துகின்ற தோழமைக்கு உட்படுத்துகின்ற நெருங்கிய உறவுக்கு இட்டுச்செல்லுகின்றபோது பலனளிப்பதாக அமைகின்றது. உடைந்து, பிரிவினைகளால் பிளவுபட்டுள்ள உலகில் இரக்கத்தோடு தொடர்பாடலை ஏற்படுத்துவதென்பது ஓர் ஆரோக்கியமான, சுதந்திரமான, சகோதரத்தவமுள்ள நெருங்கிய உறவினை கடவுளின் பிள்ளைகளுக்கிடையிலும், மனித குடும்பத்தில் அங்கம் வகிக்கின்ற எல்லா நமது சகோதர சகோதரிக்கிடையிலும் ஏற்படுத்துவதாகும்.

*பிரான்சிஸ் - வத்திக்கான் 24 ஜனவரி 2016*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மன்னார் மறைமாவட்டச் செய்திகள்

# வடமாகாண ஆளுநர் கூரே மன்னார் ஆயர் இல்லத்திற்கு விஜயம்



வடமாகாண ஆளுநர் றெஜினோல்ட் கூரே அவர்கள் ஆளுனராகப் பதவியேற்றபின் முதல்முறையாக தனது உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு கடந்த ஏப்ரல் மாதம் 5ஆம் திகதி மன்னாருக்கு வருகைதந்தார்.

மன்னார் மாவட்ட மக்களின் பிரச்சினைகளை அறிந்துகொள்வதற்காக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் எம்.வை.எஸ். தேசப்பிரியவின் தலைமையில் மன்னார் மாவட்ட அனைத்து திணைக்களங்களின் அதிகாரிகளை ஒருங்கிணைத்து மன்னார் மாவட்டத்தில் நடைபெறுகின்ற அபிவிருத்தி திட்டங்கள், திணைக்களங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் மாவட்டத்தில் நிலவிவருகின்ற குறைபாடுகள் என்பவற்றை கேட்டறிந்தார்.

இதைத் தொடர்ந்து வடமாகாண ஆளுநர் மன்னார் மறைமாவட்ட ஆயர் இல்லத்துக்குச் சென்று மன்னார் மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் மேதகு ஆயர் யோசேப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகையை சந்தித்து உரையாடினார்.

இந்த உரையாடலின்போது மன்னார் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்பணி. ஏ. விக்ரர் சோசை அடிகளார், ஆயரின் செயலாளர் அருட்பணி. முரளிதரன் அடிகளார்களும் உடன் இருந்தனர்.

ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை மற்றும் ஆளுநர் றெஜினோல்ட் கூரே ஆகியோரின் சந்திப்பின்போது மன்னார் மாவட்டத்தில் நிலவும் குறைபாடுகள் பற்றி கலந்துரையாடப்பட்டது. குறிப்பாக வீதிகளின் சீர்கேடுகள் பற்றி விபரமாகத் தெரிவிக்கப்பட்டதாகவும், மன்னார் நகரை அண்டிய எழுத்தூர் சந்தியிலிருந்து ஆயர் இல்லம் பகுதிகளிலுள்ள வீதிகள் பல வருடங்களாக புனரமைக்கப்படாது இருப்பதாகவும், அத்துடன் மன்னார் பொது வைத்தியசாலையில் நிலவிவரும் அசௌகரியங்கள் மற்றும் பல குறைபாடுகள் பற்றியும் கலந்தாலோசிக்கப்பட்டது.

மேலும் மன்னார் பெருநிலப்பரப்பு பகுதிகளில் மக்களின் மீள்குடியேற்றம் தொடர்பாகவும் பேசப்பட்டதுடன் மீள்குடியேறியுள்ள மக்களுக்கான வாழ்வாதாரம் மற்றும் பிள்ளைகளின் கல்வி, சுகாதாரம் போன்ற விடயங்கள் தெளிவாக விளக்கி கூறப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவற்றை செவிமடுத்த ஆளுநர், தான் மன்னார் ஆயர் குழுவினராகிய உங்களால் தெரிவிக்கப்பட்ட விடயங்களை கவனத்துக்கு எடுத்து இவைகளை இயன்றவரை தீர்த்துவைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக உறுதிமொழி அளித்துள்ளார்.

இதைத் தொடர்ந்து மன்னார் மறைமாவட்ட ஓய்வு நிலை ஆயர் இராயப்பு யோசேப்பு ஆண்டகையையும் பார்வையிட்டு சற்றுநேரம் அவருடன் உரையாடிச் சென்றார்.

ஆயர் இல்ல விஜயத்தைத் தொடர்ந்து மன்னார் பொது வைத்தியசாலைக்கு ஆளுனர் விஜயம் செய்தார்.

## மன்னார் மாவட்டத்தில் வெள்ளி, ஞாயிறு தினங்களில்

# தனியார் வகுப்புகளுக்கு தடை

## மன்னார் மாவட்ட நீதிமன்ற உத்தரவு

மாணவர்கள் தாம் சார்ந்த மத வழிபாடுகளில் கலந்துகொள்வதற்கு வாய்ப்பளிக்கும் முகமாக வெள்ளிக்கிழமை பிற்பகலிலும், ஞாயிற்றுக்கிழமையும் மன்னார் மாவட்டத்தில் தனியார் கல்வி நிறுவனம் இயங்கக்கூடாது எனவும் இதை சிறுவர் பாதுகாப்பு பொலிஸ் பிரிவு கண்காணிக்க வேண்டும் எனவும் மன்னார் மாவட்ட நீதிவான் நீதிமன்ற நீதிபதி ஆசீர்வாதம் கிறேசியன் அலெக்ஸ்ராஜா உத்தரவு பிறப்பித்துள்ளார்.

பாலியல் சம்பவம் தொடர்பாக மன்னார் பகுதி தனியார் கல்வி நிறுவன இயக்குநர் ஒருவருக்கு எதிராக மன்னார் நீதிவான் நீதிமன்றில் தாக்கல்செய்யப்பட்ட வழக்கு விசாரணை ஒன்றின்போதே நீதிவான் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

கடந்த ஏப்ரல் மாதம் 18ஆம் திகதி மன்னார் நீதிவான் நீதிமன்றில் இந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டது. அதாவது மன்னார்ப் பகுதியிலுள்ள தனியார் கல்வி நிறுவனம் ஒன்றுக்கு கல்வி கற்கப்போகும் மாணவிகள் ஒருசிலர்மீது அந்நிறுவன இயக்குநர் பாலியல் வல்லுறவு முயற்சி மேற்கொண்டதாக மாணவிகளால் பெற்றோருக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது விடயமாக மாணவியொருவரின் தந்தை மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறையீடு செய்தபோதும் பொலிஸார் இவ்விடயத்தை அசமந்தப் போக்கில் விட்டுள்ளதாகவும் பின் இதுவிடயமாக முறைப்பாட்டாளர் மன்னார் உதவி பொலிஸ் அத்தியட்சகரின் கவனத்துக்குக் கொண்டுவந்ததைத் தொடர்ந்து சம்பந்தப்பட்ட தனியார் நிறுவன இயக்குநர் கடந்த 29.03.2016 கைதுசெய்யப்பட்டு மன்னார் நீதிபதிமுன் ஆஜர்படுத்தப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில் குறித்த வழக்கு விசாரணை கடந்த 18.04.2016 திங்கட்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது நீதிபதி தெரிவித்ததாவது,

மன்னார் மாவட்டத்தில் தனியார் நிறுவனங்கள் பணம் சம்பாதிப்பதிலும் தங்களின் வேறு நோக்கங்களுக்காகவுமே தனியார் கல்வி நிறுவனங்களை நடத்திவருவதாகத் தெரியவருகிறது.

இந்தத் தனியார் நிறுவனங்கள் வெள்ளிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளிலும் வகுப்புக்கள் நடத்துவதால் குறிப்பிட்ட இத்தினங்களில் கட்டாயம் மத வழிபாடுகளில் பங்குபற்ற வேண்டிய நேரத்தில் மாணவர்கள் தங்கள் மத வழிபாடுகளில் பங்குபற்ற முடியாத நிலை ஏற்படுகிறது. எனவே, மாணவர்கள் தாம் சார்ந்த மத வழிபாடுகளில் கலந்துகொள்வதற்கு வாய்ப்பளிக்கும் வகையில் வெள்ளிக்கிழமை பிற்பகலிலும், ஞாயிறு தினங்களிலும் தனியார் கல்வி நிறுவனங்களில் வகுப்புக்கள் நடத்தக்கூடாது. சிறுவர் நன்னடத்தை பொலிஸ் பிரிவினர் இவ்விடயத்தைக் கண்காணிக்க வேண்டும் என நீதிபதி உத்தரவு பிறப்பித்தார்.

அத்துடன் ஏற்கனவே பிணையில் விடுக்கப்பட்டிருந்த சந்தேக நபரான தனியார் கல்வி நிறுவன இயக்குநரை எதிர்வரும் மே மாதம் 02ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கும்படியும் நீதிவான் உத்தரவு பிறப்பித்தார்.

## ஓய்வுநிலை ஆயர் யோசேப்பு ஆண்டகையின் 76வது பிறந்தநாள்



மன்னார் மறைமாவட்டத்தின் ஓய்வுநிலை ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை கடந்த ஏப்ரல் மாதம் 16ஆம் திகதி தனது 76வது பிறந்தநாளை திருப்பலியோடு நினைவுகூர்ந்தார். குருக்கள் துறவியர் சகிதம் அமர்ந்திருக்கும் ஆயர் அவர்களைப் படங்களில் காணலாம்.

## எழுத்தூர் புதிய பங்குத்தந்தை பணிப்பொறுப்பை ஏற்றார்





எழுத்தூர் பங்குத்தந்தையாகப் புதிதாக நியமனம் பெற்ற அருட்தந்தை பி. யேசுராஜா அடிகளார் கடந்த ஏப்ரல் மாதம் 17ஆம் திகதி அன்று ஞாயிறுதின திருப்பலியோடு தனது பணிப்பொறுப்புகளை ஏற்றுக்கொண்டார். அருட்திரு. எஸ். கே. தேவராஜா அடிகளார் மற்றும் அருட்திரு. ஜெராஸ்ட் (அமதி) ஆகியோரும் இத்திருப்பலியில் பங்கேற்றனர்.

## நிகழ்வுகளின் நிழல்கள்

### பம்பைமடு இறைஇரக்க ஆலயத் திறப்புவிழா







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரக்கத்தின் ஆண்டு - சிறப்புக் கட்டுரை

# பலியை அல்ல இரக்கத்தையே விரும்புகின்றேன்

கி. அருளப்பு, விடத்தல்தீவு,
தன்னார்வ இறைவார்த்தைப் பணியாளர்

வாழக்கை என்பது இறைவன் படைத்த ஓவியம். வாழ்வதென்பது மனிதன் படைத்த காவியம். கிறிஸ்தவ வாழ்வின் முதிர்ச்சியை நோக்கிய எம் பயணப்பாதையில் இரக்கத்தின் யூபிலி ஆண்டில் திருஅவை எம் ஒவ்வொருவரையும் இவ்வார்த்தைக்குள் பயணிக்க அழைக்கின்றது!

இறைவார்த்தை வரலாற்றோடு சம்மந்தப்பட்டது. மனித வரலாறு இறைவார்த்தையோடு சம்மந்தப்பட்டது! இறைவெளிப்பாடு உச்சமடைந்ததும், முழுமைபெற்றதும் ஆண்டவர் இயேசுவிலேதான்! இறை வெளிப்பாட்டுக்கு நாம் கொடுக்கும் பதிலே எம்முடைய செபங்கள். இறை வெளிப்பாட்டை நாம் எப்படி முன்னெடுக்கிறோம் என்பதைப் பொறுத்தே எம் ஒவ்வொருவருடைய நிலைவாழ்வும் அமைகிறது.

படைத்தான் படைப்பெல்லாம் மனுவுக்காக, மனுவைப் படைத்தான் தனக்காக. கடவுள் படைத்த ஓவியத்தை காவியமாக்குவதே எம் ஒவ்வொருவரது பணியாகும்.

வாழ்வும் வழிபாடும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்த பிரிக்கமுடியாத இரு யதார்த்தங்கள்! இறை - மனித உறவு மனித - மனித உறவுக்கு வித்திடுகின்றது. மனித - மனித உறவு இறை - மனித உறவை உறுதிப்படுத்துகின்றது! இறைமனித சந்திப்பும் ஒன்றிப்பும்தான் திருவழிபாடு! வாழ்விலே பிரதிபலிக்காத வழிபாடும் வழிபாட்டில் வலிமைபெறாத வாழ்வும் வீணானதே!

தகுதியைப் பார்த்து பொறுப்புக்களைக் கொடுப்பவன் மனிதன். பொறுப்புகளைக் கொடுத்து தகுதியாக்குபவன் இறைவன்! மீட்புச் சரித்திரத்தில் பலகால கட்டங்களில் பலவிதமான அழைப்புகள் விடுக்கப்பட்டன! ஆபிரகாமுக்கு விடுக்கப்பட்ட அழைப்பு ஒரு இனத்தை அடிமைத்தழையிலிருந்து விடுவித்த அழைப்பு! புனித பவுலுக்கு விடுக்கப்பட்ட அழைப்பு மீட்புத்திட்டத்தில் பிற இனத்தவரை கிறிஸ்துவுக்குள் உள்வாங்கச் செய்யும் அழைப்பு! இப்படி சிறிய பெரிய பணிகளுக்காக அழைப்புகள் விடுக்கப்பட்டதை வேதாகமத்தில் நாம் பார்க்கிறோம், படிக்கின்றோம்.

இந்த அழைப்புக்கு முன்பு ஆபிரகாம் புனித வாழ்வு வாழ்ந்தவரல்ல. அவர் ஒருசில குறைபாடுகளைக் கொண்டவர். மோயீசனை நாம் எடுத்துக்கொண்டால் அவர் எகிப்திய வீரனை படுகொலை செய்துவிட்டு அவர்களால் தேடப்பட்டபோது மிதியானுக்கு தப்பியோடி அங்கே எரிகின்ற முட்செடிகளிலிருந்து கடவுளால் அழைக்கப்பட்டவர். பவுலை நாம் எடுத்துக்கொண்டால் கிறிஸ்தவ மறையை அழிக்க கங்கணம் கட்டிக்கொண்டு தமஸ்குநகர் வந்தபோது ஆண்டவர் இயேசுவால் அழைக்கப்பட்டவர். இவர்களது பழைய வாழ்வு எப்படிப்பட்டதாக இருந்தாலும் அழைப்பை உணர்ந்து அவற்றை ஏற்றுக்கொண்டபோது அவர்கள் புதிதாக்கப்பட்டார்கள், புனிதமாக்கப்பட்டார்கள்.

இன்று எம் ஒவ்வொருவருடைய பலத்தையோ, பலவீனத்தையோ பாராமல் நம்முடைய திருமுழுக்கின் மூலம் தம் பணியைத் தொடர்ந்தாற்ற இறைவன் எம் ஒவ்வொருவரையும் பெயர் சொல்லி அழைக்கின்றார். இதில் பணிக்குருத்துவம், பொதுக் குருத்துவம் என இரு வகை அழைப்பு விடுக்கப்படுகிறது. பொதுநிலையினர் இல்லாமல் திருச்சபை இல்லை. தொண்ணூற்றொன்பது வீதமான பொதுநிலையினரை ஒரு வீதமான பாப்பரசர், ஆயர்கள், குருக்கள் கன்னியர், துறவிகள் திருச்சபையை நெறிப்படுத்தி, வழிநடத்தி வருகின்றனர். இவர்களே பணிக் குருத்துவத்தினர். இவர்கள் சில கடப்பாடுகள், வாக்குத்தத்தங்கள் மூலமாக அப்போஸ்தலிக்கப்பணி செய்கின்றனர்.

பன்னிரண்டு சீடரையும் பக்கத்திலே நிற்கவைத்து
தன் அறிவை அள்ளிக்கொடுத்தார்! - இதில்
இன்னவகை பேய் விரட்ட இன்னவகை நோய் தீர்க்க
என்பதனைச் சொல்லிக்கொடுத்தார்!

சக்தியைப் பகிர்ந்துகொண்ட உத்தமர்க்கு மேலும் சில
தத்துவங்கள் அள்ளிக்கொடுத்தார்! - நீங்கள்
பெற்றுக்கொண்ட செல்வமதை பெற்றதுபோல் இலாபமின்றி
மற்றவருக்கு தாருங்கள் என்றார்!

காசு, பணம், தங்கநகை, கையடக்கப்பெட்டி ஏதும்
தேவையில்லை உங்களுக்கென்றார்! - நீங்கள்
சேவை தரும் ஊழியத்தில் வாழ்வதற்கு சாப்பிடுங்கள்
வேறு வழி வேதனை என்றார்!

எந்த இடம் சென்றிடினும் அந்த இடம் தன்னிலொரு
நல்லமனை தேடிக்கொள்ளுங்கள்!
அந்த மனைக்கானதொரு சொந்தக்காரன் முன்னிலையில்
நல் அமைதி என்று சொல்லுங்கள்!




எவ்விடத்தில் உங்கள் மொழி ஏற்கவில்லையோ - அதை
அவ்விடத்தில் விட்டுவிடுங்கள் - நீங்கள்
செல்லிடத்தில் ஓடிவந்த சின்னஞ்சிறு தூசிகளும்
தேவையில்லை தட்டிவிடுங்கள்! (இயேசு காவியம்)

இது பணிக்குருத்துவ அப்போஸ்தலருக்கு கொடுக்கப்பட்டது. மாற்கு 6:7-13 இப்படிச் சொல்லுகின்றது!

"நற்செய்தியை நான் அறிவிக்கின்றேன். இதையிட்டு நான் பெருமைப்பட ஒன்றும் இல்லை. நற்செய்தியை அறிவிக்கும் கட்டாயம் எனக்குண்டு. நற்செய்தியை அறிவிக்காவிடில் எனக்கு ஐய்யோ கேடு! நானாக அறிவித்தால் எனக்கு கைமாறு உண்டு! நானாக அறிவிக்காவிடினும் அது என்னிடம் ஒப்படைக்கப்பட்ட பொறுப்பாக இருக்கின்றது" 1கொரி 9:16-18 இதை விபரிக்கின்றது. இது ஒவ்வொரு பொதுநிலையினருக்கு கொடுக்கப்படும் பணிவாழ்வு!

கிறிஸ்தவம் என்பது மறைத்து வைப்பதற்கல்ல. அது மற்றவர்களுக்கு வெளிப்படுத்துவதற்கு உரியது! உண்மையை என்றும் மறைத்துவைக்க முடியாது. உண்மையின் முழு வடிவம்தான் கிறிஸ்தவம்! ஒளி வழிகாட்டுவதற்கு உரியது. கடலில் தத்தளிக்கும் கப்பலுக்கு கரைகாட்டும் கலங்கரை விளக்கம்தான் கிறிஸ்தவம். அந்தக் கலங்கரை விளக்கத்தின் தூண்கள்தான் திருமுழுக்குப்பெற்ற நாம் ஒவ்வொருவரும்.

நாம் கொண்டிருக்கும் ஒளியைப் பார்த்து, நாம் வாழும் வழியைப் பார்த்து மற்றவர்கள் இயேசுவை நோக்கி வரவேண்டும். "உலகம் முழுவதும் என் மீட்பைக் கண்டுகொள்ள பிற இனத்தாருக்கு ஒளியாக நான் என்னை ஏற்படுத்துவேன்" (திப 13:47) என்று ஆண்டவர் இயேசு பவுலுக்கும் பர்ணபாவுக்கும் கூறியுள்ளார். இது அன்று சொல்லப்பட்டாலும் இன்று இந்த இரக்கத்தின் ஆண்டிலே நாம் ஒவ்வொருவரும் ஒவ்வொரு பவுலாகவும் பர்ணபாவாகவும் வாழ அழைக்கப்படுகிறோம்!

பவுலைப்போல் நாம் ஒளியைக் காணாமல் இருக்கலாம். ஆண்டவருடைய சத்தத்தைக் கேட்காமல் இருக்கலாம். ஆனால் இரண்டுக்கும் மேலாக உயிர் கொடுக்கும் வார்த்தை நம் கையில் உள்ளது. அதைக்கொண்டு நாம் பயணிக்கலாம். "நீங்கள் உலகிற்கு உப்பாய் இருக்கிறீர்கள். உப்பு உவர்ப்பற்றுப் போனால் எதைக்கொண்டு அதை உவர்ப்பாக்க முடியும்? (மத் 5:13).

நற்செய்தியின் படிப்பினைகள்தான் எம்முடைய ஆன்மீக உணவு. இந்த உணவை பிறர் உண்பதற்குத் தேவைப்படும் உப்புத்தான் எம் வாழ்வின் எடுத்துக்காட்டுகள். வார்த்தைக்கு, போதனைக்கு, எம்முடைய வாழ்க்கை சுவையூட்ட வேண்டும். நம்முடைய வாழ்க்கையைப் பார்ப்பவர்களே எம்முடைய வார்த்தையால் கவரப்படுகிறார்கள். மக்கள் இன்று நம்மை கவனித்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் தங்களை அறியாமலே எம்மில் கிறிஸ்துவைத் தேடுகிறார்கள். "நீங்கள் உலகிற்கு ஒளியாய் இருக்கிறீர்கள்" என்கிறார் ஆண்டவர். "உங்கள் ஒளி மனிதர்முன் ஒளிர்வதாக!"

கலை வண்ண விளக்கை ஏற்றி கட்டிலின்கீழ் வைப்பாரா?
விலையில்லா ஒளியைவீச விளக்கினைத் தூக்கி வைப்பார்
அலைபுகழ் மனித வாழ்க்கை அடுத்தவர் அறியத்தானே
மணல்மீது உள்ள பட்டி மறைவாக இருப்பதன்றே

நல்லொளி பரவுதல்போல் நாட்டிலே ஒளியாய் நின்று
இல்லத்தில் மட்டுமன்றி எங்கணும் வழியைக் காட்ட
வெல்லுங்கள் உங்கள் வாழ்க்கை திரைபோட்டு
மறைக்கவில்லை!
துல்லிய வானில் உள்ள தூயவன் மகிழவென்றார்
(இயேசு காவியம்) மத் 14:15 இதை விபரிக்கின்றது!

நாம் விரும்பிக் கொண்டாடுகின்ற கடவுள் அல்ல, கடவுள் விரும்புகின்றபடி கொண்டாடுகின்ற மக்களாவோம். "பலியை அல்ல இரக்கத்தையே விரும்புகிறேன்" என்ற கருத்தை இந்த யூபிலி ஆண்டில் முன்னெடுத்துச் செல்வோம்.

# இம்செசோ நிறுவனத்தின் கலைவிழா

நானாட்டான் பிரதேசத்தில் கல்வி மற்றும் சமூகப்பணிகளை ஆற்றிவரும் இம்செசோ (IMSESO) நிறுவனம் (அமல உற்பவக் கன்னி மரியாளின் கல்வி மற்றும் சமூகப் பணிகளுக்கான அமைப்பு) எதிர்வரும் மே மாதம் 15ஆம் திகதி மாலை 7.00 மணிக்கு முருங்கன் கிறிஸ்து அரசர் ஆலய முன்றலில் கலைவிழா நிகழ்வை நடாத்தவுள்ளது.

பாடசாலை மாணவர்கள் மற்றும் பிரதேசக் கலைஞர்கள் இக்கலை நிகழ்வுகளை நிகழ்த்தவுள்ளனர். மன்னார் மறைமாவட்ட அப்போஸ்தலிக்கப் பரிபாலகர் மேதகு ஆயர் யோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

அத்துடன், பாராளுமன்ற உறுப்பினர்கள், வடமாகாண சபை அமைச்சர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், அரச அதிகாரிகள், கல்வி அதிகாரிகள், பொதுமக்கள் எனப் பலரும் இந்நிகழ்வில் கலந்து சிறப்பிக்க உள்ளனர்.

இக்கலைவிழா நிகழ்வின் சிறப்பு நிகழ்வாக இன்னிசைக் கச்சேரியும், இம்செசோ (IMSESO) நிறுவனத்தின் வளர்ச்சிக்காக விற்பனை செய்யப்பட்ட அதிஸ்ரலாபச் சீட்டுகள் அதிஸ்ரம் பார்க்கும் நிகழ்வும் நடைபெறும். அனைவரும் திரண்டு வருகை தந்து ஆதரவு வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

*தகவல் : எஸ். கொண்சன்ரைன் ஸ்தாபகர், தலைவர், இம்செசோ (IMSESO)*

பறப்பாங்கண்டல் பெரிய கோவில்

# பண்டைய திருப்பாடுகளின் காட்சி நிகழ்வுகள் மீண்டும் அரங்கேறியது

- வேதியர் இ. யக்கோவு சேரம் -

கத்தோலிக்க திருமறை வாழ்வு இறைமகன் இயேசுவின் பாடுகள், இறப்பு, உயிர்ப்பு எனும் பாஸ்கா மறைபொருளை அடித்தளமாகக் கொண்டுள்ளது. இந்த நம்பிக்கையைப் பலர் அறிந்து ஏற்றுக்கொள்ளவும், ஏற்றுக்கொண்டவர்கள் அந்த நம்பிக்கையில் ஆழம்பெறவும் மக்கள் மனங்களில் இயேசுவின் பாஸ்கா நிகழ்ச்சிகளை ஊன்றச் செய்யவும் சிறந்த ஊடகமாக திருப்பாடுகளின் காட்சி நிகழ்வுகள் பயன்படுகின்றன.

இன்று ஈழத்துத் திருஅவையில் (திருச்சபையில்) திருப்பாடுகளின் காட்சிகள் பல சிறப்பான வளர்ச்சிப்படிகளைக் கண்டு மக்களுக்கு மறைச்செய்திகளைப். பரப்புரை செய்கின்றன. இந்த உயர் வளர்ச்சியானது ஆயர்கள், அருட்பணியாளர்கள், கலைஞர்கள் மேற்கொண்ட கடின உழைப்பின் கனிகளாகும்.

எனினும் முற்காலத்தில் நம் மண்ணில் நடைமுறைப் படுத்தப்பட்டுவந்த திருக்காட்சி மரபுமுறைகள் இன்றும் பல இடங்களில் பேணி, பின்பற்றி, காக்கப்பட்டு வருவதைக் காணமுடிகின்றது. இது கலைகள் காலத்தால் அழியாது எனும் கருத்தைக் கூறிநிற்கின்றது. பழமையைப் பேணுதல் பாரில் மனுக்குலத்துக்கு ஆற்றும் மாபெரும் பணி. இது இரக்கப் பெருக்குள்ள இறைவனின் மாட்சியை எடுத்து இயம்பும் செயல்.

ஈழ வரலாற்றில் இயேசுவின் திருப்பாடுகளின் காட்சி முதன் முதலில் நிகழ்த்தப்பட்ட பெருமையை பறப்பாங்கண்டல் தூய கூட்டத்து மாதா பெரிய கோயில் பெற்றிருக்கின்றது. இத்திருக்காட்சிச் செயற்பாடு இற்றைக்கு 300 ஆண்டுகளுக்கு முன் இப்பேராலயத்தில் வாழ்ந்த தூய யோசவ்வாஸ் முனிவரின் எண்ணத்தில் இறைவன் இட்ட திட்டமாகும். இந்த எண்ணக்கருவை யோசவ்வாஸ் அடிகளாரின் மறைபரப்புத் துணையாளரும், கத்தோலிக்க இலக்கியத்தின் தந்தையுமான யாக்கோமே கொண்சால்வேஸ் அடிகளார் பாரத நாட்டின் பொம்மலாட்டக்கலையை வேராகக்கொண்டு நெறிப்படுத்தி நிகழ்வாக்கினார். இதனால் ஏற்பட்ட ஆன்மீகப்பயன்கள் எண்ணிலடங்கா. இதைக் கருத்திற்கொண்டு நாட்டின் எல்லாப் பாகங்களிலும் இத்திருச்செயல் பரவலாக்கப்பட்டது என்பது வரலாறு கூறும் வற்றாத உண்மை.



அன்றிலிருந்து 1992ம் ஆண்டுவரை பறப்பாங்கண்டல் பேராலயத்தில் திருப்பாடுகளின் காட்சி நிகழ்வு மாதோட்ட கத்தோலிக்க மக்களால் பக்திப்பற்றுதலுடன் நடாத்தப்பட்டு வந்தது. பின்வந்த ஆண்டுகளில் ஏற்பட்ட நாட்டின் குழப்ப நிலைகளின் விளைவினால், இத்திருச்செயலை நிகழ்த்த முடியாமற்போனமை கவலைக்குரியது. எனினும் இறைவனின் இரக்கப் பார்வையினால் இவ்வாண்டு (2016) புனித வாரத்தில் இத்திருக்காட்சியை இக்கோவிலில் நடாத்தும் வாய்ப்புக் கிட்டியது. இக்காட்சிக்குப் பயன்படும் திருச்சிலுவை, கர்த்தர் சுரூபம், உயிர்த்த ஆண்டவர் திருச்சுரூபம் என்பன இக்கோவிலின் பங்காளர்கள் வதியும் வஞ்சியன்குளம், முருங்கன் கன்னாட்டி, உயிர்த்தராசன் குளம் ஆகிய கிராமங்களில் வைத்துப் பேணப்பட்டு வருகின்றன. இத்திருநிகழ்வை எவ்வாறு நிகழ்த்தி முடிப்பது? நீண்டகால இடைவெளிக்குப்பின் இதை நிகழ்த்துவது இயலுமா? எனும் அச்சம், ஐயப்பாடுகள் எம் மக்களிடையே ஏற்படத்தான் செய்தன. ஆயினும் எம் நம்பிக்கையின் நாயகன் எல்லாத் தடைகளையும் தகர்த்தெறிந்து இதற்குரிய எல்லா வரங்களையும் வளங்களையும் அள்ளித்தந்தார்.

மன்னார் மறைமாவட்ட அப்போஸ்தலிக்கப் பரிபாலகர் பேரருள்திரு கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை அவர்களது ஒப்புதல், குருமுதல்வர் அருட்திரு விக்டர் சோசை அவர்களது ஆலோசனைகள் கிடைக்கப்பெற்றது. திருப்பண்டங்கள் பேணப்பட்டுவரும் கிராமங்களின் பங்குத்தந்தையர்களான அருட்திரு. ஞானாதிக்கம், அருட்திரு. பீற்றர் மனோகரன், அருட்திரு. கொட்வின் கமிலஸ் ஆகியோரினதும், மகா சபையினரதும் வழிகாட்டுதல் பெருந்துணையாய் அமைந்தது. இதனால் நாம் எதிர்பார்த்ததற்கும் மேலாக பங்காளர்கள் வதியும் கிராம மக்கள் உணர்வுமேலிட ஒருங்கிணைந்து தவக்கால 6ம் வாரத்தில் திருச்சுரூவங்களை பாடல்கள் செபங்களுடன் பவனியாக இக்கோவிலுக்கு எடுத்துவந்தனர். இது எம்மக்கள் இயேசுவின்மீது கொண்டுள்ள நம்பிக்கைக்குச் சான்றாக அமைந்தது. இதை நிகழ்த்தும் பொறுப்பை கன்னாட்டி திரு. செபமாலை சராம் ஏற்றுக்கொண்டார். (தொடர்ச்சி 14ஆம் ப்க்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைத் திருச்சபைச் செய்திகள்

# நல்லாட்சி அரசுமீது மக்கள் நம்பிக்கை இழந்து வருகின்றனர்

### யாழ் ஆயர் கூறுகிறார்

வடக்கு மக்கள் புதிய அரசின்மீது வைத்திருந்த நம்பிக்கை தற்போது குறைந்து வருவதாக யாழ். மறைமாவட்ட ஆயர் மேதகு ஜஸ்ரின் பேனாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை ஜேர்மன் நாட்டுப் பாராளுமன்ற உறுப்பினர்களிடம் தெரிவித்துள்ளார்.

கடந்த ஏப்ரல் 8ஆம் திகதி யாழ்ப்பாணத்திற்கு வருகைதந்திருந்த 9 பேர் அடங்கிய ஜேர்மன் பாராளுமன்ற அங்கத்தவர்கள் யாழ். ஆயரைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இக்கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும்போதே யாழ். ஆயர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுபற்றி அவர் மேலும் தெரிவிக்கையில், புதிய அரசு ஆட்சிக்கு வந்தபின்னர் தென்னிலங்கையிலும், வடஇலங்கையிலும் எவ்வாறான மாற்றங்கள் நடைபெறுகின்றன என்பது தொடர்பாக அறிவதற்கு ஜேர்மனியப் பாராளுமன்ற அங்கத்தவர்கள் இங்கு வந்திருந்தனர்.

அந்தவகையில் வடக்கில் எவ்வாறான மாற்றங்கள் இடம்பெறுகின்றன என்பது தொடர்பில் என்னிடம் வினவினர். நான் அவர்களிடம் சில விடயங்களைக் குறிப்பிட்டிருந்தேன். அதாவது, வடபகுதி மக்கள் புதிய அரசில் நம்பிக்கை வைத்திருந்தார்கள். ஆனால் அந்த நம்பிக்கை தற்போது குறைந்துகொண்டு போகிறது.

புதிய அரசின்மீது வடபகுதி மக்களின் நம்பிக்கை குறைவதற்கான காரணம், வடபகுதி மக்கள் 25 வருடங்களுக்கு மேலாக இடம்பெயர்ந்துள்ளார்கள். பலாலி, ஊறணி, மயிலிட்டி, காங்கேசன்துறை, வசாவிளான் போன்ற இடங்களில் இருந்து இடம்பெயர்ந்து வேறு இடங்களில் வாழ்கிறார்கள். அவர்களை மீளக்குடியேற்றுவதற்கு தற்போதுள்ள புதிய அரசு முயற்சி எடுத்து வருகின்றபோதிலும் அந்த முயற்சி போதுமானதாக இல்லை.



அடுத்ததாக சிறையில் இருக்கும் எமது அரசியல் கைதிகள் அனைவரது பெயர் விபரங்களை அரசு வெளியிட வேண்டும். அவர்களின் வழக்குகளைத் துரிதப்படுத்த வேண்டும்.

காணாமல்போனவர்களின் விபரங்களைத் தெரிவித்து காணாமற்போனவர்கள் இருக்கின்றார்களா? அல்லது இறந்து விட்டார்களா? என்ற முடிவினை மக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும். இவற்றை அறிவதில் மக்கள் ஆவலாக இருக்கிறார்கள்.

மேலும், போரினால் அதிகம் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களில் உள்ள மக்களுக்கு அதிகளவான உதவிகளைப் பெற்றுக்கொடுத்து அவர்களை மறுபடியும் நல்வாழ்வுக்கு இட்டுச்செல்ல வேண்டுமெனவும் அவர்களுக்கு தெரிவித்ததாகக் கூறினார்.

## தேவாலய உண்டியலில் திருடியவர் இயேசுவின் திருச்சுருபத்தின் அருகே சடலமாக மீட்பு

சிலாபம் மறைமாவட்டத்திற்குட்பட்ட கற்பிட்டி பாலக்குடா பகுதியில் அமைந்துள்ள கத்தோலிக்க தேவாலயத்தின் உண்டியலை உடைத்துப் பணத்தைத் திருடியதாகச் சந்தேப்படும் ஒருவர் திருடிய பணத்துடன் ஆலயத்திலுள்ள இயேசுவின் திருச்சுருபத்தின் அருகில் உயிரிழந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளதாகக் கற்பிட்டி பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நபர் ஆலயத்தின் ஜன்னல் கதவின் ஊடாக நுழைந்திருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுவதோடு காலையில் மின்குமிழ்களை அணைத்துவிடுவதற்காக ஆலயத்தினுள் சென்ற பெண் ஒருவர் உயிரிழந்து கிடந்தவரை அவதானித்து உடன் அதுபற்றி அயலவர்களுக்குத் தகவல் வழங்கியதாக பொலிஸார் தெரிவித்தனர்.

எரிந்துகொண்டிருந்த விளக்கு ஒன்றும் உயிரிழந்து கிடந்தவரின் அருகில் காணப்பட்டதாகவும் உண்டியலில் திருடப்பட்ட பணம் அவரது சாரத்தினுள்ளும் அவருக்கு அருகிலும் கிடந்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர். உண்டியலில் இருந்து பணத்தை வெளியில் எடுப்பதற்காக நீண்ட தடி ஒன்றின் முனையில் சுவிங்கத்தை ஒட்டியிருந்ததாகவும் அந்தத் தடியும் சடலத்திற்கருகில் கிடந்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

அண்மைக்காலமாக இந்நபர் குறித்த தேவாலயத்தினுள் நுழைந்து இவ்வாறு உண்டியலில் பணத்தைத் திருடி வந்திருப்பதாகவும் மாதத்தில் முதலாவது வெள்ளிக்கிழமை ஆலயத்தில் அதிகமான பணம் இருக்கும் என்பதாலேயே இந்நபர் பணத்தைத் திருட வந்திருக்கலாம் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்திருந்தவர் யார் என்ற விடயங்களை அறிந்து கொள்வதற்கான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருவதாக கற்பிட்டி பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

மன்னா விநியோகஸ்தர்களே!

உங்கள் கைகளுக்குக் கிடைக்கும் மன்னாவை

காலம் தாமதிக்காமல் உடனடியாக விநியோகிங்கள்!

- மன்னா நிர்வாகம் -

# இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை புதிய நியமனங்கள் - 2016

**தலைவர்**
அதிமேதகு கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை

**உபதலைவர்**
மேதகு ஆயர் ஜோசப் பொன்னையா ஆண்டகை

**செயலாளர்**
மேதகு ஆயர் வலன்ஸ் மெண்டிஸ் ஆண்டகை

**நிரந்தர உறுப்பினர் குழு**
அதிமேதகு கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை
மேதகு ஆயர் ஜோசப் பொன்னையா ஆண்டகை
மேதகு ஆயர் வலன்ஸ் மெண்டிஸ் ஆண்டகை
மேதகு ஆயர் வியானி பர்னாந்து ஆண்டகை
மேதகு ஆயர் ஹெரல்ட் அன்ரனி பெரேரா ஆண்டகை

**நிதித்துறை ஆணைக்குழு**
மேதகு ஆயர் வின்ஸ்டன் பர்னாந்து (SSS) ஆண்டகை (தலைவர்)
மேதகு துணை ஆயர் மெக்ஸ்வல் கிறன்வில் சில்வா ஆண்டகை (உபதலைவர்)
மேதகு ஆயர் யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை (உபதலைவர்)

**துறவற, உலகற சபைகள், குருக்கள், குருமாணவர்களுக்கான தேசிய ஆணைக்குழு**
மேதகு ஆயர் வின்ஸ்டன் பர்னாந்து SSS ஆண்டகை (தலைவர்)
மேதகு ஆயர் நோர்பட் அந்திராடி (O.M.I) ஆண்டகை (உபதலைவர்)
மேதகு துணை ஆயர் இம்மானுவேல் பர்னாந்து ஆண்டகை (உபதலைவர்)

**கல்வி, மறைக்கல்வி, விவிலியப் பணிகளுக்கான தேசிய ஆணைக்குழு**
மேதகு துணை ஆயர் மெக்ஸ்வல் கிறன்வில் சில்வா ஆண்டகை (தலைவர்)
மேதகு ஆயர் நோயல் இம்மானுவேல் ஆண்டகை (உபதலைவர்)

**மறைபரப்புப் பணிக்கான தேசிய ஆணைக்குழு**
மேதகு ஆயர் ஹெரல்ட் அன்ரனி பெரேரா (தலைவர்)
மேதகு ஆயர் வலன்ஸ் மெண்டிஸ் (உபதலைவர்)

**திருவழிபாடு, கலாச்சாரப் பணிகளுக்கான தேசிய ஆணைக்குழு**
மேதகு ஆயர் கிளிட்டஸ் பெரேரா (O.S.B) ஆண்டகை (தலைவர்)
மேதகு ஆயர் நோயல் இம்மானுவேல் ஆண்டகை (உபதலைவர்)

**சமூகத் தொடர்பாடலுக்கான தேசிய ஆணைக்குழு**
மேதகு ஆயர் ரேமன் விக்ரமசிங்க ஆண்டகை (தலைவர்)
மேதகு துணை ஆயர் இம்மானுவேல் பர்னாந்து ஆண்டகை (உபதலைவர்)

**பொதுநிலையினருக்கான தேசிய ஆணைக்குழு**
மேதகு ஆயர் நோபர்ட் அந்திராதி (O.M.I) ஆண்டகை (தலைவர்)
மேதகு ஆயர் கிளிட்டஸ் பெரேரா (O.S.B) ஆண்டகை (உபதலைவர்)
மேதகு ஆயர் யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை (உபதலைவர்)

**நீதி, சமாதானம், மனித முன்னேற்றப் பணிகளுக்கான தேசிய ஆணைக்குழு**
மேதகு ஆயர் வியானி பர்னாந்து ஆண்டகை (தலைவர்)
மேதகு ஆயர் யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை (உபதலைவர்)

**மத உரையாடல், உறவுகளுக்கான தேசிய ஆணைக்குழு**
மேதகு துணை ஆயர் இம்மானுவேல் பர்னாந்து ஆண்டகை (தலைவர்)
மேதகு ஆயர் கிளீட்டஸ் பெரேரா (O.S.B) ஆண்டகை (உபதலைவர்)

**புலம்பெயர்ந்தோர், உடல் நலம், சுற்றுலா, சிறைச்சாலை பணிகளுக்கான தேசிய ஆணைக்குழு**
மேதகு ஆயர் ஹெரல்ட் அந்தனி பெரேரா ஆண்டகை (தலைவர்)
மேதகு துணை ஆயர் இம்மானுவேல் பர்னாந்து ஆண்டகை (உபதலைவர்)

**பொது மக்கள் தொடர்பு**
அதிமேதகு பேராயர் மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை

**ஒழுக்கவியல், திருச்சபைச் சட்ட ஆலோசகர்**
மேதகு நோபர்ட் அந்திராதி (O.M.I) ஆண்டகை

**மிசியோ புலமைப் பரீட்சை கல்விக்கான அமைப்பு**
மேதகு ஆயர் ஹெரல்ட் அன்தனி பெரேரா ஆண்டகை (தலைவர்)
மேதகு துணை ஆயர் இம்மானுவேல் பர்னாந்து ஆண்டகை (உபதலைவர்)

**இலக்குக் கல்விக்கனான ஆயர் அமைப்பு**
மேதகு ஆயர் வலன்ஸ் மெண்டிஸ் ஆண்டகை (பொறுப்பு ஆயர்)
அருட்பணி. டோனி மார்டீன் அடிகளார் (இயக்குனர்)

**யோசவ்வாஸ் செயலகம்**
மேதகு ஆயர் வியானி பர்னாந்து ஆண்டகை

**யோசவ்வாஸ் நிதியம்**
அதிமேதகு பேராயர் மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை

**லியோனல் B. இம்மானுவேல் நிதியம்**
மேதகு ஆயர் வின்ஸ்டன் பர்னாந்து (SSS) ஆண்டகை (தலைவர்)
மேதகு ஆயர் யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை (உபதலைவர்)

**உதவிச் செயலர் கத்தோலிக்க ஆயர் பேரவை**
அருட்பணி. டோனி மாட்டீன் அடிகளார்.

## புதிய தேசிய இயக்குனர்கள்

**1. பொதுநிலையினர் ஆணைக்குழுவின் தேசிய இயக்குனர்**
- அருட்தந்தை றோய் கிளரன்ஸ்

**2. சமாதானம் மற்றும் மனித அபிவிருத்தி தொடர்பான ஆணைக்குழுவின் தேசிய இயக்குனர்**
- அருட்தந்தை சாந்தி குமார் வெலிவிட்ட

**3. கத்தோலிக்க இளைஞர் சங்கத்தின் தேசிய இயக்குனர்**
- அருட்தந்தை மல்கம் பெரேரா

**4. சமூகத் தொலைத்தொடர்பாடல் தேசிய இயக்குனர்**
- அருட்தந்தை லால் புஷ்பதேவ, (அமதி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறையிரக்கத்தின் திருமுகம்

## இறையிரக்கத்தின் சிறப்பு யூபிலி ஆண்டை அறிவிக்கும் முகமாக திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் எழுதிய ஆணை மடல் – தொடர் 5

(சென்றமாதத் தொடர்ச்சி)

25 எண்களைக் கொண்ட இந்த ஆணை மடல் தொடர் இந்த இதழுடன் நிறைவு பெறுகிறது.



**22.** யூபிலி ஆண்டு பேறுபலன் வழங்குவதையும் உள்ளடக்கியது. இந்தப் பழக்கம் இரக்கத்தின் புதிய ஆண்டில் இன்னும் அதிக பொருளுள்ளதாகின்றது. இறைவனின் மன்னிப்புக்கு எல்லையே இல்லை. இயேசுக் கிறிஸ்துவின் மரணம் மற்றும் உயிர்ப்பில் கடவுள் அவரது அன்பையும், மனித பாவம் அனைத்தையும் அழிக்கவல்ல அதன் ஆற்றலையும் இன்னும் அதிகமாகத் தெளிவாக்குகின்றார். பாஸ்கா மறைபொருள் மற்றும் திருச்சபையின் இடைநிலைப்பணி வழியாக இறைவனோடு ஒப்புரவு என்பது சாத்தியமாக்கப்பட்டது. இவ்வாறு கடவுள் மன்னிக்க எப்போதும் தயாராயிருக்கின்றார். மேலும் எப்போதும் புதியதாகவும், வியக்கத்தக்க விதத்திலும் மன்னிப்பதற்கு அவர் எப்போதும் அயர்வதில்லை. இதுதவிர, பாவத்தின் அனுபவத்தை நாம் அனைவரும் அறிந்திருக்கின்றோம். நாம் நிறைவுக்காய் அழைக்கப்பட்டிருக்கின்றோம் என்பதை நாம் அறிவோம் (காண் மத் 5:48). இருப்பினும் பாவத்தின் பெரும் சுமையை நாம் உணர்கின்றோம். அருளின் மாற்றக்கூடிய ஆற்றலை நாம் உணர்ந்தாலும், தவறிய நமது இயல்பிற்கேயுரிய பாவத்தின் விளைவுகளையும் நாம் உணர்கின்றோம். மன்னிக்கப்பட்டிருந்தும் நமது பாவங்களின் போராட்டமான விளைவுகள் தொடர்ந்து இருக்கின்றன. ஒப்புரவு அருட்சாதனத்தில் கடவுள் நம் பாவங்களை மன்னிக்கின்றார். அவர் உண்மையாகவே நம் பாவங்களை கழுவிப் போக்குகின்றார். இருப்பினும் நாம் சிந்திக்கும் செயல்படும்விதத்தின்மீது பாவம் எதிர்மறையான விளைவுகளை விட்டுச்செல்கின்றது. ஆனால் கடவுளின் இரக்கம் இதனினும் வலிமையானது. இறைத்தந்தை கிறிஸ்துவின் மணவாட்டியான திருச்சபை வழியாக மன்னிக்கப்பட்ட பாவியை அணுகுகிறார். பாவத்தின் விளைவுகளால் விடப்பட்ட மிச்சம் மீதியினின்றும் அவரை விடுவிக்கின்றார். இவ்வாறு அந்த நபரை பிறரன்புடன் செயலாற்றச் செய்கின்றார் மற்றும் மீண்டும் பாவத்தில் விழாமல் அன்பில் வளரச்செய்கின்றார். இவையெல்லாம் இறைவன் சார்பில் பேறுபலன் ஆகின்றன.

திருச்சபை புனிதர்களின் தோழமையோடு வாழ்கின்றது. நற்கருணையில் கடவுளின் கொடையான இந்தத் தோழமை, புனிதர்களோடும் எண்ணமுடியாத எண்ணிக்கையிலான (காண் திவெ 7:4) பேறுபெற்றோரோடும் நம்மை இணைக்கும் ஆன்மீகத் தோழமையாகின்றது. அவர்களின் புனிதத்துவம் நமது பலவீனத்தில் நமக்குத் துணையாய் வருகின்றது. இது திருச்சபையை அதன் தாய்மைக்குரிய செபங்களோடும், வாழ்க்கை முறையோடும் சிலரின் பலவீனங்களை மற்றவர்களின் ஆற்றலால் திடப்படுத்தச் செய்கின்றது.

எனவே புனித ஆண்டின் பேறுபலனை வாழ்வது என்பது, இறைத்தந்தையின் மன்னிப்பு நம்பிக்கையாளரின் வாழ்நாள் முழுவதும் நீடிக்கிறது என்னும் உறுதிப்பாட்டுடன் இறைத்தந்தையின் இரக்கத்தை அணுகிச்செல்வதாகும். பேறுபலன்களை சம்பாதிப்பது என்பது கடவுளின் அன்பும் மன்னிப்பும் எல்லாவிடத்திலும் பரவும்படியாக எல்லார்மீதும் கிறிஸ்துவின் மீட்பின் கனிகளை பொழியும் திருச்சபையின் புனிதத்துவத்தை அனுபவிப்பதாகும். நமது பாவங்களை மன்னிக்கும்படியாகவும், அவரின் இரக்கமுள்ள பேறுகளால், நம்மை நிரப்பும்படியாகவும் வேண்டி இந்த யூபிலியை கருத்தூன்றி வாழ்வோமாக.

**23.** இரக்கத்தின் ஒரு கண்ணோட்டம் திருச்சபையின் வரையறையையும் தாண்டிச் செல்கின்றது. இரக்கத்தை இறைவனின் முக்கிமான பண்பாக எண்ணுகின்ற யூதம் மற்றும் இஸ்லாம் மதங்களைச் சார்ந்தது. மனுக்குலம் முழுவதோடும் பகிரத்தக்க குறைவில்லாத செல்வத்தின் ஊற்றாக வரலாற்றில் தொடரும் இந்த இரக்கத்தைப்பற்றிய வெளிப்பாட்டை இஸ்ரயேலர்தான் முதலில் பெற்றனர். நாம் ஏற்கனவே கண்டதுபோல, பழைய ஏற்பாட்டுப் பக்கங்கள் இரக்கத்தில் தோய்ந்துள்ளன. ஏனெனில் அவை இஸ்ரயேலர்களின் வரலாற்றின் மிகச் சோதனையான காலங்களில் கடவுள் அவர்கள் சார்பாய் ஆற்றிய செயல்களை விவரிக்கின்றன. படைத்தவருக்கு இஸ்லாம் சாற்றுகின்ற பல சிறப்புப் பெயர்களுள் “இரக்கமும், பரிவும்”, என்பவையுமாகும். தங்களின் அன்றாட பலவீனங்களில் இரக்கத்தினால் உடன் நடந்து பாதுகாக்கப்பட்டதாக உணரும் நம்பிக்கையுள்ள முஸ்லீம்களின் இந்தச் செபம் அடிக்கடி செபிக்கப்படுகின்றது. இறையிரக்கத்தின் கதவுகள் எப்போதும் திறந்தேயிருப்பதால் அதற்கு யாரும் தடைபோட முடியாது என்று அவர்களும் நம்புகின்றார்கள்.

இறைவனின் இரக்கத்தை கொண்டாடும் இந்த யூபிலி ஆண்டு இந்தச் சமயங்களோடும், பிற மாண்புடைய சமயப் பாரம்பரியங்களுடனும் ஓர் உரையாடலை வளர்க்கும் என நான் நம்புகின்றேன். நாம் ஒருவரை ஒருவர் அறிந்து இன்னும் சிறப்பாக ஒருவரை ஒருவர் புரிந்துகொள்ளும்படி, இது நல்ல உரையாடல்களுக்கு வழிகோலுவதாக! எவ்வகை மூடிய மனநிலையையும், மதிப்பின்மையையும் நீக்குவதாக! எவ்வகை வன்முறையையும் பாகுப்பாட்டையும் விரட்டியடிப்பதாக!

**24.** இப்போது என் எண்ணம் இரக்கத்தின் அன்னையின் பக்கம் திரும்புகின்றது. நாம் எல்லோரும் கடவுளின் மென்மைத் தன்மையை கண்டுபிடிக்கும் மகிழ்ச்சியை அடையுமாறு அவரது திருமுகத்தின் இனிமை நம்மை இந்தப் புனித ஆண்டில் பாதுகாப்பதாக. மரியாவைப்போல மனுவுருவாதலின் உயர் மறை பொருளை ஊடுருவியவர் யாரும் இல்லை. அவரின் வாழ்நாள் முழுவதும் மனுவுருவான இரக்கத்தின் பிரசன்னத்தைச் சார்ந்தே அமைந்திருந்தது. கடவுளின் அன்பின் மறைபொருளில் மிக நெருக்கமாய்ப் பங்கெடுத்ததால் பாடுபட்டு உயிர்த்தவரின் தாய் இறையிரக்கத்தின் தூயகத்திற்குள் நுழைந்துள்ளாள்.

இறைமகனின் தாயாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, மரியாள் தொடக்கத்திலிருந்தே கடவுளுக்கும் மனிதருக்குமிடையே உடன்படிக்கைப் பேழையாக இருக்க இறை அன்பால் தயாரிக்கப்பட்டார். அவரது மகன் இயேசுவோடு முழுமையான இயைபோடு இறையிரக்கத்தை மரியாள் அவரது இதயத்தில் போற்றிப் பாதுகாத்தார்.

எலிசபெத்தின் வீட்டின் வாயில்நிலைகளில் அவர் பாடிய புகழ்பாடல் “தலைமுறை தலைமுறையாய்,” (லூக். 1:50) தொடரும் கடவுளின் இரக்கத்திற்கு அர்ப்பணிக்கப்பட்டதாகும். அந்த மரியாவின் தீர்க்கதரிசன வார்த்தைகளில் நாமும் இணைக்கப்பட்டுள்ளோம். இறையிரக்கத்தின் கனிகளை அனுபவிக்க புனித ஆண்டின் கதவுகளைத் தாண்டிச் செல்லும்போது இது நமக்கு ஆறுதல் மற்றும் திடத்தின் ஊற்றாய் அமையும்.

சிலுவையடியில் அன்புச்சீடர் எனப்பட்ட யோவானோடு சேர்ந்து இயேசுவால் பேசப்பட்ட மன்னிப்பின் வார்த்தைகளுக்கு மரியாள் சாட்சியானார். இயேசு தன்னை சிலுவையில் அறைந்தவர்களுக்கு காட்டிய இரக்கத்தின் உச்ச வெளிப்பாடு கடவுளின் இரக்கம் எந்த அளவுக்கு எட்டக்கூடியது என்பதைக் காட்டுகின்றது. இறைமகனின் இரக்கம் எல்லைகளைக் கடந்தது. எவ்வித விதிவிலக்குமின்றி எல்லாருக்கும் சென்றடைகின்றது என்பதற்கு மரியா சான்றுபகர்கின்றார். அவரது தயாளமுள்ள திருக்கண்களை நம்மீது திருப்புவதில் அயர்ந்து போகாதபடியும், அவரது மகன் இயேசுவின் இரக்கத்தின் திருமுகத்தைத் தியானிக்க நம்மை தகுதிப்படுத்தும்படியும் மிகப் பழமையான, அதே சமயம் எப்போதும் புதிதான, “கிருபை தயாபத்து மாதாவே” என்னும் செபத்தின் வழியாக அவரை அழைப்போம்.

இறையிரக்கத்தை தங்களின் வாழ்வின் பணியாகக் கொண்ட புனிதர்கள் மற்றும் பேறுபெற்றோரை நோக்கியும் நமது செபம் நீள்கின்றது. சிறப்பாக, இறையிரக்கத்தின் பெரும் தூதரான புனித பவுஸ்தீனா கொவால்ஸ்காவைப் பற்றியும் நான் நினைத்துப் பார்க்கின்றேன். இறையிரக்கத்தின் ஆழத்திற்குள் இறங்க அழைக்கப்பட்ட அவர், கடவுளின் இரக்கத்திற்கேற்ப வாழவும் எப்போதும் நடக்கவும் வேண்டிய அருளையும் அவரது அன்பின்மீது அசைக்கமுடியாத நம்பிக்கையும் கொண்டிருக்க நமக்காகப் பரிந்து பேசுவாராக.

**25.** எனவே இறைத்தந்தை நம் எல்லோருக்கும் தொடர்ந்து அளிக்கும் இறை இரக்கத்தை நமது அன்றாட வாழ்வில் வாழ்வதற்கு அர்ப்பணிக்கப்பட்ட இந்தச் சிறப்பு யூபிலி ஆண்டை அளிக்கின்றேன். இந்த யூபிலி ஆண்டில் கடவுள் நம்மை ஆச்சரியப்படுத்த நம்மை அனுமதிப்போம். அவர் தமது இதயக்கதவைத் திறந்து விடுவதற்கும், அவர் நம்மை அன்பு செய்கிறார் என்பதை மீண்டும் வலியுறுத்தவும் மற்றும் அவரது அன்பை நம்மோடு பகிர்ந்துகொள்ளவும் அவர் எப்போதும் அயர்வதில்லை. கடவுளின் இரக்கத்தை அறிவிக்கவேண்டிய அவசியத் தேவையைத் திருச்சபை உணர்கின்றது. இரக்கத்தின் பற்றுறுதியுள்ள போதகராக அவள் மாறும்போதுதான் அவளது வாழ்வு உண்மையுள்ளதாகவும், நம்பகத்தன்மையுடையதாகவும் இருக்கும்.

பெரும் எதிர்நோக்கும், முரண்பாடுகளின் அடையாளங்களும் நிறைந்திருக்கின்ற இக்காலத்தில் இன்னும் சிறப்பாக, அவளது தலையாய கடமை கிறிஸ்துவின் திருமுகத்தை தியானித்து கடவுளின் இரக்கத்தின் பெரும் மறைபொருளுக்கு ஒவ்வொருவரையும் அறிமுகம் செய்வதுதான் என்பதை அவர் அறிந்துள்ளார். இரக்கத்தை இயேசுக் கிறிஸ்துவின் வெளிப்பாட்டின் உட்கரு என அறிவிப்பது மற்றும் வாழ்வதன் வழியாக இரக்கத்திற்கான நம்பகமான சான்றாக அனைத்திற்கும் மேலாக இருக்க திருச்சபை அழைக்கப்பட்டிருக்கின்றது. தூய திரித்துவத்தின் இதயத்திடமிருந்தும் கடவுளின் மறைபொருளின் ஆழத்திலிருந்தும் இரக்கம் எனும் பேராறு ஊற்றெடுத்து இடைவிடாமல் ஓடிக்கொண்டிருக்கின்றது. அதிலிருந்து எவ்வளவு பேர் முகர்ந்து கொண்டாலும், இந்த ஆறு எப்போதும் வற்றாது. ஒருவர் தேவையில் இருக்கும்போதெல்லாம், அவர் இதை அணுகலாம். ஏனெனில் கடவுளின் இரக்கம் எப்போதும் முடிவதில்லை. இதைச் சுற்றியிருக்கின்ற மறைபொருளின் ஆழம், அதனின்று ஊற்றெடுப்பதன் வளமையைப் போலவே வற்றாதது.

இந்த யூபிலி ஆண்டில், மன்னிப்பு, ஆற்றல், உதவி மற்றும் அன்பின் செய்திகளையும், அடையாளத்தையும், உறுதியாகவும் தெளிவாகவும் எதிரொலிக்கும் இறை வார்த்தையை திருச்சபை அறிவிப்பதாக. இரக்கத்தை நீடிப்பதில் அது தளர்ச்சியடையாமல் இருப்பதாக. இரக்கத்தையும் ஆறுதலையும் அளிப்பதில் நீடிய பொறுமை காப்பதாக. ஒவ்வொரு ஆண் பெண் ஆகியோரது குரலாய் இருப்பதாக. திருச்சபை முடிவின்றி உறுதியுடன் “ஆண்டவரே, உமது இரக்கத்தையும், உமது பேரன்பையும் நினைத்தருளும். ஏனெனில், அவை தொடக்கமுதல் உள்ளவையே” (திபா. 25:1) என்பதை திரும்பத் திரும்ப [illegible]

(முற்றும்)

# மே மாதம்

## தேவமாதாவின் வணக்க மாதம்



கத்தோலிக்க திருச்சபையில் பாரம்பரியமாக ஒருசில மாதங்கள் குறிப்பிட்ட புனிதர்களின் பக்திமுயற்சிக்காக ஒப்புக்கொடுக்கப்படுகின்றது. மார்ச் மாதம் – புனித சூசையப்பருக்கும், யூன் மாதம் மரியாளின் மாசற்ற இருதயத்திற்கும், நவம்பர் மாதம் இறந்த ஆன்மாக்களுக்கும், மே மாதம் தேவஅன்னைக்கும் ஒப்புக்கொடுக்கப்பட்ட மாதமாக சிறப்பிக்கப்படுகிறது.

மே மாதம் பரிசுத்த தேவ தாய்க்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட மாதம். இந்த மே மாதத்தில் பத்திமாபதியில் நமது நேசத்தாய் காட்சியளித்த நினைவுப்பெருவிழாவைக் கொண்டாடுகின்றோம். இம்மாதத்தில் உலகனைத்திலுமுள்ள விசுவாசிகள் பரிசுத்த மரியன்னையின்மீதான தங்கள் அன்பையும், பக்தியையும் பற்றுறுதியையும் தங்கள் ஆலயங்களிலும், இல்லங்களிலும் தங்கள் செபங்கள், பொருத்தனைகள், புதுமைகள் வாசித்தல், திருப்பலி ஒப்புக்கொடுத்தல் மூலமாகச் சமர்ப்பிக்கின்றார்கள்.

இம்மாதத்தில் விண்ணக அரசியாம் மரியன்னையின் அரியனையிலிருந்து கடவுளின் எல்லையற்ற அன்பும், இரக்கமும் நம்மிடம் பாய்ந்தோடி வருகிறது. எனவே இறையருளைப்பெற இம்மாதம் நம் தாயிடம் நம்மையும் குடும்பங்களையும் ஒப்படைத்து செபிப்போம்.

ஏன் மே மாதம் அன்னைக்கு உரித்தான மாதம் என்று சற்று சிந்திப்போம். “அது இரவு நேரம், கருமையான இருள் சூழ்ந்து அடைமழை பெய்துகொண்டிருந்தது. அந்தக் குடிசை வீட்டில் தாய் தனது ஒரு வயதுக் குழந்தையுடன் தூங்கிக் கொண்டிருந்தாள். வெள்ளத்தில் அடித்து வந்த கருந்தேள் வீட்டிற்குள் நுழைந்து, குழந்தையைக் கெட்டியாகப் பிடித்திருந்த தாயை பலமுறை கொட்டியது. துடித்துப்போனாள் அத்தாய். இறப்பின் வாசலுக்கே சென்றவளாகப் பயங்கர வலியை அனுபவித்தாள். வலி மிதமாகக் குறைந்தவுடன் அவள் மெல்லிய குரலில், ‘இறைவா! இக்கருத்தேள் என் குழந்தையைக் கொட்டாமல் என்னைக் கொட்டியதற்காக உமக்கு நன்றி’ என்று உணர்ச்சி பொங்கக் கூறினாள்.”

தாய் என்றால் இரக்கத்தின் சின்னம், தியாகத்தின் சின்னம், உன்னத அன்பின் உண்மை வெளிப்பாடு. தனது கடைசிக் கண்ணீர் துளிகள்வரை பிள்ளைகளுக்காகச் சேகரித்து தனது கனத்த வியர்வைத் துளிகளால் கல்மனதைக் கரைய வைப்பவள் தாய். தனக்கு உணவு இல்லையெனினும் தன் பிள்ளைகளின் வயிறு நிறைவதிலே தன்னை நிறைவுசெய்பவள் தாய். இந்நிலையில் நம் எல்லோருக்கும் சிலுவை அடியில் ஒரு தாய் தரப்பட்டாள். “உருவிலான் உருவாகி உலகிலே ஒரு மகன் உதிப்ப கருவிலாக் கருத்தாங்கி கண்ணீர்த் தாயான” மரியன்னையை எப்படி புகழ்வது? செபமாலையே அதற்குத் தகுந்த வழி!

### அன்னையும் செபமாலையும்


- “உங்கள் உள்ளங்களில், இல்லங்களில் நாட்டில் அமைதி நிலவ வேண்டுமெனில் ஒவ்வொரு நாளும் மாலையில் ஒன்றுகூடி செபமாலை செபிக்க வேண்டும்” - திருத்தந்தை 11ஆம் பத்திநாதர்.
- “செபமாலை மிக அழகான செபம். அதிக அளவில் அருள் வரங்கள் நிரம்பிய செபம். இயேசுவின் இதயத்தைத் தொடும் செபம்” - திருத்தந்தை 10ஆம் பத்திநாதர்.
- “செபமாலையைப் பிரமாணிக்கத்துடன் செபிக்கும் ஆன்மாக்கள் விண்ணகத்தில் சிறப்பான மகிமையை அடைவர்” - அன்னை மரியாள்.
- “செபமாலைப் பக்தியைப் பரப்புகிறவர்களுக்கு அவர்கள் வாழ்நாளிலும், மரண வேளையிலும் வானக நீதிமன்றம் முழுவதும் அவர்களுக்காகப் பரிந்துபேச எனது தெய்வ மகனிடமிருந்து உத்தரவு பெற்றுள்ளேன்” - அன்னை மரியாள்.
- “செபமாலையின்மீது பக்தியுள்ள ஆன்மாக்களை உத்தரிப்பு ஸ்தல வேதனையினின்று மீட்பேன்.” - அன்னை மரியாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகத் திருச்சபைச் செய்திகள்

# தூய ஆவியார் இன்றும் நம்மை ஆச்சரியத்தில் ஆழ்த்துகிறார்

## திருத்தந்தை பிரான்சிஸ்



முந்தைய காலத்தைப்போலவே இன்றும் தூய ஆவியாரின் செயற்பாடுகளுக்குத் தடைகளும், மறுப்பும் நம்மிடையே உள்ளன. எனினும் அவற்றைத் தாண்டி, தூய ஆவியார் இன்றும் நம்மை ஆச்சரியத்தில் ஆழ்த்துகிறார் என்று திருத்தந்தை பிரான்சிஸ் கூறினார்.

ஏப்ரல் 28ஆம் திகதி காலை சாந்தா மார்த்தா இல்லச் சிற்றாலயத்தில் ஆற்றிய திருப்பலியில், எருசலேமில் நடைபெற்ற சங்கம் குறித்து திருத்தூதர் பணிகள் நூலில் கூறப்பட்டுள்ள பகுதியை மையப்படுத்தித் தன் மறையுரையை திருத்தந்தை வழங்கினார்.

திருஅவையின் துவக்க காலத்தில், தூய ஆவியார் திருத்தூதர்களை பலவழிகளில் ஆச்சரியத்தில் ஆழ்த்தி, புது வழிகளைக் காட்டினார் என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தன் மறையுரையில் குறிப்பிட்டார்.

வேகவைக்கப்பட்ட கிழங்கை, சுடச்சுடக் கரங்களில் ஏந்தியிருப்பதை, தூய ஆவியார் செயலாற்றும் வழிகளுக்கு ஓர் உருவமாகக் கூறிய திருத்தந்தை, அத்தகைய சூழலில் வாழ்ந்த திருத்தூதர்களும், சீடர்களும் எருசலேம் சங்கத்தில் கூடியிருந்தனர் என்று சுட்டிக்காட்டினார்.

விருத்தசேதனம் பெறாதவர்களை திருஅவையில் ஏற்றுக்கொள்வதில் துவங்கிய மாற்றங்கள், தூய ஆவியாரின் அருளால், இன்றளவும் நம் மத்தியில் தொடர்கின்றன என்றும், மாற்றங்களை ஏற்றுக்கொள்வதில் இன்றும் நம் நடுவே தயக்கங்களும், எதிர்ப்புக்களும் எழுகின்றன என்றும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தன் மறையுரையில் குறிப்பிட்டார்.

திருஅவை வரலாற்றில் அன்றுமுதல் இன்றுவரை தூய ஆவியார் வழங்கிவரும் ஆச்சரியங்களைப் புரிந்துகொள்ளும் வரத்தையும், தூய ஆவியாரின் வழிநடத்துதலின்படி வாழும் வரத்தையும் வேண்டுவோம் என்று திருத்தந்தை தன் மறையுரையை நிறைவுசெய்தார்.

## ஆந்திரா மாநிலத்தில் கத்தோலிக்க ஆயர் தாக்கப்பட்டார்

இந்தியாவில் உள்ள ஆந்திர மாநிலத்தில் கத்தோலிக்க ஆயர் ஒருவருக்கு எதிராகக் கடுமையான தாக்குதல் நடத்தப்பட்டிருப்பதற்கு, ஆந்திரா மற்றும் தெலுங்கானா மாநிலங்களின் பல்வேறு கிறிஸ்தவ அமைப்புகள், தங்களின் கடும் கண்டனங்களை வெளியிட்டுள்ளன.

கடப்பா மறைமாவட்ட ஆயர் கலலா பிரசாத் (Gallela Prasad) அவர்கள் கருணாகரி (Karunagari) என்ற இடத்தில் திருப்பலி நிறைவேற்றிவிட்டு காரில் திரும்பி வந்துகொண்டிருந்தபோது, இனம்தெரியாத நபர்கள், ஆயர் மற்றும் வாகன ஓட்டுனரின் கண்களைக் கட்டி, தெரியாத ஓரிடத்தில் அடைத்து வைத்தனர். அங்கு அவர்களை இரவு முழுவதும் பல மணிநேரங்கள் தாக்கியுள்ளனர். ஏப்ரல் 25ஆம் திகதி இடம்பெற்ற இச்சம்பவம் 29ஆம் திகதி அன்று பொதுவில் அறிவிக்கப்பட்டது.

இவ்வன்முறை குறித்து அறிக்கை வெளியிட்டுள்ள ஹைதராபாத் பேராயர் தும்ம பாலா அவர்கள், இந்த வன்முறைக் கொடுமைகள் சிறுபான்மை சமூகத்தின் மூத்த உறுப்பினர்க்கு எதிராக நடத்தப்பட்டிருப்பது வியப்பளிக்கின்றது என்று குறிப்பிட்டுள்ளார்.

ஆந்திர மாநிலத்தில், கிறிஸ்தவர்களுக்கு எதிராக வன்முறைகள் ஏற்கனவே நடத்தப்பட்டிருந்தாலும், சமயத் தலைவர்களுக்கு எதிராக இடம்பெற்றிருப்பது இதுவே முதன்முறை என்று சொல்லப்படுகிறது.

## அன்னை தெரேசாவுக்கு பிரிட்டனின் அதிஉயர் விருது



உலக அளவில் இருக்கும் ஆசிய சமூக மக்களின் சாதனைகளை கௌரவிப்பதற்காக வழங்கப்படும் பிரிட்டனின் உயரிய நிறுவுனர் விருது (ஃபவுண்டர்ஸ் அவார்ட்) மறைந்த அன்னை தெரேசாவுக்கு வழங்கப்பட்டது.

இலண்டனில் அண்மையில் நடைபெற்ற விழாவில் கலந்துகொண்டு விருதைப் பெறுவதற்காக அன்னை தெரேசாவின் உறவினர்களில் தற்போது உயிருடன் இருக்கும் அவரது 72 வயதான மருமகள் அகிபேஜாஸியு இத்தாலியில் இருந்து வந்திருந்தார்.

கத்தோலிக்க மத கன்னியாஸ்திரியான தெரேசா கொல்கத்தாவில் 'மிஷினரி ஆப் சாரிட்டீஸ்' என்ற தொண்டு அமைப்பைத் தொடக்கி அந்நகரில் வசிக்கும் நலிந்த பிரிவினருக்கும் சாலையோரங்களில் வசிப்பவர்களுக்கும் சேவை செய்துவந்தார். அவர் 1997ஆம் ஆண்டு தனது 87 ஆவது வயதில் காலமானார்.

பிரிட்டனில் இருந்து 6ஆவது ஆண்டாக வழங்கப்படும் இந்த விருதுகள் வணிகம், தொண்டு, பொழுதுபோக்கு, கலாசாரம், விளையாட்டு ஆகிய துறைகளில் தன்னிகரற்ற சாதனைகளைப் புரிந்த ஆசியர்களுக்காக வழங்கப்படுகின்றன.

மேலும் இலண்டனில் மகாத்மா காந்தியின் சிலையை நிறுவுவதற்கு முக்கிய காரணமாக இருந்த இலண்டன்வாழ் இந்தியர் ராமி ரேஞ்சருக்கு தொண்டுக்கான விருதும்; இந்தோராமா கூட்டுத்தாபன நிறுவனத்தின் தலைவர் பிரகாஷ் லோகியாவுக்கு வணிகத்துக்கான விருதும் வழங்கப்பட்டன.

மேலும் ஆஸ்கார் விருதுபெற்ற ஆவணப்படத் தயாரிப்பாளர் ஆசிப் கபாடியா, பிரபல தொலைக்காட்சி நடிகர் குணால் நய்யார் உள்ளிட்டோருக்கும் இந்த விருதுகள் வழங்கப்பட்டன.

## அகதிகளைச் சந்தித்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இரண்டு குடும்பங்களை தன்னுடன் வத்திக்கானுக்கு அழைத்து வந்தார்



கிரீக் தீவில் லெஸ்போஸ் பகுதிக்கு திருத்தந்தை பிரான்சிஸ் தனது பயணத்தை மேற்கொண்டார். இதன் பின்னர் அவர் நாடு திரும்புகையில் 12 அகதிகளை தன்னுடன் அழைத்துக்கொண்டு வத்திக்கானுக்குத் திரும்பியுள்ளார்.

மத்திய கிழக்கு நாடுகளிலும், வடஆபிரிக்காவிலும் இருந்துவரும் அகதிகளைச் சந்திக்க கிரீக்குக்கு பயணித்த திருத்தந்தை பிரான்சிஸ், வத்திக்கானுக்கு திரும்புகையில் தான் வந்த விமானத்தில் 2 சிறிய அகதிக் குடும்பங்களை தன்னுடன் அழைத்து வந்ததாக வத்திக்கான் தலைமையகம் தெரிவித்துள்ளது.

மேலும் அந்தக் குடும்பத்துக்கான செலவுகளை வத்திக்கான் தலைமையகம் ஏற்றுக்கொள்ளும் என்றும், 12 பேரில் 6 பேர் சிறுவர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அழைத்துவரப்பட்ட குடும்பங்கள் இஸ்லாமியர்கள் என்றும், அவர்களது இல்லம் குண்டுவெடிப்பில் முற்றாக அழிந்துள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தக் குடும்பங்கள் குலுக்கல் முறையில் தெரிவுசெய்யப்பட்டன என சர்வதேச மனிதவள நெருக்கடி மீட்புப் பணியக ஊடகப்பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

சுற்றுப் பயணம் தொடர்பில் பாப்பரசர் தெரிவித்ததாவது: உலக நாடுகள் அகதிகளை வரவேற்க வேண்டும். நாட்டுக்கு குறுக்கே சுவர் எழுப்புவது பிரச்சினைகளுக்குத் தீர்வாகாது. மாறாக பாலங்கள் அமைக்க முன்வரவேண்டும். கடந்த நூற்றாண்டுகளில் கட்டப்பட்ட சுவர்களால் எந்தவிதப் பயனும் இல்லை. பாலம் அமைப்பதன் மூலம் ஒன்றிணைந்த வளமான சமூகத்தை உருவாக்க முடியும்.

ஐ.நாவின் அகதிகளுக்கான ஆணையாளர் தெரிவிக்கையில், பாப்பரசரின் இந்தச் செயல் முன்மாதிரியானதொன்று. இந்த செயற்பாடு உலக அரசுகளுக்கும், சமூகத்தினருக்கும், தடைகள் புறக்கணிப்புகள், பயங்கள் என்பவற்றைக் கடந்த செயல் - என்றார்.

# புனிதர்களின் பாதையில்

## புனித பிலிப்பு

### திருத்தூதர்



மாதமொரு புனிதரை அறிந்துகொள்வோம்

பிலிப்பு, கலிலேயாவில் பெத்சாயிதா என்ற ஊரில் தோன்றியவர். யோவான் நற்செய்தியாளர் மட்டுமே மீண்டும் மீண்டும் பிலிப்பைக் குறிப்பிடுகிறார். அதுவும் இறைமக்கள் இயேசு பேதுருவையும், பெலவேந்திரரையும் முதலில் தேர்ந்துகொண்டதன் பிறகு, மறுநாளே "என்னைப் பின்செல்" என்று கூறி பிலிப்பைத் தேர்ந்துகொண்டார் என்று குறிப்பிடுகிறார். இறை அழைத்தலுக்கு உடனே செவிமடுத்தார் பிலிப்பு என்பது இதிலிருந்து புலனாகிறது. ஏனெனில் அவர் உடனே தம் நண்பர் நத்தனேயலிடம் இது குறித்துத் தெரிவிக்கின்றார். "நாசரேத்திலிருந்து நல்லது எதுவும் வரமுடியுமோ?" என்று கேட்ட நத்தனேயலிடம், "வந்து பாரும்" என்று பதிலளிக்கிறார் பிலிப்பு. "நீர் இயேசுவிடம், திறந்த உள்ளத்துடன் நேரடித் தொடர்புகொள்ளும் நோக்குடன் வந்து பாரும், அப்போது உம் ஐயங்கள் எல்லாம் அடிபட்டுவிடும்" என்று பிலிப்பு மறைமுகமாகக் குறிப்பிடுகின்றார்.

கள்ளங்கபடமின்றித் திறந்த உள்ளத்துடன் பேசுபவர் பிலிப்பு என்பது ஆண்டவரிடம் அவர் அளித்த பதிலில் இருந்தும் புலனாகிறது. இருநூறு தெனாரியத்திற்கு அப்பம் வாங்கினாலும், ஆளுக்கு ஒரு சிறு துண்டும் கிடைக்காதே" என்றார் அவர் (யோவான் 6,7). ஒருமுறை வழிபாட்டுக்காக கிரேக்கர் ஜெருசலேம் நகரை வந்தடைகின்றனர். இவர்கள் தற்செயலாகப் பிலிப்பைச் சந்திக்கின்றார்கள். "ஐயா, இயேசுவைக் காண விரும்புகிறோம்" என்று பிலிப்பிடம் கேட்க, பிலிப்பு தான்தோன்றித்தனமாகச் செயல்படவில்லை என்பதை இங்கு அவர் நடந்துகொண்ட முறையிலிருந்து புரிந்துகொள்ள முடிகிறது. பிலிப்பு அந்திரேயோவிடம் வந்து அதுபற்றிச் சொன்னார். அந்திரேயாவும் பிலிப்பும் கலந்துபேசி, பின்னர் இயேசுவிடம் சென்று அதைத் தெரிவித்தனர். இவ்வாறு பல உயர்ந்த பண்புகள் கொண்டவர் பிலிப்பு.

தியோடரற், யுசிபியஸ் ஆகிய பழங்காலத்து வரலாற்று ஆசிரியர்கள் இவ்வாறு குறிப்பிடுகிறார்கள்: தூய ஆவியாரின் வருகைக்குப்பிறகு பிலிப்பு தம்முடைய திருமணமாகாத பெண் மக்களுடன் ஆசியா மைனர் சென்று மறைபரப்புப் பணியில் நாட்களைச் செலவிட்டார். இறுதியில் பிலிப்பு, பிரிஜியாவில் ஹியராப்போலிஸ் என்ற நகரில் சிலுவைச்சாவு அடைந்தார் என்று சொல்லப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அதிர்வுகள் .....!

அருட்பணியாளர் செ. அன்புராசா, அ.ம.தி எழுதும்

சமகால சமூக அரசியல் ஆன்மீகம் சார்ந்த தொடர் 52

## '...கழுதைகள்!'

### கழுதையின் சொந்தக்காரரர்!

கோவிலின் முன் வீதியில் கழுதை ஒன்று இறந்து கிடந்தது. ஒரு நாளாகியும் அதனை மாநகர சபையினர் அகற்றாத காரணத்தினால் அதனை அப்புறப்படுத்தும்படி குருவானவர் தொலைபேசியில் தொடர்புகொண்டு மாநகர சபை உத்தியோகஸ்தருக்குச் சொல்லியிருக்கின்றார். தொலைபேசியில் உரையாடிய அவ்வதிகாரி கொஞ்சம் நக்கலாக, "இறந்தவர்களை அடக்கம் செய்வது உங்கள் கடமையல்லவா!" எனக் கூறுயிருக்கின்றார். சற்றும் பதற்றப்படாமல், "உண்மைதான்! ஆனால், அடக்கத்திற்குமுன், சொந்தக்கார ஆட்களிடம் சொல்லவேண்டும் அல்லவா!" என்றிருக்கின்றார் குருவானவர்.

### பெருமைபெற்ற கழுதை!

கழுதை, வரலாற்றின் சில கட்டங்களில் குறிப்பிடத்தக்க பெருமையைப் பெற்றிருக்கின்றது. இயேசுவின் தாய் மரியாவையும், இயேசுவையும் சுமந்துசென்ற பெருமையை கழுதையே பெற்றிருக்கின்றது. மனுக்குலத்தின் மீட்பரையும் (இயேசு) இறைவனின் தாயையும் (மரியா) சுமக்கும் பாக்கியம் வேறு எந்த விலங்குகளுக்கும் கிடைக்காமல் கழுதைக்குக் கிடைத்திருக்கின்றது என்று நினைக்கின்றபோது அதனை உண்மையில் ஒரு சிறப்பாகவே கருதவேண்டி இருக்கின்றது.

அண்மையில் இந்தியாவில் சமயத் தீவிரவாதத்தை - இன்னுமொரு வகையில் சமயப் பயங்கரவாதத்தை வளர்க்கின்ற ஒரு மாநிலத்தில் ஒரு குழுவினர் ஒரு கத்தோலிக்க மறைப்பணியாளரை கழுதையின்மீது ஏற்றி செருப்பினால் அவரை அடித்துச்செல்கின்ற காட்சி முகநூலில் வெளிவந்திருந்தது. அவர்களின் இச்செயலினால் அக்குருவானவரின் முகத்தில் எவ்வித சலனமோ அல்லது சோகமோ தென்படவில்லை. இதற்குக் காரணம் என்ன? என மனம் கேள்வி எழுப்பியது. இயேசுகூட அவ்வாறே கழுதையின்மீது ஜெருசலேமில் பவனி வந்ததை நினைவுகூர்ந்ததோடு, இயேசுவை மகிமைப்படுத்துவதாக இவ் அவமதிப்பை ஏற்று தன் மனதுக்குள் மகிழ்ந்தாரோ என மனம் பதிலையும் கண்டுகொண்டது.

பாக்கிஸ்தான், அப்கனிஸ்தான், வங்காளதேசம் போன்ற நாடுகளில் கழுதைக்குப் பயிற்சியளித்து வண்டியிழுத்தல், பாரம் தூக்குதல், உழுதல் போன்ற வேலைகளை கழுதைகளைக்கொண்டு செய்கின்றார்கள் என அங்கு பணியாற்றும் நண்பர் கூறியிருந்தார். அது மட்டுமல்லாமல் கழுதைகளை நியாயமான விலைகொடுத்தே இந்நாடுகளில் வாங்கமுடிகின்றது எனவும் குறிப்பிட்டிருந்தார்.

மேலும், அரசர்கள் போர்க்காலங்களில் போர்க்களங்களுக்கு விரைவாகச்செல்ல குதிரைகளைப் பயன்படுத்தினர். போர்களைப் புரிந்தபோது குதிரைப் படைகளையும் பயன்படுத்தினர். ஆனால், போர் நீங்கி அமைதி நிலவிய காலங்களில் இவ்வரசர்கள் தங்கள் ஆளுகைக்கு உட்பட்ட இடங்களைப் பார்வையிடவும், சாதாரண மக்களை அவர்களின் வாழ்விடங்களில் சந்திக்கவும் - பார்க்கவும் கழுதைகள்மீது பவனி சென்றார்கள். காரணம் ஆறுதலாகவும் அதேவேளை ஆர்ப்பாட்டம் இல்லாது அமைதியாகச் செல்வதற்காகவும் கழுதைகளைக் 'கார்' களாக்கிக் கொண்டார்கள்.

### கழுதைகளிலும் கழுதைகள்!

'கழுதை' என்று யாரையாவது ஏசினால் அல்லது திட்டினால் சாதாரணமாக அவர் புத்தி குறைவானவர், அறிவில்லாதவர் என்பது பொருளாகின்றது. அதாவது மிருகங்களுக்கு இருக்கவேண்டிய ஐந்தறிவுகூட கழுதைக்கு இல்லாததுபோலவே அவ்வார்த்தை நோக்கப்படுகின்றது. ஆனால், புத்தியைப் பயன்படுத்துவதில் நான்கு கால் கழுதையிலும் பார்க்க மோசமான இரண்டு கால் கழுதைகள் இருக்கத்தான் செய்கின்றார்கள் என்பதை நடைமுறை வாழ்க்கையில் பலர் காணத் தவறுகின்றார்கள் என்பதுதான் வேடிக்கை! அதற்கு உதாரணமாக ஒரு சம்பவத்தைக் கூறலாம்.

கற்பவதியான மனைவியை தன் கழுதையின்மீது ஏற்றிக்கொண்டு கணவன் கவனமாக நடந்துசென்றான். அவ்வழியே வந்த இருவர், "கர்ப்பிணி மனைவியை கழுதைமீது ஏற்றி சவாரி செய்கிறான்! மூளையில்லாத முட்டாள்!" என்று தங்களுக்குள் பேசிக்கொண்டார்கள். இதனைச் செவிமடுத்த அவன் சற்று யோசித்துவிட்டு கழுதையின்மீது தான் ஏறிக்கொண்டு மனைவியை நடந்துவரச் சொன்னான்.



கழுதைமீது கணவன் இருப்பதையும் கர்ப்பிணி மனைவி நடந்து வருவதையும் கண்ட வேறு இருவர், "கர்ப்பிணி மனைவியை நடக்கவிட்டு, தான் கழுதைமீது சவாரி செய்கின்றான்! படு பச்சோந்தி!" என்றார்கள். இவர்கள் இவ்வாறு கூறக்கேட்டதைப் பற்றிச் சிறிது நேரம் சிந்தித்துவிட்டு கணவனும் மனைவியும் கழுதையின்மீது ஏறிக்கொண்டார்கள்.

இதனைக் கண்ணுற்ற இருவர், "வாய்பேச முடியாத ஜீவனை வதைக்கின்றார்கள்! இதயமில்லாத மிருகங்கள்!" எனக் கூறிச் சென்றார்கள். இவர்கள் கூறியதைக் கேட்ட கணவனும் மனைவியும் இப்போது என்னசெய்வது?, ஏது செய்வது? எனத் திண்டாடினார்கள். இறுதியில் ஒரு முடிவுக்கு வந்தார்கள்! இருவரும் கழுதையில் இருந்து இறங்கி கழுதையோடு சேர்ந்து நடந்து சென்றார்கள்.

இதனைப் பார்த்த இன்னும் இருவர், "ஏறிச் சவாரி செய்யவேண்டிய கழுதையை விட்டுவிட்டு இருவரும் நடந்து செல்கின்றார்கள்! இரண்டு முழு முட்டாள்கள்!" என்றார்கள்.

இச்சம்பவத்தில் இருந்து பல படிப்பினைகளைக் கூறமுடியுமாயினும் இக்கட்டுரையின் ஊடாகச் சொல்ல விளையும் ஒரு கருத்தைச் சுட்டுவது இவ்விடத்தில் பொருத்தமாகும் எனத் தோன்றுகின்றது. வீண் விமர்சனங்களை வீசும் கழுதைகளின் பேச்சைக் கேட்டு, தங்கள் கழுதையைத் தம் பயணத்திற்குப் பயன்படுத்தாமல், நடந்துசெல்லும் கழுதைகள் குறித்துச் சிந்திக்கவேண்டி இருக்கின்றது!

பிறரின் மொக்குத்தனமான, மோட்டுத்தனமான வியாக்கியானங்களுக்குச் செவிமடுத்து வாழ்வின் அர்த்தத்தை இழந்துபோகின்றவர்கள் - தம் சுயத்தைத் தொலைத்து விடுகின்றவர்கள் கழுதையிலும் மோசமானவர்களே!.

### "மன்னார் கழுதைகள்!"

மன்னார் ஆடைத் தொழிற்சாலை ஒன்றில் வேலைபார்க்கும் பெண்கள் 2016 சித்திரைத் திங்கள் 08ஆம் நாள் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டதாக அறியமுடிகின்றது. சித்திரைப் புத்தாண்டு உள்ளடங்கிய நாட்களில் விடுமுறை தருவதாகக்கூறி இரவு பகலாக வேலைவாங்கப்பட்ட சூழலில் அவர்களுக்கான விடுமுறை மறுக்கப்பட்ட நிலையில் இப்பெண்கள் பணிப்புறக்கணிப்பில் குதித்துள்ளதாக அறியமுடிகிறது.

இச்சிக்கலைத் தீர்த்துவைக்க மக்கள் பிரதிநிதிகளில் சிலர் பணிப்புறக்கணிப்பு வேளையில் அங்கு சென்றுள்ளார்கள். இவர்களுடனான பேச்சுவார்த்தையில் விடுமுறை மறுக்கப்பட்ட விடயத்துடன் இன்னும் சில பிரச்சினைகளும் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்ட பெண்களால் எடுத்துக்கூறப்பட்டுள்ளன. அதில் ஒன்றுதான், "நீங்கள் எல்லாம் மன்னார் கழுதைகள்" என பெரும்பாண்மை இனத்தைச் சேர்ந்த அதிகாரிகளால் சொல்லப்பட்டுத் தாங்கள் நடத்தப்படுவதாகவும், அதனால் தாங்கள் மனரீதியாகப் பாதிக்கப்பட்டு இருப்பதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டி இருக்கின்றனர்.

### 'கழுதைகளின் ஆசிரியர்!'

ஒரு பாடசாலையின் வகுப்பாசிரியர் ஒருவர் தன் வகுப்பு மாணவர்கள் எல்லாரையும், "ஒன்றுக்கும் உதவாத கழுதைகள்!" என்று அடிக்கடி சொல்லிவந்தார். இதனால், அவ்வகுப்பு மாணவர்கள் எல்லாரும் மிகுந்த கவலை அடைந்தனர். யாரிடம் சொல்லி அழுவது என்று தெரியாமல் தங்களுக்குள்ளே பகிர்ந்து ஒருவரை ஒருவர் ஆற்றுப்படுத்தி வந்தனர்.

ஒருநாள் காலைவேளை, எல்லா மாணவர்களும் தங்கள் வகுப்பாசிரியருடன் வகுப்பிற்குள் நுழைகின்றபோது, 'கழுதைகளின் ஆசிரியரே வருக!' என்று எழுதப்பட்ட வாசகத்தைப் பார்த்த அவ்வாசிரியருக்கு என்ன செய்வது, ஏது செய்வதென்று தெரியவில்லை. மாணவர்களுக்கோ அடுத்து என்ன நடக்குமோ, ஏது நடக்குமோ என்று கதிகலங்கிப்போய் நின்றார்கள்! "பிள்ளைகள், கழுதைகள் என்றால் அக்கழுதைகளுக்குப் படிப்பிக்கும் ஆசிரியர் கழுதைகளின் ஆசிரியராகவே கருதப்படுவார் என்பது அளவையியலில் இருந்து கிடைக்கின்ற முடிவு! அந்தவகையில் அவ்வாசகம் சரியானதே! இல்லையா?"

அந்நிலமையை சுதாகரித்துக் கொண்ட ஆசிரியர் அன்றைய தினம் மாணவர்களுடன் கடுமையாக நடந்துகொள்ளாதது அவ்வகுப்பு மாணவர்களுக்கு ஆச்சரியமாக இருந்தது மட்டுமல்லாமல், அந்நாளில் இருந்து அம்மாணவர்களைக் 'கழுதைகள்' என்று அழைக்காதது அவர்களுக்குப் பெரும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியிருந்தது.

### 'கழுதை அதிகாரிகளுக்கு வணக்கம்'

மேற்சொன்ன படிப்பினையை முதலில் நன்றாகப் புரிந்துகொண்டால், அடுத்தவர் வேண்டுமென்றே இழிவுபடுத்தச் சொல்லும் இழிசொற்களால் பாதிப்புறாமல் வாழமுடியும்.

வழமையான பிரச்சினைகளைப்போல 'மன்னார் கழுதைகள்' என அதிகாரிகளால் பிரயோகிக்கப்பட்ட வார்த்தைப் பிரயோகங்களால் ஏற்பட்டுள்ள மனஉளச்சலும் அதனால் உருவாகும் பிரச்சினையும் ஒரு சிக்கலற்ற - சிறிய பிரச்சினையே! ஏனெனில், பொதுவாக பிரச்சினைகள் சிறிய அளவிலேயே ஆரம்பிக்கின்றன. ஆனால், அவை தீர்க்கப்படாததால் நாள்போகப்போக அவை பெரிய பிரச்சினைகளாக மாறுகின்ற வாய்ப்பு ஏற்படுகின்றன. மேற்சொன்ன மனஉளச்சலை ஏற்படுத்தியிருக்கும் பிரச்சினைக்கான விடை ஒரு சிறிய வகுப்பறையில் கிடைப்பதாகவே எனக்குத் தெரிகின்றது.



"ஒன்றுக்கும் உதவாத கழுதைகள்" எனத் தன் மாணவர்களைப் பார்த்து அடிக்கடி குறிப்பிடும் ஆசிரியருக்கு வகுப்பறையில் எழுதப்பட்டிருந்த "கழுதைகளின் ஆசிரியரே வருக" என்ற வாசகம் பெரும் வெளிப்படுத்தலாகவும், ஆழ்ந்த படிப்பினையாகவும் மாறியிருக்கின்றது என்பது ஆசிரியரின் நடவடிக்கைகளில் இருந்து தெரிகின்றது.

வகுப்பறையில் நடந்ததுபோல ஆடைத்தொழிற்சாலையிலும் "கழுதைகளின் அதிகாரிகளே வருக" என்றோ, அல்லது இதனையே சுருக்கமாகவும் சுவையாகவும் மாற்றியமைத்து "கழுதை அதிகாரிகளே வருக" என்பதோடு அவர்கள் மொழியையும் சேர்த்து "கழுதை அதிகாரிகளே ஆயுபோவன்" என ஒரு நாளைக்கு அன்(ம்)பான வார்த்தைகளால் வரவேற்பளிக்க தாங்களாகவே இவ்வாறான காட்டுக் குண்ணங்களைக் கைவிட்டுவிடுவார்கள். இவ்வாறு செய்யவேண்டும் என்பதல்ல இங்கு அழுத்தப்படுவது! இவ்வாறு நிகழ்ந்தால் எதிர்வினை எவ்வாறிருக்கும் என்று சிந்திக்கும்போது உருவான சாத்தியக்கூறே இது!

### 'மாதோட்டத்தான் கடா!'

மேலும், லோறஞ்சுப் புலவர் மன்னார் மாதோட்டத்தின் அறியப்பட்ட முதல் புலவர் என்ற பெருமைக்கும், மாதோட்டத்தில் கல்வி வளர்ச்சியை ஏற்படுத்த கிராமங்களில் இருந்து சிலரை அழைத்து முதன் முதலாக திண்ணைப் பள்ளிகளில் கல்வி ஊட்டியவர் என்ற பெருமதிப்புக்கும் உரிய புலவராவர். இப்புலவர் பற்றிய ஒரு சம்பவம் 'தமிழ் புழுராக்' (The Tamil Plutarch) என்ற பழமையான நூல் ஒன்றில் சொல்லப்படுவதாக அறியக்கிடக்கின்றது. லோறஞ்சுப் புலவர் மாதோட்டத்தைச் சேர்ந்தவர் என்பதையும் மாதோட்டத்தில் கடாக்கள் (எருமையின் ஆண்) அதிகம் உண்டென்பதை நன்கறிந்த கொழும்பைச் சேர்ந்த ஒருவர் லோறஞ்சுப் புலவரை கிண்டல் செய்யும் நோக்குடன், "மாதோட்டத்தான் கடா மெத்தப் பெரிதோ?" எனக் கேட்டிருக்கின்றார். புலவரோ, "கொழும்பான் கோவேறு கழுதையிலும் கொஞ்சம் பெரிது!" எனப் பதில் நிறுத்தி இருக்கின்றார்.

ஆக, ஒரு விடயத்தைச் சொல்பவரின் - கூறுபவரின் மனநிலையையும் அறிந்து இவ்வாறான கேள்விகளுக்கு - சம்பவங்களுக்கு புத்திக்கூர்மையாகப் பதிலளித்தால் சன்னங்களைப்போல பழிப்போரின் - இழிப்போரின் - சுழிப்போரின் உள்ளங்களை ஊடுருவிப் பாயும்! புரிகிறதா?

### கழுதை அதிகாரி!

மாடுகளை மேய்ப்பவன் 'மாடு மேய்ப்பவன்' என்றும், ஆடுகளை மேய்ப்பவன் 'ஆடு மேய்ப்பவன்' என்றும் அழைப்பது வழக்கம். அவ்வாறெனில், மன்னார் ஆடைத் தொழிற்சாலையில் வேலைசெய்கின்றவர்களை பெரும்பான்மையின அதிகாரிகள் சொல்வதுபோல கழுதைகள் என்று வைத்துக்கொண்டால் (இது வெறுமனே ஓர் எடுகோளே! இதனை வைத்துக்கொண்டு கட்டுரை ஆசிரியரும் கழுதைகள் எனக் குறிப்பிட்டுவிட்டார் என எனக்கெதிரான ஆர்ப்பாட்டத்திற்கு ஆயத்தமாகாதீர்கள்!) இக்கழுதைளை மேற்பார்வை செய்பவர்களும், பொறுப்பான அதிகாரிகளும் சாதாரண கழுதைகளாக இருக்கமுடியாது! அசாதாரண கழுதைகளாக இருக்கக்கூடிய வாய்ப்பே அதிகமாக இருக்கின்றது. ஆக, கழுதைகளுக்குப் பொறுப்பான அதிகாரி 'கழுதைகளின் அதிகாரி' ஆகிறார் என்பதை இப்போதைக்கு அவர்கள் ஏற்றுக்கொள்கின்றார்கள் என்பது அர்த்தமாகின்றது.

அதற்காக, "மன்னார் கழுதைகள்" என்று அழைத்தவர்கள் சாதாரண கழுதைகளாக அல்லாமல் அசாதாரண கழுதைகளாக இருப்பார்கள் என்பது ஓரளவிற்கு என்றாலும் உறுதிப்படுத்தி ஆயிற்று! ஆகவே, "மன்னார் கழுதைகள்" என்று கூறிய அதிகாரிகள் அசாதாரண கழுதைகள் என்பதால் அக்கழுதைகளை (மன்னிக்கவும் அக்கழுதை அதிகாரிகளை) 'கோவேறு கழுதைகள்' என அழைக்கலாமா? என்றொரு கேள்வி எழ வாய்ப்பிருக்கின்றது.

அவ்வாறு அவர்களை 'கோவேறு கழுதைகள்' என அழைப்பது ஆடைத்தொழிற்சாலைப் பணியாளர்கள் பக்கமாக நின்று சிந்திக்கின்றபோது அவ்வளவு நாகரிகமாக இராது. ஏனெனில், 'கோவேறு' என்ற சொல் ஒரு காரணப் பெயர்ச் சொல்லாகும்; இரு சொற்கள் பிணைந்ததால் இணைந்ததாகும். 'கோ' என்றால்: இங்கு, குதிரை என்று பொருள்; 'ஏறு' என்பது: இங்கு, ஏறுவதைக் குறிப்பதாகும். அதாவது குதிரை ஏறிப் பிறந்த கழுதை என்றாகின்றது! இன்னுமொரு வகையில் கூறுவதானால், ஆண் குதிரைக்கும் பெண் கழுதைக்கும் பிறந்த (அனேகமாகவும் அதிகமாகவும் கழுதையின் சாயலைக் கொண்டிருப்பதால்) கழுதையைத்தான் 'கோவேறு கழுதை' என்கிறார்கள்.

எனவேதான், "மன்னார் கழுதைகள்" என்று கூறியவர்களை 'கோவேறு கழுதைகள்' என்று அழைத்தால் கொஞ்சம் வித்தியாசமான - விசித்திரமான அர்த்தத்தில் பலரும் விளங்கிவிடலாம் என்பதால் அவ்வதிகாரிகளை அவ்வாறு அழைப்பது அவ்வளவு நாகரிகமாக இராது என ஏலவே சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

### நிறைவாக...

'இது ஒரு பெரிய விடயம் என்று, ஒரு கழுதை, இதனைப்போய் எழுதியிருக்கின்றதே!' என சிலவேளைகளில் சில கழுதைகள் சிந்திக்கலாம். இக்கழுதை விவகாரம் பற்றி, ஒரு மன்னார்க் கழுதைதான் எழுதியிருக்கின்றது என எண்ணி இதை விட்டுவிட வேண்டியதுதான்! வேறென்ன செய்யமுடியும்?

(கருத்துக்களுக்கும் விமர்சனங்களுக்கும்: இமெயில்; anpuomi1970@gmail.com அல்லது விலாசம்; 'அமதிக்கரங்கள்', மாங்குளம்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அருட்பணி. ச. யேசுதாஸ் (கி.ச.) அவர்களின்

# 'இரகசிய விசாரணை' கவிதைத் தொகுதிமீதான ஓர் பார்வை

- அருட்பணி. தமிழ் நேசன் அடிகளார் -




இரண்டாயிரம் ஆண்டுகால வரலாற்றைக் கொண்டதாகத் தமிழ்க் கவிதை திகழ்கின்றது. ஆயினும் புதுக்கவிதை என்னும் இலக்கியம் மேலைநாட்டுத் தாக்கத்தின் காரணமாக இருபதாம் நூற்றாண்டிலேயே தமிழில் அறிமுகமாகியது. அது இன்று தமிழ் வேர்விட்டுச் செழித்து வளர்ந்துவருகின்றது.

### புதுக்கவிதையின் தந்தை வோல்ட் விட்மன்

புதுக்கவிதையின் தந்தையாகப் போற்றப்படுபவர் அமெரிக்கக் கவிஞர் வோல்ட் விட்மன் (Walt Whitman) (1819 - 1892) அவர்கள். இவருடைய '*புல்லின் இதழ்கள்*' 'The Leves of Grass' என்னும் தொகுப்பு இவருடைய காலத்தில் உலகெங்கிலும் கவிதையுலகில் பெரும் புரட்சியை ஏற்படுத்தியது.

"தோழனே இது ஒரு புத்தகம் அல்ல, இதைத் தொடுபவன் ஒரு மனிதனைத் தொடுகின்றான்" என்று பாடிய விட்மன், உள்ளடக்கத்தை ஒட்டியே வடிவம் உருவாகின்றது என்றும், பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதி நெருங்குகிற நேரத்தில் மக்களுடைய தேசிய உணர்வின் எழுச்சியும் புரட்சிகளும் ... உள்நாட்டுப் போரும் புதிய கவிதை வடிவங்களைத் தவிர்க்கமுடியாததாக்கி விட்டன என்றும் கூறினார்.

அமெரிக்க மக்களுக்கு ஜனநாயகத்தின்மீதான நம்பிக்கையை ஏற்படுத்துவது விட்மனின் நோக்கங்களில் ஒன்றாக இருந்தது. விட்மன் தன்னை சமத்துவத்தின் கவிஞனாகவும், எதார்த்தத்தின் கவிஞனாகவும் கூறிக்கொண்டார். விட்மனின் கட்டற்ற கவிதைப்போக்கு ஐரோப்பா எங்கிலும் பரவியது. இது பிரான்சில் 'விடுநிலைப்பா' என அழைக்கப்பெற்றது. ரஷ்யா, கிழக்கு ஜேர்மனி போன்ற நாடுகளைச் சேர்ந்த மயாகாவ்ஸ்கி, பெர்டோல்ட், பிரக்ட் போன்ற கவிஞர்களால் புதிய கவிதை (New verse) என்று வழங்கப்பெற்று, உலகெங்கிலும் உள்ளடக்கத்திலும் உருவத்திலும் பெரும் மாற்றங்களை ஏறப்படுத்தியது.

ஆங்கிலத்தில் New poetry, Modern poetry என்பதே தமிழில் 'புதுக்கவிதை' என வழங்கப்படுகிறது. தொடக்கத்தில் வசன கவிதை, யாப்பில்லாக் கவிதை, இலகு கவிதை, கட்டிலடங்காக் கவிதை என்றெல்லாம் அழைக்கப்பட்டு தற்போது 'புதுக்கவிதை' என்றே இது வழங்கப்படுகின்றது.

### தமிழில் புதுக்கவிதையின் ஆரம்பம்

"சுவை புதிது, பொருள் புதிது, வளம் புதிது, சொல் புதிது சோதிமிக்க நவகவிதை" என்று பாடிய பாரதியே வசன கவிதை முயற்சியில் முதன்முதல் ஈடுபட்டவராவார். பாரதிக்கு அமெரிக்க முன்னோடியான விட்மனைப்பற்றியும், அவரது குடியாட்சி, குடிமக்கள், அதிகாரம் போன்ற கொள்கைகளைப் பற்றியும் தெரிந்திருந்தது. இந்தியாவின் அடிமைநிலை, சமத்துவம், மக்கள் ஒற்றுமை, பெண்ணடிமை, வறுமை எனச் சமூகக் கேடுகளுக்கெதிரான குரலாகப் பாரதியின் கவிதைகள் முழுங்கின. பாரதியின் காலத்திலிருந்து இன்றுவரை ஏராளமான கவிஞர்கள் புதுக்கவிதைக் கடலில் மூழ்கி முத்தெடுத்துள்ளனர்.

அநீதிக்கு எதிரான ஆவேசக் குரலாகவும், சமூகச் சீர்கேடுகளுக்கான சாட்டையடிகளாகவும் புதுக்கவிதைகள் இன்றும் பிரசவிக்கப்படுகின்றன.

### நிஜத்தின் நிழல்கள்

அருட்பணியாளர் இயேசுதாஸ் அவர்களும் தனது கன்னிப் படைப்பான 'இரகசிய விசாரணை' என்ற புதுக்கவிதைத் தொகுதியினூடாக தமிழ் இலக்கிய உலகில் தன்னை அடையாளப்படுத்துகின்றார்.

இவருடைய கவிதைகள் கற்பனையில் கால்பதிக்காக நிஜத்தின் நிழல்கள்; உண்மையை உரசிப் பார்க்கும் உயரிய வரிகள்.

இவருடைய கவிதைக் கடலில் நான் மூழ்கியபோது என் உணர்வுகளை வருடிச்சென்ற பல கவிதைகளில் சிலவற்றை மட்டும் இங்கே அடையாளம்காட்ட விழைகிறேன். சமுதாய அக்கறையை வெளிப்படுத்தும் கவிதைகள், தன்னம்பிக்கையை ஊட்டும் கவிதைகள், உளவியல் சார்ந்த கவிதைகள், சுயமதிப்பீட்டுக் கவிதைகள், மண் வாசனைமிக்க கவிதைகள், இனமுறுகல், போர் அவலங்களைச் சொல்லும் கவிதைகள் என்ற அடிப்படையில் சில முக்கிய கவிதைகளை எடுத்துக்காட்ட முனைகின்றேன்.

### சமுதாய அக்கறையை வெளிப்படுத்தும் கவிதைகள்

நடைமுறைவாழ்வில் நிலவும் நலிவுகளையும், மெலிவுகளையும் கண்டு நைந்துருகும் இவருடைய உள்ளத்தின் ஊற்றாக இவருடைய கவிதைகள் அமைந்துள்ளன. கனவுகளை, கற்பனைகளை வரையாமல், தன்னையும் உலகையும் மறக்காமல், யதார்த்தபூர்வமாகச் சிந்தித்ததன் விளைவே இக்கவிதைத் தொகுதி. சமுதாய அக்கறையுள்ள கவிஞராக இக்கவிதைகளில் இவரை நாம் தரிசிக்கலாம்.

'மூன்றாம் விதி' என்ற கவிதை சமகாலத்தில் அதிகமாகப் பேசப்படுகின்ற சுற்றுப்புறச் சூழல்பற்றி நம்மைச் சிந்திக்க அழைக்கின்றது. திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள்கூட 'இறைவா உமக்கே புகழ்' என்ற தலைப்பில் இதுவிடயமாக ஓர் சுற்றுமடலை வெளியிட்டு உலகத்தின் கவனத்தை ஈர்த்திருந்தார்.

"காற்றுக்கு சுவாசக்கோளாறு/ மரங்களுக்கு மாரடைப்பு.
கருமேகங்களுக்கு கருச்சிதைவு/ தண்ணீருக்கு தலைவலி.
பசும்புற்றரைக்கு தோல்வியாதி
ஓசோன்படைக்கு இதயத்தில் துவாரம்.
பூமிக்கு புற்றுநோய்......./ இன்னும் நீளுகின்றது
மருத்துவரின் அறிக்கை." என்ற வரிகளில் இயற்கையின் அவலம் எடுத்துக்காட்டப்படுகின்றது. இக்கவிதையில் வைரமுத்துவின் கவிவாசனை வீசுவதையும் உணரமுடிகின்றது.

விபசாரத் தொழிலுக்குள் தள்ளப்பட்டவர்களின் வாழ்க்கைநிலையை தத்ருபமாக, உணர்வுபூர்வமாக வெளிக்கொணரும் கவிதைதான் 'இரகசிய விசாரணை'. அபலைப் பெண்களின் அவலவாழ்வை இக்கவிதையினூடாகத் தரிசிக்கும்போது எதிர்பாராத ஒரு சோகம் நம்மையும் தொற்றிக்கொள்கிறது. விசாரணையும் பதில்களுமாய் அமைந்த இக்கவிதையின் அமைப்பு வித்தியாசமானது. ஒரு பரிசோதனை முயற்சியாயும் அமைந்துள்ளது எனலாம்.

கேள்வி – பதில் முடிந்தபின்னர் விபசாரியின் வார்த்தைகளாய் வரும் கவிதையின் நிறைவு வரிகள் ஆழமான செய்தியை இன்றைய சமூகத்திற்குச் சொல்கின்றன.

"எல்லோரும் விரும்புவது எப்போது விடியுமென்று
என் விழிகள் ஏங்குவதோ எப்போது இருளுமென்று.
அதனால்தான் என் வாழ்க்கையே
இருளில் மூழ்கிக்கிடக்கிறதோ?

மரபணு பரிசோதனை செய்தால்
என் பிள்ளைகள் சிலரின் அப்பாமார்களாக ...
அரசியல்வாதிகள்/ கல்விமான்கள்
செல்வந்தர்கள்/ காவல்துறையினர்
மாணவர்கள்/ ஏன் எனது அப்பாவின் வயதை ஒத்தவர்களும்தான்.

என் பிள்ளைகளின் பசியைப்போக்க/ இன்னொரு தொழிலுக்கு
உத்தரவாதம் தந்தால்/ இப்போதே விட்டுவிடுகிறேன்
இந்தத் தொழிலை."

'பகிரங்க இரகசியம்' என்ற கவிதை நகரத்துத் தொழிலாளர்களின் உணர்வுகளை வெளிப்படுத்துகின்றது.

"நகரத்து வாசிகளால்/ பாவித்து வீசப்படும் கழிவுகள்போலவே
நாங்களும் அன்றாடம்/ அவர்களால் பாவிக்கப்பட்டு
வீசப்படுபவர்கள்தான் என்றால்/ நம்புவீர்களா?

"நாங்கள் இல்லாவிட்டால்
நான்கே நாளில் நகரமே நாற்றமெடுக்கும்"

"எங்களைப் பயன்படுத்துவோர்/ இருக்கிறார்களே தவிர
எங்களுக்குப் பயன்படுவோர் எவருமில்லை."

போன்ற வரிகள் இத்தொழிலாளர்களின் மனவெளிப்பாடுகளாக கவிஞரால் நமக்குத் தரப்படுகின்றன.

'எதிர்ப்(பு)பால்' என்ற கவிதை ஓரினப்பால் திருமணத்தின்மட்டில் கவிஞருக்கு இருக்கும் எதிர்ப்பின் எதிரொலியாக வருகின்றது.

சிசுக்கொலை, கருக்கலைப்பு, கருத்தடை, வசக்டமி போன்றவை மனித மாண்பைச் சிதைக்கின்றன என்பதை வலியுறுத்துவதாக 'மு(பி)ன்னேற்றமா?' என்ற கவிதை அமைந்துள்ளது.

சுயமாய், இயல்பாய் கற்றல் செயற்பாடுகள் இடம்பெறாமல் 'திணிக்கப்படும்' கற்றல் செயற்பாடுகளைச் சாடுவதாய் 'திணிப்பு' என்ற கவிதை அமைந்துள்ளது.

மலையக மக்களின் அவலத்தை எடுத்துக்கூறும் கவிதையாக 'மலையோர மன்றாட்டுக்கள்' அமைந்திருக்கின்றன.

### தன்னம்பிக்கை ஊட்டும் கவிதைகள்

உயர்ந்த இலட்சியமும், கொள்கைப்பிடிப்பும் கொண்டதாக வாழ்க்கை அமைய வேண்டும். வகுத்துக்கொண்ட இலட்சியத்தை அடைய தன்னம்பிக்கை வேண்டும். இந்தத் தன்னம்பிக்கையை ஊட்டும் கவிதைகள் பல இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.

வாழ்க்கையை நேசிக்கவும், தன்னம்பிக்கையோடு முன்னேறிச்செல்லவும் தூண்டுதல்தரும் ஊக்கமருந்தாக 'எதிர்நீச்சல்' என்ற கவிதை அமைந்துள்ளது.

"சவால்கள் இல்லாத வாழ்வு/ அலைகள் இல்லாத கடல் போன்றது.
அலைகள் இல்லாத கடல்/ உயிரற்ற கடல்"

என்ற வரிகள் சவாலைச் சந்திக்க நமக்குத் துணிவைத் தருகின்றது. மேலும் இதே கவிதையில் ஒவ்வொரு மனிதனும் தனித்துவமானவன் என்பதை பின்வரும் வரிகளில் கவிஞர் வெளிப்படுத்துகின்றார்.

"இதுவரை பிறந்த மனிதர்களுள்
எவருமே இன்னொருவரைப்போல
ஒத்த குணாதிசயங்களுடன் பிறந்ததாய் அத்தாட்சியில்லை.
நீ விட்டுச்செல்லும் இடைவெளியை
இனி எவராலும் எக்காலத்திலும் நிரப்ப முடியாது."

காலச்சக்கரத்தின் ஓட்டத்தில் காணாமல்போனவர்கள் யார் என்பதையும், வரலாற்றில் தடம்பதித்தவர்கள் யார் என்பதையும் 'காலப்புத்தகம்' என்ற கவிதை கேட்டுநிற்கிறது. தனக்கென வாழா பிறர்க்கென வாழும் பொதுநலன் பேணும் மனிதர்களாக நாம் மாறவேண்டும் என்ற அழைப்பு நமக்கும் விடுக்கப்படுகின்றது.

"நேற்றைய தலைமுறை விதைத்ததை
இன்று அறுக்கும் நாம்
நாளைய தலைமுறை அறுப்பதற்கு
இன்று எதை விதைக்கின்றோம்?"

என்ற கவிஞரின் கேள்வி நியாயமானது.

### உளவியல் சார்ந்த கவிதைகள்

உளவியல் என்பது மனித வாழ்வோடு பின்னிப்பிணைந்தது. எம்மை நாம் புரிந்துகொள்வதும், மற்றவர்களைப் புரிந்துகொள்வதும் வாழ்க்கையில் வெற்றிபெற அவசியமாகின்றது. உளவியல் சார்ந்த சில கவிதைகளை இத்தொகுதியில் அடையாளம்காண முடிகிறது.

'ஊமைக் காயங்கள்' என்ற கவிதை அடிப்படையான ஓர் உளவியல் உண்மையை உரத்து உரைக்கின்றது. மனத்தாங்கல்களை, மனஸ்தாபங்களை நீண்டகாலத்திற்கு நீடிக்கவிடுவதால் ஏற்படக்கூடிய விபரீதங்களை இக்கவிதை இதமாகச் சொல்கிறது.

"சாதாரண மனிதர்களது/ உறவுகளின் விரிசல்கள் முதல்
சாம்ராஜ்ஜியங்களின் சரிவுகளுக்கெல்லாம்/ காரணமாய் அமைந்தது
அவ்வப்போது அணுகப்படாதுவிட்ட/ சிறுசிறு பிளவுகளே.

முளையிலே கிள்ளவேண்டியவற்றை/ விருட்சமாய் வளரவிட்டால்
கிளை பரப்பியபின்னர் வேரோடு சாய்க்க
கோடரிகளைத் தேடவேண்டிவரும்"

கூட்டிக்கழித்துப் பார்த்தால் ஒவ்வொரு மனிதனுடைய மன அமைதிக்கும், மனமகிழ்ச்சிக்கும் தடையாய், இடையூறாய் இருப்பது உறவுச் சிக்கல்கள்தான். குடும்பம், உறவினர், நண்பர்கள், பணித்தளம் என்று எங்கும் இதுதான் பிரச்சினை. இந்த உறவுகளைச் சரியாகக் கையாளத் தெரிந்தவர்கள் வாழ்க்கையை வெற்றிகொள்கிறார்கள். மற்றவர்கள் வாழ்க்கையைக் கோட்டைவிடுகின்றார்கள்.

ஒவ்வொரு மனிதனும் தனித்துவமானவன். அந்தத் தனித்துவத்தை தக்கவைத்துக்கொள்ளவும், தகவமைத்துக்கொள்ளவும் தனிமனிதர் ஒவ்வொருவரும் போராடுகின்றனர். இதுவே பலரின் தவிப்பும் தத்தளிப்புமாக இருக்கின்றது. இந்த உண்மைகளை 'தனித்துவம்' என்ற கவிதை விளக்குகின்றது.

குழந்தைப் பருவ உளத்தாக்கங்கள் எவ்வாறு மாறாத வடுக்களை வாலிபவயதிலும் ஆழமாகப் பதிக்கின்றன என்ற உண்மையை எடுத்து விளக்குவதாக 'உளத்தாக்கம்' என்ற கவிதை அமைகின்றது.

### சுயமதிப்பீட்டுக் கவிதைகள்

உன்னையே நீ அறிவாய் என்ற சோக்கரிட்டிசின் வார்த்தைகள் எக்காலத்திற்கும் தேவையானதே. நம்மை நாம் சுய மதிப்பீடு, சுய விமர்சனம் செய்வது எமது வளர்ச்சிக்கு வழிவகுக்கும்.

'அப்பாவின் வியர்வை' என்ற கவிதையில் ஒரு தந்தையின் தியாகம் இப்படியாக எடுத்துக்காட்டப்படுகின்றது.

"பரீட்சைக்கு படிக்காமல்/ படக்காட்சிக்குச் சென்று
பற்றுச்சீட்டு வாங்க/ பணப்பையைத் திறந்தபோது
பணத்தில் அப்பாவின்/ வியர்வை பிசுபிசுத்தது"

தந்தையின் தியாகத்தை உணராமல் உதாரிகளாகத் திரியும் பிள்ளைகளின் மனக்கண்ணைத் திறக்கும் வரிகளாக இவை உள்ளன.

'நடுநிசி ஞானம்' என்ற கவிதையில் பரீட்சை பற்றிய தன் அனுபவத்தைக் கூறும் கவிஞர் நம் எல்லோருடைய அனுபவத்தையும் இப்படிக் கூறிமுடிக்கின்றார்.

"புதிய தவணையில் நன்றாகப் படிப்பதென்ற
நம்பிக்கையில்லாப் பிரேரணையோடு
பழைய தவணைக்கு பிரியாவிடை.
இப்படித்தான் கடந்துபோனது பல தவணைகள்."

'பிரார்த்தனை' என்ற கவிதை நமது வாழ்வுக்கும் வழிபாட்டிற்கும் இடையில் உள்ள இடைவெளியை எடுத்துக்காட்டுகின்றது.

மனம்போன போக்கில் போகும் வாழ்க்கைநிலையைக் காட்டுவதாக 'மாயைகளின் போதை' என்ற கவிதை அமைந்துள்ளது.

படிக்கவேண்டிய வயதில் காலத்தை விரயமாக்குகின்றவர்களுக்கு அறிவுரை கூறுவதாக 'வாலிப வயது' என்ற கவிதை தரப்படுகின்றது.

### மண் வாசனைமிக்க கவிதைகள்

"பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ வானிலும் நனிசிறந்ததுவே" என்பார்கள். ஆம் நாம் பிறந்து வளர்ந்த மண்ணின் நினைவுகள் மண்வாசனையாக என்றும் எம் உள்ளத்தில் நிலைத்து நிற்கும்.

மாடு புல்லைத் தின்பதைவிட அது அசைபோடுவது அழகாய் இருக்கும் என்பார்கள். கடந்தகால நினைவுகளை இரைமீட்டிப் பார்த்து அசைபோடுவது இனிமையான அனுபவம்தான். 'மண்வாசனை' என்ற கவிதையில் தான் பிறந்த கிராமத்தின் அனுபவங்களை மண் வாசனையோடு நூலாசிரியர் தருகின்றார்.

"பகலிரவாய் பனம்பழம் தேடிய பனங்காலைகள் .....
விடுமுறை நாட்களில் விடுதலைப்போராட்டம்
விளையாடிய புலவு ......
கிளிக்குஞ்சு தேடிய மதுரமரப்பொந்துகள் ......
சம்புக்கோழிக்கும் தாமரைக்காய்க்கும் அலைந்த குளம் ......
இப்பவும் வலிதாங்காமல் வாய்விட்டழும்
கல்லடி வாங்கிய மாமரங்கள் ....."

போன்ற வரிகள் நம்மையும் நமது கிராமத்திற்கு, சிறுபராயத்திற்கு அழைத்துச் செல்கின்றன.

### இனமுறுகல், போர் அவலங்களைச் சொல்லும் கவிதைகள்

'வரலாறும் மாறும்' என்ற கவிதை தமிழர் தாயகப் பகுதியில் முளைக்கும் புத்தர் சிலைகள்பற்றி நயமாய், நகைச்சுவையாய், அதேவேளை நிறைந்த ஆதங்கத்தோடு எழுதப்பட்டுள்ளது.

இடப்பெயர்வின் அவலங்களைச் சொல்லும் கவிதையாக 'வலியின் வடுக்கள்' என்ற கவிதை அமைந்துள்ளது. இதில் உள்ள சில வரிகள் நம் நெஞ்சிலும் வலியின் வடுக்களை ஏற்படுத்திச்செல்வதை உணரலாம்.

"முதலாம் வகுப்பில் தொடங்கிய/ முதலாவது இடப்பெயர்வு
பல வருடக்கணக்காய்/ "தொடர்கதையாய்" தொடர்ந்தது ...முற்றும்"
என்ற வார்த்தைக்காய்/ தவமாய் தவமிருந்தது ...
.................
அனுமதித் தேர்வோ நன்கொடையோ இன்றி
மரநிழல்களின் தஞ்சத்தில்/ திறந்தவெளிப் பாடசாலைகள் .....
பாடசாலையிலிருந்து ஓட/ எங்காவது வெடிச்சத்தம் கேட்காதா?
என்று பிராத்தித்த நேரங்கள் .....

(தொடர்ச்சி 14ஆம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலை இலக்கியச் சாளரம்

# கவிதைக் களம்

## சர்மிலாவின் கவிதைகள்

### மௌனக் காத்திருப்பு

எப்போதுமே நேசித்துக் கொண்டிருக்கிறாயென்னை
எல்லோரிலும் மேலாக.
எனதசைவுகளை இரசித்தபடி
உன் தொடுகையின் ஸ்பரிசம்
நானறியேனின்னும்
என் ஊகங்கள் பொய்த்துப்போகும்
கறுப்பு நொடியொன்றில்
நீயென்னைத் தேடிவந்து
கட்டியணைப்பாய்
என்றோவொருநாள்.

உனது இருண்ட கூந்தலில்
மூடியென்னை முத்தமிட்டுக்கொள்வாய்.
நமதிணைவில் மனம் பொறுக்காத பலர்
புலம்பியழுவர்.
மாலைகள் தருவாய் நீயெனக்கு.

உனக்கொரு பூக்கொடுக்க முடியாதிருப்பேன் நான்.
உன் தொடுகையில்
மூச்சிழந்து கிடப்பேன் நானுன்னோடு
மரணப் பெண்ணே!

### பெண்

பெண்ணிற்கு உவமை வெங்காயமே!
ஏ பெண்ணே... நீ உன் உவமைபோல் இரு...
மற்றவர்கள் உன்னை இழிவுபடுத்தும்போது
அவர்களையும்...
அதை தட்டிக்கேட்கத் தைரியம் இன்றி
வெட்கமின்றி...வேடிக்கை
பார்த்துக்கொண்டு இருப்போரையும்
இனி கண் கலங்க வை.

பெண்னே... நீ கோழை இல்லை
உன் வலிமைகளால் எளிதில்
வெல்லும் திறன் கொண்டவள்...
இனி கலங்காதே கலங்க வை....

### முடிவு!

கடையில் பொம்மைக்கு
உயர் ரக ஆடைகள்.
வீதியில் குழந்தைகள்
கந்தல் துணியோடு.

ஒவ்வொரு முறையும் ஓட்டுப்போட்டு
கைவிரலை கறையாக்கியதுதான் மிச்சம்.

கடைசிவரை கரையேறாமல்
தவிக்கும் எம்மின மக்களின்
முடிவுதான் என்ன?

### மரியாதைக்குரிய பைத்தியக்காரன்

இருண்டுபோனதொரு சிறகாய்
உங்கள் மனவெளியினொரு மூலையில்
உதிர்ந்து கிடக்கும் எனது பெயரை
எரித்துவிடுங்கள்.

உங்கள் வண்ணத்துப் பூச்சிகளெவையும்
எனது முட்கிளைகளில் உட்காரவில்லை.
காரணமில்லா உங்கள் சிரிப்பொலிகள்
காற்றை நிறைத்தபோது
சேர்ந்து சிரிக்க முடியாதவன் நான்.

உங்களின் நிஜ முகங்களும்
கண்களின் உள்ளொளியும்
புரியாத புதிர்களெனக்கு.

உங்கள் முக எழுத்துக்களை
மொழிபெயர்ப்பதைக் காட்டிலும்
ஒரு நாய்க்குட்டியின் முகத்தை
பார்த்துக்கொண்டிருப்பது மேலானது.
ஒரு பெருங்கடலாய் என்முன் நீங்கள்
ஆடி அசைந்தாலும்
ஒரு நீர்த்துளியின் முகவரியின்றி நான்.

## சித்த மருத்துவக் குறிப்புகள்



- **வேர்க்குரு நீங்க :**
சந்தனத்தை பன்னீரில் அரைத்து பூசலாம்.
- **நெருப்புச் சுட்ட புண்ணிற்கு :**
வெந்தயத்தை நீர்விட்டு அரைத்து மேற்பூச்சாக பூச எரிச்சல் தணிந்து ஆறும்.
- **நீர்க்கடுப்பு எரிவு தீர:**
எலுமிச்சம் பழச்சாறும், நல்லெண்ணெயும் கலந்து சாப்பிட நீர்க்கடுப்பு, எரிவு தீரும்.
- **உடல் வலுவுண்டாக :**
சிறியவர் முதல் பெரியவர் வரை அத்தி, ஆலம், அரசு, இதன் விதைகளை சம அளவில் எடுத்து, பாலில் அரைத்து 5 கிராம் காலை மட்டும் உட்கொள்ள பிற நோயிலிருந்து பாதிக்கப்பட்ட உடலையும் உரமாக்குகிறது.
- **குடற்புண் தீர்க்கும் மணத்தக்காளி :**
மணத்தக்காளி கீரையைச் சமைத்தோ, மணத்தக்காளிப் பழத்தை வற்றல் செய்து உணவுடன் சேர்த்து தினந்தோறும் உண்டுவர வயிற்றுப்புண் குணமாகும்.
- **தேமல் மறைய**
கருஞ்சீரகத்தை எண்ணெய்விட்டு கருக வறுத்து அதனை காடி விட்டரைத்து பூச சொறி தேமல் குறையும்.
- **வாயு கலைய**
வெள்ளைப் பூண்டின் மேல் தோலை அகற்றி பசும்பாலில் இட்டு காய்ச்சி அருந்த வாயு கலையும்.
- **பாலுண்ணி மறைய**
சிவப்பு முள்ளங்கி இலையை உலர்த்தி சருகுபோலாக்கி அதனை எரித்து சாம்பலாக்கி, சாம்பலில் கொஞ்சம் எடுத்து ஆமணக்கு எண்ணெய்விட்டு குழப்பி ஒரு வெள்ளைத் துணிமீது தடவி பாலுண்ணிமீது சில தினங்கள் போட குணமாகும்.
- **தொண்டை நோய்க்கு**
கடுகை குடிநீர் செய்து தேன்விட்டு உள்ளுக்கு கொடுக்க தொண்டை நோய் நீங்கும்.
- **தீச்சுட்ட புண்களுக்கு**
வேப்பங் கொழுந்தைச் சிதைத்து ஆமணக்கிலையில் பொதித்து உப காந்தலில் பொதித்து வெந்த பதத்தில் எடுத்து மேற்படி புண்மேல் வைத்துக்கட்ட தீச்சுட்டபுண் ஆறிவிடும்.

## கொஞ்சம் சிரிங்க

*குமார் :* வைக்கோல் சாப்பிட்டா கண் பார்வைக்கு நல்லது.
*ரவி :* சும்மா அளக்காதே.
*குமார் :* உண்மையாகத்தான் சொல்லுறேன். எந்த மாடாவது மூக்குக் கண்ணாடி போட்டிருக்கா?

..................

***மனைவி :*** என்னங்க பின்னாடி இருந்து ஒருத்தர் என் காலை சுரண்டுறாங்க...!!!
***கணவன் :*** அப்படியே திரும்பி முகத்தைக் காட்டு. நாதாரி சாகட்டும்.

..................

நோயாளி : டாக்டர் சொறியும்போது எனக்கு பொரிப் பொரியா வருது.
டாக்டர் : அதிசயமா இருக்கே! இன்னும் கொஞ்சம் நாலா சொறிங்க, பொட்டுக்கடலை, பட்டாணி எல்லாம் வருமான்னு பார்க்கலாம்.

..................

**மதன்:** மயானத்தில் ஏன் பெண்கள் அனுமதிக்கப் படுவதில்லை!
ரவி : அங்காவது ஆண்கள் நிம்மதியாக இருக்கட்டும் என்றுதான்...!

## சமையல் குறிப்பு

### அப்பிள் புடிங்



**தேவையானவை:**
அப்பிள் - 4, சீனி - 1கப்,
லவங்கப் பொடி - சிறிதளவு,
கிஸ்மிஸ் - அரைக்கப்,
எலுமிச்சைச்சாறு - 1 தேக்கரண்டி,
வெண்ணெய் - 1 தேக்கரண்டி, வெந்நீர் - கால் கப்.

**செய்முறை :**
அப்பிளைத் தோல் சீவி மெல்லிய துண்டுகளாக நறுக்கவும், உலர்ந்த திராட்சைப் பழங்களை ஒரு மணி நேரம் வெந்நீரில் ஊறவிடவும், பெரிய மைக்ரோ வேவ் தட்டில் அப்பிள் துண்டுகளை அடுக்கவும். அதன்மேல் வெந்நீரில் ஊறிய உலர்ந்த திராட்சையை வெந்நீரோடு ஊற்றிப் பரப்பவும், அதன்மேல் சீனி, லவங்கப்பட்டைத் தூள் ஆகியவற்றைத் தூவி, எலுமிச்சை சாற்றைத் தெளிக்கவும், மூடி வைத்து 3 நிமிடங்கள் மைக்ரோ ஹையில் வேகவிடவும், சூடாகவோ, ஜில்லென்றோ சாப்பிடவும்.

## குளிர்சாதனப் பெட்டியில் வைக்கக்கூடாத பொருள்கள்

### வெங்காயம்



வெங்காயம் பொதுவாகக் காற்றோட்டமான சூழ்நிலையில் இருக்க வேண்டும். பொலித்தீன் பையில் அடைத்து விற்கப்படும் வெங்காயத்தையும் நாம் வாங்கி வீட்டுக்குக் கொண்டு வந்த பிறகு அதனைக் காற்றோட்டமாக வைக்க வேண்டும்.

### பூண்டு



பூண்டை எப்போதுமே குளிர்சாதனப் பெட்டியில் வைக்கக்கூடாது. அப்படி வைத்தால் அது பூஞ்சணம் பிடிக்க ஆரம்பித்துவிடும். அதனைக் காற்றோட்டமான சூழலில் வைக்க வேண்டும். பூண்டுகளை வாங்கி வந்ததும், அதனை தனித்தனி பல்லாகப் பிரித்து எடுத்து வைக்கலாம்.

### பூசணிக்காய்



பூசணிக்காயை நன்கு காற்றோட்டமான இடத்தில் வைக்க வேண்டும்.

### உருளைக்கிழங்கு



உருளைக் கிழங்குகளை குளிர்சாதனப் பெட்டியில் வைக்கக்கூடாது. அது போலவே அதனைக் கழுவியும் எடுத்து வைக்கக்கூடாது. உருளைக் கிழங்குகளில் பச்சை வேர்கள் மற்றும் பச்சை நிறம் இல்லாமல் பார்த்து வாங்கவேண்டும். காற்றோட்டமான சூழலில் வைக்கவேண்டும். பொலித்தீன் பையில் வைக்கக்கூடாது.

### வாழைப்பழம்



வாழைப்பழத்தை குளிர்சாதனப் பெட்டியில் வைத்தால் அது விரைவில் கெட்டுப்போய் தோல் கறுத்துவிடும். எனவே வாழைப்பழத்தை குளிர்சாதனப் பெட்டியில் வைக்கக்கூடாது.

### தேன்

உலகத்திலேயே கெட்டுப்போகாத உணவுப் பொருள் என்று ஒன்று உண்டு என்றால் அது தேன்தான். ஆனால், நாம் இப்போது கடைகளில் வாங்கும் தேன், சுவை மற்றும் பலவற்றுக்காக பலவித பொருள்கள் கலக்கப்பட்டு வருகின்றது. எனினும், தேனை குளிர்சாதனப் பெட்டியில் வைத்துப் பராமரிக்கக்கூடாது.

## மன்னா விளம்பரப் பலகை

ஈரம் இருக்கும்வரை இலைகள் உதிர்வதில்லை. நம்பிக்கை இருக்கும்வரை நாம் தோற்பதில்லை!

உங்களை நம்பியவர்களை ஒருபோதும் காயப்படுத்தாதீர்கள். அதன் வலியைப் போக்க எப்போதுமே வழியிருக்காது.

......................

வெற்றி வந்தால் பணிவு அவசியம். தோல்வி வந்தால் பொறுமை அவசியம். எதிர்ப்பு வந்தால் துணிவு அவசியம். எது வந்தாலும் நம்பிக்கை அவசியம்.
***A. யோச்ராசன் கியூட்சன், களிமோட்டை***

உன்னிடம் அன்பாகப் பேசும் பொய்யான உள்ளத்தைவிட உன்னிடம் உரிமையோடு பழகும் உள்ளத்தை நேசி. அதுவே உண்மையான அன்பு.

......................

இழப்புக்கள் இல்லாமல் வாழ்க்கை ஏது!
தோல்விகள் இல்லாத மனங்கள் ஏது!

முடியும் என்பது மூலதனம், முடியாது என்பது மூடத்தனம்.

......................

இன்னொருவர் வேதனை இவர்களுக்கு வேடிக்கை. இதயமில்லா மனிதருக்கு இதெல்லாம் வாடிக்கை.
***T. நிலுக்சிக்கா, பொன்தீவுகண்டல், முருங்கன்***

மனிதர்களை அன்பினால் அரவணைத்துக்கொள்வதன் மூலம் இலகுவில் வசப்படுத்த முடியும்.

......................

அழகு முகத்தில் மட்டும் இல்லை. பலநேரங்களில் மனதில்..... சில நேரங்களில் வார்த்தைகளில்....!!
***S. ஆன் சாணுஷா, களிமோட்டை, முருங்கன்***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவழிபாடு

## திருவழிபாடு பற்றிய கேள்வி பதில்களும் இறையியல் விளக்கங்களும்

## தொடர் 6 -

## 2.8 திருக் கலைகள்

**"திரு உறைவிட அமைப்பையும் அதன் அனைத்துப் பொருள்களின் அமைப்பையும் நான் உனக்குச் சொல்லிக் காட்டுகிறபடி யெல்லாம் செய்யுங்கள்" (விப. 25:9).**

**113. திருவழிபாட்டுக்கான கட்டடங்கள், பொருள்கள் எவ்வாறு திகழ வேண்டும்?**

- அவை தகுதியும் அழகும் கொண்டவையாகவும்
- இறைப்பற்றைத் தூண்டி வளர்ப்பவையாகவும்
- மறைநிகழ்வுகளின் புனிதத்தை வெளிப்படையாகக் காட்டுவதாகவும்
- விண்ணுலகைச் சார்ந்தவற்றைக் குறிக்கும் அடையாளங்களாகவும் திகழ வேண்டும்.

**114. திரு உருவங்கள் எவ்வாறு இடம்பெற வேண்டும்?**

- இறை மக்களை நம்பிக்கையின் மறைநிகழ்வுகளுக்கு இட்டுச் செல்லும் வண்ணம் இவை அமைக்கப்பட வேண்டும்.
- இவை நம்பிக்கையாளரின் கவனத்தை சிதறச்செய்யா வண்ணம் ஒழுங்காக அமைக்கப்பட வேண்டும்.
- இவை இறைப்பற்றை வளர்க்கக்கூடியதாகத் திகழச்செய்ய வேண்டும்.
- ஒரு புனிதரின் உருவம் ஒன்றுக்குமேல் இருக்கக்கூடாது.

**115. நம் கத்தோலிக்க வழிபாட்டில் ஏன் திருஉருவங்கள் பயன்படுத்தப்படுகின்றன?**

சிலையைக் கடவுளாக வழிபடுவதும், சிலையே கடவுள் என்று வழிபடுவதும்தான் விவிலியத்தில் கண்டிக்கப்பட்டுள்ளது. எனவே கடவுளை/ கிறிஸ்துவை, ஏன் புனிதர்களைக் குறித்துக் காட்டும் அல்லது எடுத்துக்கூறும் பிரதி உருவங்களைக் கொண்ட வழிபாடு சிலை வழிபாடு அல்ல என்பது தெளிவு.

திரு உருவங்களைப் பயன்படுத்துவதைப்பற்றி இரண்டாம் வத்திக்கான் சங்கம் பின்வருமாறு எடுத்தியம்புகிறது: "நம்பிக்கை கொண்டோரின் வணக்கத்திற்காகக் கோவில்களில் திரு உருவங்களை வைக்கும் வழக்கம் நிலைத்து நிற்கட்டும். எனினும் கிறிஸ்தவ மக்களிடையே வியப்பைத் தூண்டி எழுப்பாமலும்... குறைவான பக்தியில் அவர்கள் ஈடுபடாமலும் இருக்குமாறு இத்திரு உருவங்களின் எண்ணிக்கையைக் குறைப்பதோடு, அவற்றை வைப்பதில் பொருத்தமான ஒழுங்கையும் பின்பற்ற வேண்டும்" (திவ. 125).

அச்சு, வரைபடம் போன்றவை தோன்றுவதற்கு முன்பாக, உருவங்கள், சிற்பங்கள்தான் கல்வி பயிலாதவர்களுக்கு நம்பிக்கையைக் கற்றுக்கொடுக்க உறுதுணையாயிருந்தன. சொல்லப்போனால் இவை வழியாகத்தான் கிறிஸ்தவ மறையின் கல்வி போதிக்கப்பட்டிருக்கிறது.

இவ்வாறு திருஉருவங்களைப் பயன்படுத்துவது இருவித நோக்கங்களை முன்னிறுத்துகின்றது:

1. பிரதிநிதித்துவமாக இருக்கின்ற திருஉருவங்கள் அங்கு குறிப்பிட்ட புனிதரைப்பற்றி எடுத்துச் சொல்கின்றன.
2. நாம் செலுத்தும் மரியாதையோ வணக்கமோ அந்தத் திரு உருவத்திற்கு அல்ல, மாறாக அந்தத் திருஉருவம் குறித்துக் காட்டும் புனிதருக்கே உரியது.

**116. திருக்கலைஞர்கள் எத்தகையப் பண்புகளைக் கொண்டிருக்க வேண்டும்?**

அ) அவர்கள் உண்மையான கலைச் சிறப்பைக் கவனத்தில் கொள்தல் அவசியம்:

ஆ. நம்பிக்கை, இறைப்பற்று ஆகியவற்றை இறைமக்களின் உள்ளத்தில் வளர்க்கக்கூடிய விதத்தில் ஒவ்வொரு அடையாளத்தின் உண்மைப்பொருள் விளங்கும்படியாகவும் அவர்களின் அலுவல் அமைந்திருக்கும்படியாகவும் பார்த்துக்கொள்ள வேண்டும்.

**117. பீடம் எவ்வாறு அணிசெய்யப்பட வேண்டும்?**

- பீடம் அணிசெய்யப்படுவது மிதமான அளவோடு இருக்க வேண்டும்:
- காலத்தின் தன்மைக்கு ஏற்றவாறு மிதமான அளவில் மலர்களால் அணிசெய்யப்பட வேண்டும்.
- மலர்கள் பீடத்தின்மீது இருப்பதைவிட பீடத்தைச்சுற்றி வைக்கப்பட வேண்டும்.
- பீடத்தின்மேல் திருப்பலிக்குத் தேவையான பொருள்கள் மட்டுமே வைக்கப்பட வேண்டும் (ஒலி வாங்கிகள் விதிவிலக்கு உடையவை).
- பீடத்தின்மீதோ அதன் அருகிலோ வைக்கப்படுகின்ற மெழுகுத்திரி தண்டுகள் பீடத்தில் இருப்பதையோ நிகழ்வதையோ பார்க்கத்தடையாக இருக்கக்கூடாது.

**118. கோவிலை எவ்வாறு அணிசெய்ய வேண்டும்?**

- எந்தவித பகட்டும் இன்றி மாண்புமிகு எளிமையை உணர்த்துவதாய் இருக்க வேண்டும்.
- புனித இடத்திற்குப் பெருமை சேர்ப்பதாகவும் இருக்க வேண்டும்.

**119. நற்கருணைப் பேழை என்பது என்ன? அது எவ்வாறு கோவிலில் இடம்பெற்றிருக்க வேண்டும்?**



- தூய்மைமிகு நற்கருணையைப் பாதுகாக்கப் பயன்படுத்துவதுதான் நற்கருணைப் பேழை. ஒரே ஒரு பேழைதான் இடம்பெற வேண்டும்.
- இது மேன்மைமிக்கதாகவும் தெளிவாக எல்லாராலும் காணக்கூடியதாகவும் இறைவேண்டல் செய்வதற்கு ஏற்றதாகவும் இருக்க வேண்டும். எனவே பொருத்தமான, தகுதியான இடத்தில் இருக்க வேண்டும்.

**120. நற்கருணை எழுந்தேற்ற அரியணையில் (Eucharistic Exposition) பயன்படுத்தப்படும் மின் ஒளியைப் பற்றி...**

- ஒரு கலைக்கூடத்திலோ வெண் திரையிலோ கொடுக்கப்படுவது போன்ற அலங்கார மின்விளக்குகளைத் தவிர்ப்பது நல்லது. எந்த ஒரு மின் ஒளி அலங்காரமும் நற்கருணைக்கு மட்டுமே நமது ஈர்ப்பைத் திருப்புவதாக அமைய வேண்டும். அதே சமயத்தில் எந்த ஒரு மின் ஒளி அலங்காரமும் நற்கருணைப் பேழைமுன் எப்போதும் எரிந்துகொண்டிருக்கும் சிறப்பு விளக்குக்கு மாற்றாக அமைய முடியாது.

## 2.9 திருவழிபாட்டுப் பணியாளர்கள்

"ஆண்டவரின் குருக்களே ஆண்டவரை வாழ்த்துங்கள்... ஆண்டவரின் ஊழியரே ஆண்டவரை வாழ்த்துங்கள்..." (தானியேல் 61:32).

2.9.1 திருவழிபாட்டை நிறைவேற்றும் நியமனம் பெற்ற இறைபணியாளர் :

**121. திருவழிபாட்டிற்குரிய இறைபணியாளர்கள் யார் யார்?**

ஆயர், அருள்பணியாளர், திருத்தொண்டர் (Deacon), பீடத் துணைவர் (Acolyte), வாசகர் (Lector), நற்கருணை வழங்க நியமனம் பெற்ற அசாதாரணப் பணியாளர்கள் (Extra-ordinary ministers) ஆகியோர்.

**122. ஆயரின் திருவழிபாட்டுப் பணி என்ன?**

அருள்பணியாளருக்கு உரிய பணிகளை ஆற்றுவது மட்டுமன்றி, திருநிலைப்பட்டங்களையும், உறுதிப்பூசுதலையும் கொடுக்க ஆயருக்கு உரிமை உண்டு: மேலும் கோவில்கள், பீடங்கள், திருக்கலங்கள், திருஎண்ணெய் ஆகியவற்றை நேர்ந்தளிக்கும்/ புனிதப்படுத்தும் பணியும் அவருடையது ஆகும்.

**123. அருள்பணியாளரின் திருவழிபாட்டுப் பணி என்ன?**

திருப்பலி, அருளடையாளங்கள், திருச்சடங்குகள் ஆகியவற்றை நிறைவேற்றுவது, மறையுரை வழங்குவது, ஆயரின் அனுமதி பெற்றிருந்தால் உறுதிப்பூசுதல் வழங்குவது, ஆயர் மட்டுமே புனிதப்படுத்தக்கூடியவைகளைத் தவிர்த்து மற்றவைகளைப் புனிதப்படுத்துவது ஆகியவை.

**124. திருத்தொண்டரின் திருவழிபாட்டுப் பணி என்ன?**

திருப்பலியில் அருள்பணியாளருக்கு உதவிபுரிவது, நற்செய்தி வாசக நூலை ஏந்திச்செல்வது, நற்செய்தியை முழங்குவது, மறையுரை வழங்குவது, பீடத்தில் திருக்கிண்ணத்தையும் திருப்பலி நூலையும் பயன்படுத்த உதவுவது, தூபமிடுவதில் உதவுவது, பொது மன்றாட்டின் கருத்துக்களைச் சொல்வது, காணிக்கைப் பொருள்களைத் தயாரிப்பது, உறவின் வாழ்த்தை அறிவிக்க அழைப்பது, நற்கருணையை நோயாளிகளுக்கு எடுத்துச் செல்வது, நற்கருணை வழங்குவது, அதன் பின்னர் நற்கருணைக் கலங்களைத் தூய்மைப்படுத்துவது, நற்கருணைக்குப்பின் அறிவிப்புகளைக் கொடுப்பது, பிரியாவிடை வழங்குவது, சில அருளடையாளங்களை வழங்குவது, திருவழிபாட்டு நிகழ்வுகள் தவிர, பிற திரு நிகழ்ச்சிகளை (para-liturgy) நிறைவேற்றுவது ஆகியன. எடுத்துக்காட்டாக, நற்கருணை ஆசி வழங்குதல், செபமாலை, திருச்சிலுவைப் பாதை, நவநாள், மாதாந்திர பக்திமுயற்சிகள் போன்றவைகளை வழிநடத்துதல்.

**125. இறைமக்களின் கடமைகள் என்ன?**

தாங்களும் திருவழிபாட்டு நிகழ்வுகளைக் கொண்டாடுபவர் என்ற உணர்வை முதலில் இறைமக்கள் அனைவரும் கொள்ள வேண்டும். அடுத்ததாக, திருப்பலியில் இறைமக்கள் அரச, குருக்களின் கூட்டத்தினராய் இருப்பதால் இறைவனுக்கு நன்றி செலுத்தவும் மாசற்ற பலிப்பொருளை அருள்பணியாளரோடு சேர்ந்து இறைவனுக்குத் தங்களையே ஒப்புக்கொடுக்கும் கடமைகளைக் கொண்டுள்ளனர். எனவே திருப்பலியில் பங்கேற்கும்போது இறைமக்கள் அனைவரையும் சகோதரர் சகோதரிகளாக தாங்கள் கொள்ளவேண்டும். திருவிருந்தில் பங்குகொண்டு ஒருடல் ஆக வேண்டும். திருப்பலியில் ஏதாவது குறிப்பிட்ட ஒரு பணியை ஆற்றி தங்கள் பொறுப்பையும் ஒன்றிணைப்பையும் வெளிப்படுத்த வேண்டும்.

**126. பீடத்துணைவரின் பணி என்ன?**

திருப்பலியின் தொடக்கத்தில் திருச்சிலுவையை ஏந்தி வருவது. அருள்பணியாளருக்கோ, திருத்தொண்டருக்கோ பீடத்தில் துணைபுரிவது, காணிக்கைப் பொருள்களைத் தயார் செய்வது, நற்கருணை வழங்குவது: தூபம் காட்டுவது, தேவைப்பட்டால் ஆயரின் அனுமதிபெற்று திருக்கலங்களைத் தூய்மைப்படுத்துவது ஆகியன.

**127. வாசகரின் பணி என்ன?**

வருகைப் பவனியின்போது நற்செய்தி வாசக நூலை ஏந்திச் செல்வது, வாசக மேடையில் இருந்து நற்செய்தி வாசகம் தவிர பிற விவிலிய வாரங்களை வாசிப்பது: பதிலுரைத் திருப்பாடலையும் பொது மன்றாட்டின் கருத்துக்களையும் எடுத்துரைப்பது, திருப்பலி நூலில் உள்ள வருகைப் பல்லவி, திருவிருந்துப் பல்லவி ஆகியவற்றை உரிய நேரத்தில் வாசிப்பது.

**128. மறையுரையாளர் எங்கிருந்து தன் பணியை ஆற்ற வேண்டும்?**

திருவிருந்துக்கு என்று தனிப்பீடம் (பலி பீடம்) இருப்பதுபோன்று இறைவார்த்தைக்கும் தனிப் பீடம் (வாசக மேடை) இருக்கின்றது. மறையுரை இறைவார்த்தை வழிபாட்டின் ஒரு பகுதியாக இருப்பதால், இவ்வழிபாட்டின் தனித்தன்மையை உணர்த்தும் வகையில் வாசகமேடையிலிருந்தே அது வழங்கப்படுவது சிறந்தது.

மக்கள் பார்க்கும்படி வேறொரு வசதியான இடத்திலிருந்து மறையுரை ஆற்றலாம் என்று விதிமுறை சொன்னாலும் அது பீடத்திலிருந்து ஆற்றப்படக்கூடாது. ஏனைய வசதியான இடம் என்பது பீடம் தவிர பிற தகுதியான இடங்களைக் குறிக்கும். எடுத்துக்காட்டாக, பீடத்தின் முன்பாக, அருள்பணியாளரின் இருக்கை முன்பாக, எனவே வாசக மேடை, பலி பீடம் இவை இரண்டிற்கும் உரிய தனித்தன்மை காக்கப்பட வேண்டும் (திவ 52, GIRM, 136).

**129. யார் மறையுரை வழங்கலாம்?**

பொதுவாக, திருப்பலியைத் தலைமை ஏற்று சிறப்பிப்பவரே மறையுரை ஆற்ற வேண்டும். அதாவது அப்பத்தைப் பிடுகிறவரே வார்த்தையையும் பிடுவதுதான் சிறப்பானதாகும். திருத்தொண்டரோ வேறொரு கூட்டுப்பணியாளரோ இப்பணியை ஆற்றலாம். விதி விலக்காக, சிறுவர் திருப்பலியின்போது, அருள்பணியாளர் குழந்தைகளின் மனநிலைக்கு ஏற்றவாறு பேசுவதற்கு கடினம் என நினைத்தால் மேய்ப்பரின் அல்லது திருத்தல அதிகாரியின் (Pastor or Rector) ஒப்புதலுடன், பொதுநிலையினரில் ஒருவர் நற்செய்தி வாசகத்திற்குப்பின் குழந்தைகளுடன் பேசலாம் (DOL 246 & 2157)

அ. அருள்பணியாளர் அல்லது திருத்தொண்டர் உடல்நலக் குறைவுள்ளவராக இருந்தால், வேறொரு அருள்பணியாளரோ, திருத்தொண்டரோ கிடைக்காமல் இருந்தால், இதனால் நம்பிக்கையாளர் இறைவார்த்தையின் விளக்கம் பெறாமல் அவர்களின் ஆன்மிக வாழ்வுக்குத் தடையாக இருக்கும் என்று நினைத்தால் ஆயர்கள் தகுதியான பொது நிலையினருக்கு திருப்பலியின்போதுகூட இப்பணியை ஆற்ற அதிகாரம் வழங்கலாம்: இதன் வழியாக நம்பிக்கையாளர் அந்த குறிப்பிட்ட நாளைப் புனிதப்படுத்தத் தேவையான உதவியைப் பெற்றுக்கொள்கின்றனர்.

ஆ. சில சிறப்பான கொண்டாட்டங்களில் தகுதி வாய்ந்த பொதுநிலையினரின் பேச்சு ஆற்றலுள்ளதாக இருக்கும் என்று நினைத்தால், ஆயர்கள் இதற்கான அதிகாரம் வழங்கலாம்.

இ. சூழ்நிலைக்கு ஏற்றவாறு, பொதுநிலையினர் ஆற்றும் மறையுரைக்கு அருள்பணியாளர் முன்னுரையும் முடிவுரையும் வழங்கலாம்.

ஈ. பொதுநிலையினர் இப்பணியை ஆற்ற ஆயரிடமிருந்து கட்டளைப் பேராண்மை பெற்றிருக்க வேண்டும்.

உ. பொதுநிலையினரை நியமனம் செய்வதற்கு உரிய ஒழுங்குகளை ஆயர்கள் பேரவை நிர்ணயிக்க வேண்டும். இதற்கான சிறப்பு நிலைப்பாடுகள்: தேவையான அறிவுத்திறன், வாழ்வில் கிறிஸ்தவ பண்பாடு: திருச்சபையின் படிப்பினைகளுக்கும் தல ஆயருக்கும் கீழ்ப்படிதல் முதலியன.

**130. நற்கருணை வழங்க நியமனம் பெற்ற அசாதாரணப் பணியாளர்கள் யார்?**

நற்கருணை வழங்க நியமனம் பெற்ற அசாதாரணப் பணியாளர்கள் சிலர் உண்டு: நியமனம் பெற்ற பீடத் துணைவர், வாசகர், துறவியர் மற்றும் நியமனம் பெற்ற பிற பொதுநிலையினர்.

**131. வாசகரோ நற்கருணையின் அசாதாரணப் பணியாளரோ எவ்வாறு தேர்ந்தெடுக்கப்படுகிறார்?**

தகுதியுள்ளவராக, மரியாதைக்குரியவராக, தொண்டாற்றுகிறவராக, நல்ல கத்தோலிக்கராக, புனிதப்பணிகளை எடுத்துச்செல்பவராக, நல்ல எடுத்துக்காட்டான வாழ்க்கை வாழ்பவராக விளங்க வேண்டும்.

**132. திருத்தந்தைக்கு மட்டுமே உரிய திருவழிபாட்டுப் பணிகள் ஏதேனும் உண்டா?**

ஆயர்களுக்கு உரிய அலுவல்களை எல்லாம் நிறைவேற்ற திருத்தந்தை அதிகாரம் கொண்டிருப்பதோடு, சில சிறப்பான நிகழ்வுகள் அவருக்கு மட்டுமே உரித்தானவை. புனிதர் பட்டம் வழங்குவதும், ஆயர்களைப் பொதுச் சங்கத்திற்கு அழைப்பதும், அதற்குத் தலைமை வகிப்பதும் பேராயர்களுக்கு உரிய சிறப்பு திருவுடையை (Pallium) அணிவிப்பதும் திருத்தந்தைக்கு மட்டுமே உரிய பணிகள்.

குறிப்பு: தற்போதைய நடைமுறைப்படி அருளாளர் பட்டம் வழங்க தலத்திருச்சபையின் தலைவர்களுக்கு திருத்தந்தை சிறப்பு அதிகாரம் வழங்குகிறார்.

(அடுத்த மாதமும் தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.166

சீராக் 1முதல் 20 அதிகாரம் வரை

உங்கள் விடைகளை யூலை மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கவும். சரியான விடைகளை எழுதும் மூன்று அதிஸ்ரசாலிகளுக்கு பரிசுத்தொகைகள் அனுப்பிவைக்கப்படும். பாராட்டுப்பெறும் 50 பேருடைய பெயர் விபரங்கள் மன்னாவில் பிரசுரிக்கப்படும். (பதிப்பாசிரியர்)

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 18 | 10 | ❖ | 05 | | | 02 |
| 19 | | | | | | | 11 | | |
| | 07 | | 08 | | | | | 04 | |
| | | | | | | 1 | | | |
| | | | | | 20 | | | | |
| | | 13 | | 06 | 22 | 15 | | | 03 |
| 14 | | | | ❖ | | | | | |
| | | | | 23 | | | | | |
| | 12 | | | | | | 24 | 17 | |
| | | | 09 | | 21 | | | | 16 |

உங்கள் விடைகளை,
*குறுக்கெழுத்துப் போட்டி,*
*மன்னா பத்திரிகை அலுவலகம்,*
*கலையருவி,*
*இல. 116/3, சென். ஜோசப் வீதி,*
*பெற்றா,*
*மன்னார்*
என்ற முகவரிக்கு அனுப்பவும்.

### இடமிருந்து வலம்

1. தம் ................ ஏற்ப எல்லா உயிர்களுக்கும் அவரே அதைக் கொடுத்துள்ளார்.
5. .......... க் குறைவு பாவம் செய்வதினின்று அவர்களைத் தடுத்தாலும். வாய்ப்புக் கிடைக்கும்போது அவர்கள் தீங்கு செய்வார்கள்.
7. ஆண்டவரிடம் ................ கொள்ளுதலே ஞானத்தின் நிறைவு.
9. உன் ஆற்றலுக்கு மிஞ்சியதை ............
11. உன்னிடம் உதவி வேண்டுவோரிடமிருந்து ............... கண்களைத் திருப்பிக்கொள்ளாதே.
15. அவர்களிடம் நீ சென்றால் ................. ஏதும் செய்யாதே.
19. சிறிது நேரத் .............. முன்னர் துய்த்த இன்பத்தை மறக்கச் செய்கிறது.
20. பொறாமை கொண்டோர் ..............

### வலமிருந்து இடம்

1. மனம் ஒப்பாது கொடுக்கும் ............. அதனைப் பெறுவோருக்கு எரிச்சலையே கொடுக்கும்.
4. .......... இழக்கும் நேரத்தில் உயிர் நீப்போர் உளர்.
9. கடவுளைப்பற்றிய எல்லா உரைகளுக்கும் செவிசாய்ப்பதில் .......... காட்டு.
11. ............. விதைத்து, பின் நல்ல விளைச்சலுக்காகக் காத்திருக்கும் உழவர் போன்று ஞானத்தை அணுகு.
16. இறந்தோரைக் கண்டு ..........
18................ நற்செயல் செய்யும் பண்பும் அவரிடமிருந்தே உண்டாகின்றன.


### மேலிருந்து கீழ்

2. ஒவ்வொரு மனிதரும் .............. அடுத்திருப்பவர்மீது அன்பு செலுத்துகிறார்.
3. உயிர் ............. அனைவருக்கும் கனிவோடு கொடு.
4. ஞானியர் ............ நேரம் வரும்வரை அமைதி காப்பர்.
7. .................. அறிவாற்றல் குறைந்தாலும் பொறுமையைக் கடைப்பிடி:
8. .......... எல்லார் முன்னிலையில் உன்னைத் தாழ்த்துவார்.
10. வறுமையில் உழல்வோருக்குக் ......... தாழ்த்தாமல் உதவி செய்.
11. தாயைவிட அவர் ............. மீது அன்புகூர்வார்.
13. நீ விரும்பும் ஞானத்தை உனக்கு ................
14. அவர்களது கற்பில் அக்கறை காட்டு: அவர்களுக்கு மிகுதியாகச் .............. கொடுக்காதே.
15. நோயாளிகளைச் சந்திக்கத் ......................
22. தாய் போன்று ......... அவர்களை எதிர்கொள்ளும்.
23. உன்னிடம் நயந்து ..........உனக்குத் தேவையானது என்ன? எனக் கேட்பர்.


### கீழிருந்து மேல்

3. கொடுத்து............. மகிழ்ந்திரு.
4. அவரது எல்லாம் வல்ல .............. பற்றிய அறிவே.
6. ............... தாங்காமல் சிலர் தங்கள் நண்பர்களுக்கு உறுதிமொழி வழங்குகின்றனர்.
7. அவர்மீது ............. செலுத்துவோர் அவர்தம் வழிகளைப் பின்பற்றுவர்.
9. ........... பரிவும் இரக்கமும் உள்ளவர்.
12. ............... அதனைத் தோளில் தூக்கிச் சுமந்துசெல்.
13. சிறிது சிறிதாக உன்னை ............. கறந்து, இறுதியில் உன்னை எள்ளி நகையாடுவர்.
14. அவர்தம் ........... அறிவிக்க யாருக்கும் அதிகாரம் கொடுக்கவில்லை:
17. அவர்களின் உள்ளம் தங்களைப் படைத்தவரைவிட ............. போகின்றது.
21. இவைப்பற்றி மனிதர் நினைத்துப் பார்ப்பதில்லை.
24. வாயாடியைக் கண்டு அவர்களின் நகரத்தார் .........

## விவிலியக்குறுக்கெழுத்துப் போட்டி இல. 164
## சரியான விடைகளை அனுப்பியவர்களில் பரிசுபெறும் மூன்று அதிஸ்ரசாலிகள்:



முதலாம் பரிசு:
J. நிசாந்தினி,
எழுத்தூர்,
மன்னார்



இரண்டாம் பரிசு:
A. மேரி பற்றிமா,
பார்மெனி வீதி,
கீரி, மன்னார்

மூன்றாம் பரிசு:
அ. சுதர்சனா
மருதமடு,
சிலாவத்துறை

விடைகளை எழுதி அனுப்பியவர்கள் 77 பேர்.
சரியான விடைகளை எழுதியோர் 66 பேர்.

## விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல. 164ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில் பாராட்டுப் பெறும் போட்டியாளர்கள்

1. அ. குமார், முதலைகுத்தி, உயிலங்குளம்.
2. எ. டினேஸ், சுண்டிக்குளி, முருங்கன்.
3. கே. துளசிகன், சிதம்பரபுரம், வவுனியா.
4. டொ. டர்லின் றொக்சி, சிறுத்தோப்பு, பேசாலை.
5. திரு. நீக்கலஸ் சேவியர், பெற்றா, மன்னார்.
6. அ. மேரி டொறேதியா குரூஸ், 6ம் வட்டாரம், வங்காலை.
7. J. ஜோசிற்றா, ஒல்லிமோட்டை, மன்னார்.
8. யோ. டினேஷியன், உப்புக்குளம், மன்னார்.
9. M. மாலா, எமில்நகர், மன்னார்.
10. என். சி. யூலியானி றோச், பள்ளிமுனை, மன்னார்.
11. தா. தனுசன், வேப்பங்குளம், வவுனியா.
12. ம. செல்ரன், இலுப்பைக்கடவை, மன்னார்.
13. மைக்கல் அன்ரனி சிபானிகா, சின்னக்டை, மன்னார்.
14. மு. டெனிஸ் மீனா, நாச்சிக்குடா, முழங்காவில்.
15. சா. கிளின்ரன் மொறாய்ஸ், முத்தரிப்புத்துறை.
16. கி. எமறின் திலிக்கா, அடம்பன் தாழ்வு, வட்டக்கண்டல்.
17. N. செ. மரியம்மா பீரிஸ், ஆனாள்நகர், வங்காலை.
18. S. C. C. நவரத்தினராஜா, முதலியார்குளம், செட்டிகுளம்.
19. அ. இசக்கியேல், ஜோசப்வாஸ் நகர், தோட்டவெளி.
20. அ. அகஸ்ரீனா, உயிர்த்தராசன்குளம், முருங்கன்.
21. T. S. லீலாவதி, சாந்திபுரம், மன்னார்.
22. அ. ஸ்ரெலா மேரி, துட்டுவாகை, நேரியகுளம்.
23. அ. அனுஷியன், களிமோட்டை, முருங்கன்.
24. தேவிகா பத்மராஜா, பெற்றா, மன்னார்.
25. J. செபதிக்கா, புதுக்கமம், உயிலங்குளம்.
26. கமலா கிறிஸ்தோப்பர், பெற்றா, மன்னார்.
27. கிறிஸ்ரின் ஏஞ்சல் டலிமா, 1ம் வட்டாரம், பேசாலை.
28. ஜோன் இம்மானுவேல், கல்பிட்டி வீதி, மாம்புரி.
29. ச. டிலைக்சனா, கள்ளிகட்டைக்காடு, உயிலங்குளம்.
30. B. கெஸ்மி பொனிஷா, மகாகல்கமுவ, கல்கமுவ.
31. J. E. மானுசா அருளினி, குழந்தை யேசு வீதி, மாம்புரி.
32. M. J. லெம்பேட் கன்னியர்மட வீதி, மன்னார்.
33. P. S. பானு, நறுவிலிக்குளம், வங்காலை:
34. M. பிளண்ரீனா, கன்னியர்மட வீதி, மன்னார்.
35. நி. யாழிசன், செட்டிகுளம்.
36. S. குலோஜினி மொறாய்ஸ், 1ம் வட்டாரம், வங்காலை.
37. டா. மேரி யோசேப்பின், ப. கிழக்கு, பள்ளிமுனை.
38. ம. கொலின்ரன், இலுப்பைக்கடவை, மன்னார்.
39. ம. நதியா, மருதமடு, சிலாவத்துறை.
40. ஞா. கெலன்றீசா, முதலைகுத்தி, உயிலங்குளம்.
41. க. மடோனா, சிதம்பரபுரம், வவுனியா.
42. A. எவிறிட்னி, ஒல்லிமோட்டை, மன்னார்.
43. என். சி. ஜெகஜீவன் றோச், பள்ளிமுனை, மன்னார்.
44. சா. சாளினி மொறாய்ஸ், முத்தரிப்புத்துறை.
45. கி. றொசாந்தினி, வட்டக்கண்டல், மன்னார்.
46. N. ஜஸ்மின், முதலியார்குளம், செட்டிகுளம்.
47. பி. நித்தியானந்தன் குரூஸ், ஆனாள்நகர், வங்காலை.
48. கி. ஆன் மயூரிகா, வேப்பங்குளம், வவ்னியா.
49. M. மேரி மதலேனா, கல்பிட்டிவீதி, மாம்புரி.
50. அ. பிறின்சி கிறிஸ்றா, ஜோசப்வாஸ்நகர், தோட்ட்வெளி.

## அன்பின் மகிழ்வு .... 1ஆம் பக்கத் தொடர்

'குடும்பத்தில் அன்பு' என்ற மையக் கருத்தைக் கொண்டுள்ள இம்மடல் 200 பக்கங்களையும் ஒன்பதுக்கு மேற்பட்ட பிரிவுகளையும், 325 பந்திகளையும் உள்ளடக்கியுள்ளது. இம்மடலை, உலக ஆயர்கள் மாமன்றப் பொதுச் செயலர் கர்தினால் லொரெண்சோ பால்திச்சேரி மற்றும் வியன்னா கர்தினால் கிறிஸ்ரோவ் ஸ்கோன்போர்ன் (Christoph Schonborn) ஆகிய இருவரும் பத்திரிகையாளர் கூட்டத்தில் கடந்த ஏப்ரல் 8ஆம் திகதி அன்று வெளியிட்டனர். குடும்பம் பற்றிய 2014, 2015ம் ஆண்டு மாமன்றங்களில் முக்கிய உறுப்பினராக இயங்கியவர் கர்தினால் ஸ்கோன்போர்ன்.

முன்னுரை (1-7) "இறைவார்த்தையின் ஒளியில்" (8-30), "குடும்பங்களின் அனுபவங்களும், சவால்களும்" (31-57), "குடும்பத்தின் அழைப்பு" (58-88), "திருமணத்தில் அன்பு" (89-164), அன்பைப் பலனுள்ளதாக ஆக்குதல்". (165 – 198), "சில மேய்ப்புப்பணி கூறுகள்" (199 – 258), "குழந்தைகளுக்குச் சிறந்த கல்வியை நோக்கி" (259-290), "பலவீனமான நேரங்களில் வழிநடத்தி, தேர்ந்து தெளிதல்" (191-313), "திருமணம் மற்றும் குடும்பத்தின் ஆன்மீகம்" (313-325) ஆகிய தலைப்புகளில், ஒன்பதுக்கு மேற்பட்ட பிரிவுகளாக இம்மடல் வழங்கப்பட்டுள்ளது.

குடும்பங்கள் பற்றிய தெளிவான புரிதல் அவசியம் என்றுரைக்கும் திருத்தந்தையின் "அன்பின் மகிழ்வு" மடல், தனிநபர்களுக்குத் தேவைப்படும், தனிப்பட்ட மற்றும் மேய்ப்புப்பணி சார்ந்த அக்கறை குறித்தும் கவனம் செலுத்தியுள்ளது.

## பறப்பாங்கண்டல்..... 6ஆம் பக்கத் தொடர்

புனிதவார வழிபாடுகளில் இக்கோவிலின் மகாசபை நிர்வாகத்தினரும் பங்காளர்களும் ஆர்வமுடன் வந்து கலந்துகொண்டனர். மகாசபையினரின் இசைவுடன், பறப்பாங்கண்டல் பங்கிலுள்ள அனைத்து ஆலய மக்களும் வழிபாட்டுச் செயற்பாடுகளில் மனமொன்றி ஈடுபட்டனர். பெரிய வெள்ளியன்று திருப்பாடுகளின் காட்சி காண்பிக்கப்பட்டது. தொடர்ந்து ஒப்பாரி, புலம்பல், தாழிசை என்பவற்றுடன் இயேசுவின் திருவுடல் அடக்கத்தின் அடையாளமான ஆசந்திப் பவனி இடம்பெற்றது. இது பலருக்கு புதிய பங்குபற்றல். அருட்சிமிக்க இந்நிகழ்வுகள் பலரிடம் புத்துணர்வையும், மனமாற்றத்தையும், ஆன்மீக மறுமலர்ச்சியையும் அரும்பவைத்தது. மேலும் மாதோட்டக் கத்தோலிக்கரிடம் விளங்கிய தொடக்ககால இறைமக்களின் வாழ்வையொட்டிய அன்பிய வாழ்வு, மீண்டும் தழைத்து வருவதை இத்தரணிக்கு எடுத்துக்காட்டியது.

இவை அனைத்தும் ஏற்றமுடன் நிகழ்வதற்கு இறைவனின் கருவியாகத் தொண்டாற்றியவர் எம்மினிய பங்குத்தந்தை அருட்பணி கொட்வின் கமிலஸ் (சனா) தி.ப. ஆவர். இனிவரும் நாட்களில் இக்கோவில் சார்ந்த எல்லோரும் எம்பங்கு மக்களும் ஒன்றிணைந்து தமக்குள்ள பொறுப்புக்களில் இன்னும் அதிகமாக ஈடுபாடு காட்டும் உந்துதலை இத்திருநிகழ்வு உருவாக்கியுள்ளது. இந்தநிலை இக்கோவிலின் ஏற்றத்திற்கும் நாட்டின் எல்லாப்பாக மக்களின் வருகைக்கும் அருட்பயன்களைப் பெற்றுக்கொள்வதற்கும் வழிவகுக்க வேண்டும். இதுவே எமது ஆவலும் வேண்டுதலும் ஆகும்.

## பம்பைமடுவில் புதிய ஆலய ........ 1ஆம் பக்கத் தொடர்ச்சி

முதலில் விருந்தினர்கள் மங்கள இசையோடு வரவேற்று அழைத்துவரப்பட்டனர். பின்னர் ஆலய தலைவாயில் மந்திரிக்கப்பட்டு திறக்கப்பட்டு தொடந்து திருப்பீடம் அச்சிக்கப்பட்டு ஆயர் தலைமையில் திருவிழாத் திருப்பலி இடம்பெற்றது. அதனைத் தொடந்து திருச்சுருப பவனியும், ஆசீர்வாதமும், உபகாரிகளை கௌரவிக்கும் நிகழ்வும் இடம்பெற்றது.

இந்த இறைஇரக்க அரசர் ஆலயம் இலங்கையில் 4வது ஆலயமாகவும் வட மாகாணத்தில் முதலாவது பங்கு ஆலயமாகவும் பொலிவுபெற்று விளங்குகின்றமை மகிழ்ச்சிக்குரியதாகும்.

இங்கு வாரத்தில் வெள்ளிக்கிழமைகளில் இறையிரக்க செபமாலையும் திருப்பலியும் பிற்பகல் 3.00 மணிக்கு இடம்பெறும். இனிவரும் நாட்களில் முதல் வெள்ளி சிறப்பு நற்கருணை வழிபாடு கொழும்பில் உள்ள உயிர்த்த ஆண்டவர் செபக்குழுவினால் (Risen Lord Community) பிற்பகல் 5.00 மணிக்கு நடாத்தப்படும்.

இந்த இறைஇரக்க ஆண்டில் இறைவனின் இணையற்ற இரக்கத்தால் அனைவரும் தொடப்பட செபிக்கின்றோம். இயேசுவின் இரக்கத்தை மற்றவர்களோடு பகிர்ந்துகொள்ளும் இரக்கத்தின் தூதுவர்களாக மாறுவோம்.

தகவல் - அருட்திரு. யே. ஜெஸ்லி ஜெகானந்தன், பங்குத்தந்தை, பம்பைமடு.

## அருட்பணி. ச. யேசுதாஸ் .......... 11ஆம் பக்கத் தொடர்ச்சி

சவர்க்காரத்திற்குப் பதிலாக
பனங்களியில் சீருடையைக் கழுவி காயவைத்தபோது
மாடு சப்பிக் கிழித்த பரிதாபம் ...
விபரீதம் தெரியாமல்/ விடுதலைப்போராட்டத்தையே
விளையாட்டாக விளையாடியது ...
நல்ல காலம்/ எங்களது விளையாட்டைப்போலவே
விடுதலைப்போராட்டமும்/ முடிந்துபோனது.

தனது இடப்பெயர்வின் அனுபவத்தைச் சொல்லிவந்த கவிஞர் இறுதியாக விடுதலைப்போராட்டத்தின் முடிவைச்சொல்லி முடிக்கும்போது மனதில் ஓர் நெருடல் ஏற்படவே செய்கின்றது.

இதுபோன்று பல கவிதைகள் அர்த்தமும், ஆழமும் கொண்டதாக இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. அவை உணர்வுபூர்வமாகவும், சமுதாயத்திற்கு செய்தி சொல்வனவாகவும் உள்ளன. எல்லாக் கவிதைகளையும் எடுத்துக்காட்டி விளக்கவிரும்பினாலும் இக்கருத்துரையின் விரிவஞ்சி அதைத் தவிர்த்துக்கொள்கிறேன்.

### நிறைவாக

தரமான கவிதை ஒவ்வொன்றிற்கும் சிறந்தபண்பும் பயனும் இருக்கும். அதன் அடிப்படையில் கவிதையானது படைப்போனுக்கும் நயப்போனுக்கும் அல்லது படிப்போனுக்கும் கேட்போனுக்கும் இன்பத்தையும் உணர்வினையும் கொடுப்பதாக இருத்தல் வேண்டும். அப்போதுதான் கவிதையின் பெறுமானம் சரியாக உணரப்படும்.

கவிதைகளுக்கு முக்கியமானது உணர்வுகள். கவிதைகளினூடாக நாம் வெளிப்படுத்தும் உணர்வுகளால் ஒரு வாசகன் எந்தளவிற்கு பாதிப்புக்குள்ளாகிறான் என்பதில்தான் கவிஞனின் வெற்றி தங்கியுள்ளது. அந்த வகையில் இக்கவிஞர் தனது கவிதையாக்க முயற்சியில் குறிப்பிடத்தக்க வெற்றிபெற்றுள்ளார் எனலாம். இக்கவிதைத் தொகுப்பு நிச்சயமாக தமிழ்க் கவிதை உலகில் பேசப்படும் என நம்பலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்காத நினைவுகள்

## 03ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 13 07 1942

உதிர்வு 22 05 2013



### திரு. செபமாலை வேதநாயகம்

(ஆவணம், நானாட்டான்)

*"ஆண்டவரின் இல்லத்தில்*
*நான் நெடுநாள் வாழ்ந்திருப்பேன்"*

அன்பெனும் மூன்றெழுத்தில் உம் பண்பைக் கண்டோம்!
ஆண்டுகள் மூன்றானதையா நீர் ஆண்டவர் அடிசென்று
பண்பின் பிறப்பிடமாய், பாசத்தின் உறைவிடமாய்
நீர் வாழ்ந்த நாட்களை எம்மால் மறக்க முடியாதையா!

மண்ணுலகில் வாழ்ந்த நாட்களில் - உம்
மகிமை புரியவில்லை எமக்கு - நீர்
விண்ணுலகம் சென்றபின்தான் - உம்
புனிதம் புரிந்தது எமக்கு!

குடும்பத்தின் குலவிளக்காய் - எம்
கோவிலின் ஒளி விளக்காய் நீர் வாழ்ந்த நாட்கள்
எம் நெஞ்சைவிட்டு நீங்காதையா!
உம் ஆன்மா அன்னையின் மடியில் அமைதிகொள்ள
அனுதினமும் ஆண்டவரை அன்போடு பணிகின்றோம்!

பிரிவால் நினைந்துருகும்: அன்பு மனைவி அருளம்மா, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளை.

## 1ம் ஆண்டு, 22ம் ஆண்டு நினைவஞ்சலி





திரு. அ. செபமாலை — திருமதி. செ. மரியை திரவியம்

(பாலையடிப் புதுக்குளம், வட்டக்கண்டல்)

மலர்வு : 25 - 08 - 1942
உதிர்வு : 19 - 03 - 2015

மலர்வு : 04 - 02 - 1948
உதிர்வு : 14 - 05 - 1994

"உயிர்ப்பும் உயிரும் நானே. என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்"

உடலால் எம்மைப் பிரிந்தாலும்
உள்ளத்தாலும் உணர்வுகளாலும்
என்றுமே எம்முடன் வாழ்கிறீர்கள்.
கண்களில் கண்ணீர் முத்துக்களுடன்
கலங்கி நிற்கின்றோம்.
இறைவனின் அமைதியில் என்றும் இழைப்பாற
இனிதாய் இறைவனை வேண்டுகின்றோம்.

*பிரிவால் துயருறும்:*
*பிள்ளைகள், மருமகள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள் மற்றும் உற்றார் உறவினர்கள்.*

*தகவல்: மகன் தீபன், மருமகள் சகுந்தலா*



## தயவுசெய்து அவதானியுங்கள்

நீத்தார் நினைவுகள், திருமண யூபிலி, பிறந்தநாள் நினைவுகள் போன்றவற்றைப் பிரசுரிக்க விரும்புகின்றவர்கள் எந்த மாதத்தில் இந்த நினைவுகள் பிரசுரிக்கப்படவேண்டுமோ அந்த மாதத்திற்கு முதல் மாதம் 10ம் திகதிக்கு முன்னர் அனைத்து விபரங்களையும் எம்மிடம் ஒப்படைக்க வேண்டும் என்பதை அன்போடு நினைவுபடுத்துகின்றோம்.

**கட்டணம் :**
கறுப்பு வெள்ளை 4,500/=,
கலர் 7,500/=

## ஆக்கங்களை எதிர்பார்க்கின்றோம்

காலத்திற்குப் பொருத்தமான ஆக்கங்களை சுருக்கமாகவும், இறுக்கமாகவும் மன்னாவுக்கு எழுதி அனுப்புங்கள். தரம் கண்டு பிரசுரிப்போம். *- மன்னா நிர்வாகம் -*

### மன்னாவுக்கு பணம் அனுப்பும் விபரம்

வங்கியின் பெயர் : Hatton National Bank Ltd, Mannar
பணம் பெறுபவர் பெயர் : The Editor, MANNA
வங்கிக் கணக்கு இலக்கம் : S/A No. 020020029782


## மன்னா விநியோகஸ்தர்களே!

உங்கள் கைகளுக்குக் கிடைக்கும் மன்னாவை
காலம் தாமதிக்காமல் உடனடியாக விநியோகிங்கள்!

- மன்னா நிர்வாகம் -

# 'மமோ' என்னும் மனிதநேயப் பணியாளரின் நினைவுகள்

ஆக்கம் : எஸ். றூபன் பீரீஸ், வங்காலை



மலர்வு : 17 - 07 - 1955
உதிர்வு : 10 - 05 - 2010

இது ஒரு மனிதநேயப் பணியாளனின் கதை! நம் மண்ணில் புதையுண்டுகிடந்த கண்ணிவெடிகளை அகற்றும் பணியில் ஈடுபட்டிருந்தவேளை மரணத்தைத் தழுவிய ஒரு மகத்தான மனிதனின் கதை!

'மமோ'! என் ஐம்புலன்களையும் ஆளுகின்ற என் இனிய நண்பனாகவும், உயர்ந்த மனிதனாகவும் என் இதயம் தொட்டு நிற்கின்றார். உணர்வுகள் பொங்கிவரும் இவ்வேளையில் அவரைப்பற்றி எழுவது என்பது என்னால் முடிந்த காரியமல்ல. எப்படியாவது எழுதியே ஆக வேண்டும் என்பது எனது கடமை. ஏனென்றால் நான் அவரோடு பணி செய்த ஓராண்டு காலங்களில் அவர் எம் மண்ணில் செய்த அளப்பெரிய சேவை என்னவென்று அறிந்திருக்கின்றேன். அத்தனையும் அவரின் மரணத்தோடு மௌனமாக மறைந்துவிடக்கூடாது என்று எண்ணித்தான் எம் மக்களின் மனக்கண்முன் கொண்டுவர ஆசைப்பட்டு 'மன்னா' பத்திரிகையினூடாக இதனை எழுதுகின்றேன்.

'மமோ' என்னும் மாமனிதனின் 6ஆம் ஆண்டு நினைவில்
ஆறாத வடுக்களாய் அவனின் எண்ணங்களை
என் இதயமதில் சுமந்து தொடுக்கின்றேன் 'பா' மாலை
மலர்களால் அல்ல என் மனங்களால்!

மனிதநேயப் பணிக்காய் தன் வாழ்வை அர்ப்பணித்தவர் 'மமோ'. பிரான்ஸ் நாட்டில் பிறந்த இவர் 'டொமினிக்கியு மொரின்' (மமோ) Dominique Morin (Mamo) என்னும் பெயர்கொண்டு அழைக்கப்பட்டார்.

அமைதியான நாட்டில் பிறந்ததனால் மிகவும் அமைதியான சுபாவம் கொண்டவராக விளங்கினார். தனது இளம் பிராயத்தை தாயோடும் தந்தையோடும் செலவளித்தார்.

### *கல்வி*

'மமோ' தனது ஆரம்பக் கல்வியை தன் ஊரிலுள்ள பாடசாலை ஒன்றில் பயின்றார். இவர் பாடசாலைக் கல்வியில் மட்டுமின்றி நுண்ணறிவு, கலை, விளையாட்டு போன்றவற்றிலும் சிறந்து விளங்கினார்.

தனது ஆரம்பக்கல்வியை முடித்துக்கொண்ட 'மமோ' தனது பட்டப்படிப்பினை இராணுவப் பயிற்சிக்கல்லூரி ஒன்றில் தொடர்ந்தார். இராணுவப் பயிற்சிக் கல்லூரியிலே பட்டப்படிப்பினைத் தொடர்ந்தவர் ஒரு பட்டதாரியாக மட்டும் வெளியேறாமல் அவரின் திறமைகளால் சிறந்த இராணுவ வீரனாகவும் வெளியேறினார்.

### *சிறப்புத் தேர்ச்சி*

நீரினுள் ஆழகுழியோடியாகவும், கண்ணிவெடிகளை இனங்கண்டு அவற்றைச் செயலிழக்கவைக்கும் பிரிவிலும், அதிசக்தி வாய்ந்த வெடிமருந்துகளை இனங்கண்டு, அவற்றைச் செயலிழக்க வைக்கும் பொறிமுறைகளில் சிறப்புத் தேர்ச்சி பெற்று அதன் ஆலோசகராகவும் 'மமோ' விளங்கினார்.

### *சமூகப்பணி*

இவ்வாறு பல்துறை சிறப்புத் தேர்ச்சிபெற்றவராக விளங்கிய 'மமோ' மக்களுக்காக சமூகப் பணிசெய்ய வேண்டும் என எண்ணி 1995ஆம் ஆண்டு உலக கண்ணிவெடி அமைப்பில் தன்னை இணைத்துக்கொண்டார். ஆப்கானிஸ்தான், பர்மா, நேபாளம், சூடான், யோர்தான் போன்ற நாடுகளில் மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்தார். அவ்வேளை இலங்கைத்தீவிலும் கண்ணிவெடிகளும், வெடிமருந்துகளும் புதைக்கப்பட்டிருப்பதை அறிந்துகொண்ட 'மமோ' உலக கண்ணிவெடி அமைப்பான FSD என்ற கண்ணிவெடி அமைப்போடு சேர்ந்து 2005ஆம் ஆண்டு இலங்கையில் கால்தடம் பதித்தார்.

இலங்கையில் கால்பதித்தவர் இலங்கையில் புதைக்கப்பட்ட கண்ணிவெடிகளையும், வெடிக்காத வெடிமருந்துகளையும் கண்டு ஒரு கணம் திகைத்து நின்றார். எமது மக்கள் மீள்குடியேற முடியாமல் அகதி முகாம்களில் படும் அவலம்கண்டு அவர்களை துரிதமாக மீள்குடியேற்ற வேண்டும் என எண்ணி பல நூற்றுக்கணக்கான கண்ணிவெடிப் பணியாளர்களை இணைத்து அவர்களுக்கான பயிற்சிகளை தானே முன்னின்று வழங்கியதோடு பெருமளவான பிரதேசங்களை மீட்ட பெருமையும் இவரையே சாரும். இவர் பணிபுரிந்த நாடுகளில் அதிக ஆண்டுகள் இலங்கைத் தீவிலேயே செலவிட்டமை குறிப்பிடத்தக்கது.

### *மமோவின் மரணம்*

கடந்த 2010ஆம் ஆண்டு மே மாதம் 10ஆம் திகதி அன்று காலை 9.00 மணியளவில் மன்னார் மாவட்டத்திலுள்ள காக்கையன் குளம் பிரதேசத்தில் மனிதநேயக் கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்தபோது ஏற்பட்ட வெடிப்பு சம்பவத்தில் 'மமோ' உயிரிழந்தார்.

இவரின் பணி வாழ்வும், மனித நேயமும் மகத்தானது. பணிக்காய் அயராது உழைக்கும் எண்ணம் கொண்ட இவரைவிட்டுப் பிரிய மனமின்றி தன்னோடே அணைத்துக்கொண்டது எம் மண்!

மமோ! பரிதவித்த எம் மக்கள் மனங்களில்
பாசத்தோடு வலைவிரிக்க
எம் தேசம் நோக்கி வந்தாயா?
மனித நேயம் கொண்டு எம் மக்களின்
மனத்துயரம் போக்க நினைத்தாயா?

காலை வருடி ஆளைக் கொல்லும்
கண்ணிவெடிகளுக்குள்
காலமின்றி நேரமின்றி களமிறங்கி
கண்ணிவெடி அகற்றி
கண்ணீர் துடைத்தவன் நீ
உன் செயல்கண்டு செயலிழந்துபோனது
எண்ணற்ற கண்ணிவெடிகள்.

வீடிழந்து விளைநிலமிழந்து
வீதியிலும் அகதி முகாம்களிலும்
தஞ்சம் என நின்றவர்களின்
நெஞ்சத்து குமுறல்களைப் போக்கி
ஒளிதந்த தீபமல்லவா நீ

ஆனால் ஒரு கண்ணிவெடி மட்டும்
தன் செயலிழக்க மறுத்து
உன்னைச் செயலிழக்க வைத்ததுவோ?
எம் நலனுக்காய்
உன்னைப் பலியாக்கி ஒளிதந்தவனே
நிலவின் ஒளிபட்டு எம் தேசம் ஒளிர்வதுபோல்
உன் முக ஒளிபட்டு எம் இல்லமும் உள்ளமும்
ஒளிர்கின்றது இன்று!

## மன்னா சந்தாதாரர் கவனத்திற்கு!

மன்னா பத்திரிகைக்கான சந்தாப் பணத்தை செலுத்தாதவர்கள் காலம் தாமதிக்காமல் உடனடியாக உங்கள் சந்தாவை செலுத்தி எம்மோடு ஒத்துழையுங்கள்.

உங்கள் மன்னா சந்தாக் காலம் முடிவடையும் திகதி உங்களுக்கு தபால் மூலம் அனுப்பப்படும் மன்னா பத்திரிகையில் உங்கள் விலாசத்திற்குக் கீழே உள்ளது. எனவே அதைப் பார்த்து உங்கள் சந்தாவைப் புதுப்பித்துக்கொள்ளுங்கள்.

சந்தாவைப் புதுப்பிக்காதவர்களுக்கு பத்திரிகை அனுப்புவதை நிறுத்திவிடவேண்டிய இக்கட்டான நிலையில் உள்ளோம் என்பதையும் மிகுந்த வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறோம்.

- மன்னா நிர்வாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னா

## 30ம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 06 05 1934

உதிர்வு 18 05 1986

## திருமதி. மொனிக்கா சூசையப்பு குரூஸ் (பேசாலை)

"உயிர்ப்பும் உயிரும் நானே. என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்" (அரு.11:25)

அழகான உருவம் நீ, அன்பான குணவதி நீ
அமைதிக்கு இலக்கணம் நீ, சூசைக்கு ஏற்ற பத்தினியும் நீ
நிறைந்த மனசு ததும்பும் மொனிக்கா அம்மா நீ
கால ஓட்டத்தில் கழிந்தன ஈர்பதினைந்தாண்டுகள்
இன்றும் மறையாமல் மனதோரம் பூக்கும் உன் நினைவு!
கண்ணுக்குள் எப்போதும் எம்மை வைத்திருந்தாய்.
அன்போடு எமைக்காத்து அறிவுரைகள் தந்தாய்
உரமூட்டி வளர்த்த உம் விழுதுகள் நாம்
தீராமல் அழுகின்றோம் மீண்டும் வந்த பிரிவை எண்ணி.
மீளாத்துயர் எம்மைத் தாக்கும் இவ்வேளையில்
அடிக்கடி உன் நினைப்பும் வந்து
வாட்டுதம்மா என்ன செய்வோம்?

மீண்டும் பிறப்புண்டேல்
நீயே எம் அம்மாவாக வேண்டும்.
இறைவன் பாதத்தில் நீ இருக்க என்றும்
பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் ஆன்மா இளைப்பாற்றிக்காக 18.05.2016 காலை 6.00 மணிக்கு பேசாலை புனித வெற்றி அன்னை ஆலயத்தில் இரங்கற் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

பிரிவால் நினைந்துருகும்:
அருமைப் பிள்ளைகள், அன்பு மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள், சகோதரங்கள், உற்றார் உறவினர்கள்.

## 31ம் நாள் நினைவஞ்சலி



மலர்வு 18 10 1955

உதிர்வு 25 03 2016

## திரு. சூசையப்பு சிப்பிரியான் லெம்பேட்

(மூர்வீதி, மன்னார்)

'தலையிழந்து போனதால்
நாம் நிலையிழந்து போனோம்
நின் இழப்பினால் ஏக்கமுற்று வாடுகிறோம்.
ஆர்ப்பரிப்பின்றி ஆரத்தழுவும் தந்தையே
அகத்தினில் எம்மைத் தவிக்கவிட்டு
அகன்றுபோன மாயமென்ன'?

இறைவனின் நிழலில் என்றும் நீர் இழைப்பாற
இனிதாய் வேண்டுகின்றோம், எமக்காய் மன்றாடும்.

பிரிவால் நினைந்துருகும்:
மனைவி, பிள்ளைகள்

தகவல்:- குடும்பத்தினர்.
310, மூர்வீதி, மன்னார்

## 02ம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 13 06 1941

உதிர்வு 28 04 2014

## திருமதி. அந்தோனிபிள்ளை செபமாலை.

(சீனிமணி) எழுத்தூர், மன்னார்

பாசத்தின் சிகரமாய் பண்பின் ஒளிவிளக்காய்
அன்பின் அவதாரமாய்
இத்தரணியில் விளங்கிய எம் தெய்வத் தாயே!
எங்களது வாழ்வில் அணையாத ஒளிவிளக்காய்
வெளிச்சம் தந்த தாயே!
நீர் எம்மைவிட்டுப் பிரிந்து ஈராண்டு
கடந்ததை எண்ணும்போது
எங்கள் நெஞ்சம் வெடிக்குதம்மா!
இன்முகம் மலர எல்லோரையும் அரவணைத்து
ஆதரிக்கும் உம் பண்பை
எத்தனை ஆண்டுகள் கடந்தாலும்
எப்படி மறப்போம் அம்மா!
எப்பொழுதும் இறைபணியில் திகழ்ந்து
பல நன்மைகள் செய்தீரே தாயே!
அமைதியாய் எம்மைவிட்டு பிரிந்ததேனோ தாயே!
உங்கள் ஆன்மா மரியன்னை மடியில் இளைப்பாறிட பிள்ளைகளாகிய நாங்கள் அனுதினமும் கையேந்தி பிரார்த்திக்கின்றோம் அம்மா.

பிரிவால் நினைந்துருகும்: கணவன், பிள்ளைகள், உறவினர்கள்.

## 40ம் நாள் நினைவஞ்சலி



மலர்வு 24 12 1963

உதிர்வு 30 03 2016

## திருமதி. சூசையப்பு அந்தோனிக்கம் குரூஸ்


(8ம் வட்டாரம், பேசாலை)

"ஆண்டவர் அளித்தார், ஆண்டவர் எடுத்துக்கொண்டார், ஆண்டவரது பெயர் போற்றப்பெறுக."

அன்பு அம்மா,
அரவணைத்துக் காத்த தாயே
பொறுமையின் சிகரமானவளே
பாசத்தை கற்றுத்தந்து உயிர்த்தவளே!
எளிமையான வாழ்வு உம் சிறப்பு
இதற்கே பெற்றீர் தனிசிறப்பு
எல்லோர் மனதிலும் இடம்பிடித்த தாயே!
பதறி நிற்கின்றோம் உம் இறப்பினால்
அன்பர் யேசுவின் அரவணைப்பில் இளைப்பாறுவீர்.
எமக்காய் மன்றாடும்.
உம் நினைவுகள் எம் வாழ்வில் என்றும் தொடரும்...

பிரிவால் நினைந்துருகும்: அன்புக் கணவன், பிள்ளைகள், மருமகன், தாய், சகோதரிகள், உற்றார் உறவினர்கள்.

# மரண அறிவித்தல்



மலர்வு 12 10 1928

உதிர்வு 02 05 2016

## திரு. இறபாயல் பிரான்சீஸ்

ஆண்டான்குளம், மன்னார், கனடா

மன்னார் விடத்தல்தீவைப் பிறப்பிடமாகவும் ஆண்டான்குளம், மன்னார், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட இறபாயல் பிரான்சீஸ் அவர்கள் கடந்த மே மாதம் 02ம் திகதி திங்கட்கிழமை கனடாவில் இறைவனடி சேர்ந்தார்.

இவர் திருமதி. யக்கோவா அவர்களின் அன்புக் கணவரும், எட்வேட் சேவியர், ஜெரால்ட் சேவியர், ஆன் பிலோமினா, பேனாட் சேவியர், வண. பிதா றெஜினோல்ட் சேவியர் (மறைக்கல்வி நிலையம் மன்னார்), காலஞ்சென்ற றொபேட் சேவியர் (வேணு), ஆன் மேரி, நோபேட் சேவியர் ஆகியோரின் அன்புத் தந்தையும், அனஸ்ராசியா, காலஞ்சென்றவர்களான இசபேல், திருச்செல்வம், மதலேனா, செல்வநாயகம், சிங்கராயப்பு ஆகியோரின் அன்புச் சகோதரரும் மரிய கிறிஸ்ரின், பிலோமினா, அடைக்கலமுத்து, எப்போமியா, மதுரநாயகம், மேரிமலர், றொபேட் சால்ஸ் ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார் ஆவர்.

அன்னாரின் நல்லடக்கம் ஒன்ராறியோ, கனடாவில் மே மாதம் 7ஆம் திகதி (7/5/2016) சனிக்கிழமை நடைபெற்றது.

அன்றைய தினம் அன்னாரின் ஆன்ம சாந்திக்காக மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் ஆயர் தலைமையில் குருக்கள் இணைந்து திருப்பலி ஒப்புக்கொடுத்தனர்.

இவரின் ஆன்ம சாந்திக்காக இறைவனை இறைஞ்சும்படி உறவினர் நண்பர்கள் நலன்விரும்பிகளை அன்புடன் வேண்டுகிறோம்.

தகவல்: குடும்பத்தினர், கனடா

இப்பத்திரிகை மன்னாரில் உள்ள மன்னா அலுவலகத்தில் வடிவமைக்கப்பட்டு கொழும்பு - நந்தா அச்சகத்தில் அச்சிடப்பட்டு மன்னா நிர்வாகத்தால் வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org